# புதிய ஜனநாயகம்

மார்ச் 2011
ரூ. 7.00



# கல்லுளிமங்கன்!

# “ஸ்பெக்ட்ரம் என்பது வெறும் ஊழல் மட்டுமில்லை; இது கார்ப்பரேட் முதலாளிகளின் பகற்கொள்ளை!”

## -கார்ப்பரேட் கொள்ளைக்கு எதிராகப் புரட்சிகர அமைப்புகளின் பிரச்சார இயக்கம்

‘‘ஸ்பெக்ட்ரம் என்பது வெறும் ஊழல் மட்டுமில்லை, இது கார்ப்பரேட் முதலாளிகளின் பகற்கொள்ளை! தனியார் மயமே இதன் ஆணிவேர், இதனைத் தகர்க்க நக்சல்பாரியாய் ஒன்றுசேர்! கார்ப்பரேட் கொள்ளைக்கு எதிராகக் கிளர்ந்தெழு வோம்! ஊழல் சொத்துக்களைப் பறித்தெடுத்து மக்களுக்குப் பங்கிடுவோம்!’’ என்ற முழக்கத்துடன் தமிழகம் மற்றும் புதுச் சேரியில் ம.க.இ.க; வி.வி.மு; பு.மா.இ.மு; பு.ஜ.தொ.மு;



பெ.வி.மு. ஆகிய புரட்சிகர அமைப்புகள் கடந்த ஜனவரியி லிருந்து கார்ப்பரேட் கொள்ளைக்கு எதிராகச் சூறாவளிப் பிரச்சார இயக்கத்தை நடத்தி வருகின்றன.

பல்லாயிரக்கணக்கில் துண்டுப் பிரசுரங்கள், 2-ஜி மற்றும் எஸ்-பேண்ட் அலைக்கற்றை ஊழல் கொள்ளையை விளக்கும் வெளியீடு, சுவரொட்டிகள், தட்டிகள், சுவரெழுத்து கள் ஆகியவை மட்டுமின்றி; டிராபிக் சிக்னல்கள், பேருந்துகள் -இரயில்கள், கடைவீதிகள், ஆலை வாயில்கள், சந்தைகள், அரசு அலுவலகங்கள், பள்ளி-கல்லூரிகள் மற்றும் விடுதி களில் பிரச்சாரம்; தெருமுனைக் கூட்டங்கள், விளக்கக் கூட் டங்கள், சைக்கிள் பேரணி பிரச்சாரம், ஆட்டோ பிரச்சாரம் - என பல்வேறு வடிவங்களில் பிரச்சாரத்தை நடத்தி வந்த இவ் வமைப்புகள், கடந்த ஜனவரி இறுதியிலிருந்து தொடர்ச் சியாக பொதுக்கூட்டங்களை நடத்தி வருகின்றன.

அலைக்கற்றை ஊழல்-கொள்ளையைத் தொடர்ந்து தற்போது எஸ்-பாண்ட் ஊழல் கொள்ளை அம்பலமாகியுள்ள தாலும், இன்றைய அரசியலமைப்பு முறை இத் தகைய கார்ப்பரேட் முதலாளி களின் பகற்கொள்ளைக்கான கருவிதான் என்பது முன்னெப் போதும் இல்லாத அளவுக்கு தெட்டத் தெளிவாக நிரூபண மாகியுள்ளதாலும், கார்ப்பரேட் கொள்ளைக்கு எதிரான இப் பிரச்சார இயக்கம் உழைக்கும் மக்களிடம் பெருத்த வர வேற்பைப் பெற்றுள்ளது. தமிழகம் மற்றும் புதுச்சேரியில் இலட்சக்கணக்கான மக்களிடம் இப்பிரச்சார இயக்கம் சென் றடைந்துள்ளது. கார்ப்பரேட் கொள்ளைக்கு எதிரான தமது வெறுப்பையும் ஆத்திரத்தையும் வெளிப்படுத்தும் உழைக் கும் மக்கள், இப்பிரச்சார இயக்கத்தின் நோக்கத்தை உணர்ந்து, தாராளமாக நன்கொடை அளித்து ஊக்கப்படுத்தி ஆதரித்துள்ள னர். பு.மா.இ.மு.வின் சில கிளைகள் நடத்திய விளக்கக் கூட்டங்களில் கலந்து கொண்ட மாணவர்களும் இளைஞர்களும் தாங்களே முன்வந்து பிரச்சாரப் பணி களில் ஈடுபட்டனர். இப்பிரச் சார இயக்கம் வீச்சாக நடப் பதைக் கண்டு பீதியடைந்த பார்ப்பன தினமலர் நாளேடு கடந்த 15.2.11 தேதியிட்ட கோவை பதிப்பில் ‘‘ஊழலைத் தண்டிக்க நக்சல் பாரி பாதை வேண்டும் - ஆவேச துண்டுப் பிரசுரம் வினியோகம்’’ என்று தலைப் பிட்டு, இதை வடிவமைப்பது யார் என்றோ, தொடர்புக்கான தகவலோ ஏதும் இதில் இல்லை என்று அவதூறு செய்தி வெளியிட்டது. உடனே ம.க.இ.க. கோவை மாவட்டச் செயலர் தோழர் மணிவண்ணன் தலைமையில் தோழர்கள் தினமலர் அலுவலகம் சென்று எச்ச ரித்ததும், 17.2.11 தேதியிட்ட தினமலரில் ‘‘தொடர்பு முகவரி மற்றும் தொலைபேசி எண்களுடன் வினியோகிப்படும் இப் பிரசுரம் மக்களிடம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளதாக’’ செய்தி வெளியிட்டு மழுப்பியது.

கார்ப்பரேட் முதலாளிகள் கொள்ளையடித்த பொதுச் சொத் துக்களைப் பறிமுதல் செய்ய, உழைக்கும் மக்கள் ஓரணியில் திரண்டு போராட வேண்டிய அவசியத்தை விளக்கி 30.1.2011

தொடர்ச்சி 35-ஆம் பக்கம்



# கல்லுளிமங்கன்!

இந்தியத் தரகுமுதலாளி வர்க்கத்தின் பிரதிநிதியும், அமெரிக்காவின் வளர்ப்புப் பிராணியுமான திருவாளர் மன்மோகன் சிங், தான் ஒரு கைதேர்ந்த கிரிமினல் என்பதையும், கழுத்தை அறுத்தாலும் உண்மையைக் கசியவிடாத கல்லுளிமங்கன் என்பதையும் அண்மையில் தொலைக்காட்சி சேனல்களின் ஆசிரியர்களுக்கு அளித்த பேட்டியின் மூலம் மீண்டும் நிரூபித்துள்ளார். தனியார்மய - தாராளமயக் கொள்கையை ஆதரித்து நிற்கும் தொலைக்காட்சி சேனல்களின் ஆசிரியர்கள் தங்களால் இயன்ற அளவுக்கு மொன்னையான கேள்விகளைக் கேட்க, ''2-ஜி அலைக்கற்றை ஊழல் விவகாரத்தில் தனக்கு எவ்விதத் தொடர்புமில்லை'' என்று கூசாமல் புளுகியிருக்கிறார், மன்மோகன் சிங்.

அலைக்கற்றை என்ற பொதுச்சொத்தை கார்ப்பரேட் முதலாளிகள் சூறையாடுவதற்குத் துணைநின்ற ஒரு நபர், அலைக்கற்றையை மட்டுமன்றி, நாட்டின் இயற்கை வளங்கள், பொதுத்துறை நிறுவனங்கள் உள்ளிட்ட எல்லாச் சொத்துக்களையும் கார்ப்பரேட் கொள்ளையர்கள் அள்ளிச்செல்வதற்கு ஏற்ற தனியார்மயக் கொள்கைகளை வகுத்துத் தந்த ஒரு அடிக்கொள்ளி, கூட்டணி நிர்ப்பந்தம் காரணமாகத்தான் இந்த ஊழலே நடந்துவிட்டது போலச் சித்தரித்து, முன்னாள் அமைச்சர் ராசா மீதும் தி.மு.க. வின் மீதும் பழியைப் போடுகிறார். காமன்வெல்த் ஊழல், ஆதர்ஷ் ஊழல் உள்ளிட்ட ஊழல்களில் காங்கிரசு கட்சி மட்டுமே நேரடியாக சம்மந்தப்பட்டிருக்கிறது என்பது உலகறிந்த உண்மை. பிரதமரின் நேரடிப் பொறுப்பிலுள்ள விண்வெளித் துறையில் தான் எஸ்-பேண்ட் ஊழல் - கொள்ளை நடந்துள்ளது. ஆனாலும், தனக்கோ பிரதமர் அலுவலகத்துக்கோ இவற்றில் எவ்விதத் தொடர்பும் இல்லை என்பது போல நாடகமாடுகிறார், இந்த யோக்கிய சிகாமணி.

ஊழல்கள் விசயத்தில் மழுப்பலாகப் பேசும் மன்மோகன் சிங், கார்ப்பரேட் முதலாளி வர்க்கத்தின் கொள்ளையடிக்கும் உரிமை தொடர்பான கேள்விகள் வரும் போது மட்டும் சீறிப்பாய்ந்து வாதாடுகிறார். அலைக்கற்றை உரிமத்தை மட்டுமே தமது மூலதனமாக வைத்திருந்த உப்புமா கம்பெனிகள், தமது பங்குகளைக் கைமாற்றி பல்லாயிரம் கோடிகளைச் சுருட்டியதில் தவறொன்றுமில்லை என்று அப் பகற்கொள்ளையை நியாயப்படுத்துகிறார். அலைக்கற்றை ஒதுக்கீட்டில் கார்ப்பரேட் முதலாளிகளுக்கு காங்கிரசு அரசு வழங்கியிருக்கும் 1,76,000 கோடி 'மானியத்தை', விவசாயம், கல்வி, சுகாதாரம் மற்றும் ஏழைகளுக்கான உணவுப் பொருட்களுக்கு அளிக்கப்படும் மானியத்துடன் ஒப்பிட்டு, ஏழைகளுக்கு மானியம் அளிப்பதும் கார்ப்பரேட் முதலாளிகளுக்குப் பொதுச்சொத்தைத் தாரைவார்ப்பதும் ஒன்றுதான் என்று திமிராகக் கூறுகிறார். விலைவாசி உயர்வைத் தடுப்பது என்ற பெயரில் முதலாளிகளின் கொள்ளையையும் ஊக வணிகச் சூதாட்டத்தையும் கட்டுப்படுத்தக் கூடாது என்று அறிவிக்கிறார்.

உலக வங்கி அதிகாரியாக வேலை செய்த மன்மோகன் சிங் அமெரிக்காவின் செல்லப் பிராணி என்பதால், துக்ளக் சோ, சு.சாமி, பா.ஜ.க. உள்ளிட்ட எதிர்த்தரப்பு இந்துத்துவ பரிவாரங்கள், அவர் திறமையானவர், நேர்மையானவர் என்றும், அவர் அதிகாரமில்லாத பொம்மையாக்கப்பட்டுள்ளார், அவரது கைகள் கட்டப்பட்டுள்ளன என்றும் பக்கவாட்டில் நின்று சாமரம் வீசுகின்றன. தனியாரமயக் கொள்கையைப் பெற்றெடுத்த தவப்புதல்வன் என்பதால் முதலாளித்துவ ஊடகங்கள், ''ஊழல் என்றால் என்ன என்றே அறியாத அவர், தன்னைச் சுற்றி இத்தனை ஊழல்களா என்ற அதிர்ச்சியில் ஊமையாகிவிட்டார்'' என்றெல்லாம் இக்கல்லுளிமங்கனுக்கு ஒளிவட்டம் போடுகின்றன.

ஆனால், 1994-இல் நாட்டுக்கும் நாடாளுமன்றத்துக்கும் தெரியாமலேயே ''காட்'' ஒப்பந்தத்தில் நாட்டைச் சிக்க வைத்தவர்தான் இந்தக் கல்லுளிமங்கன். அதே போல, 2005-இல் அமெரிக்காவுக்குப் போன மன்மோகன் சிங், அமெரிக்காவுடனான இராணுவ, அணுசக்தி ஒப்பந்தங்களில் கள்ளத்தனமாகக் கையெழுத்திட்டு, இந்தியாவை அமெரிக்கப் போர்ச்சக்கரத்தில் தப்பிக்க முடியாதபடி பிணைத்துக் கட்டினார். ''ஹைட் சட்டமா, கேள்விப்பட்டதே இல்லையே!'' என்று நாடாளுமன்றத்தில் புளுகினார். பின்னர் உண்மை அம்பலமாகி மன்மோகன் சிங் கோட்டு சூட்டு போட்ட நாலாந்தர போர்ஜரி பேர்வழி என்பது சிரிப்பாய்ச் சிரித்த போதும், அவர் வாய்திறக்கவில்லை.

தற்போதைய இந்த பேட்டியின் முடிவில், ''உலக அரங்கில் இந்தியாவை ஊழல் நாடாகச் சித்தரித்துக் களங்கப்படுத்தாதீர்கள்'' என்று ஊடகங்களிடம் வேண்டுகோள் விடுத்திருக்கிறார் பிரதமர். அடுக்கடுக்கான ஊழல்களால் அம்பலப்பட்டு நாறிப் போய், ஊழலுக்குத் தன்னிலை விளக்கம் கொடுப்பதற்காகவே ஏற்பாடு செய்த பேட்டியின் முடிவில், பிரதமர் கல்லுளிமங்கன் உதிர்த்த முத்திரை வாக்கியம் இது என்பதுதான் குரூர நகைச்சுவை. ●


புதிய ஜனநாயகம்

மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு

தொகுதி: 26 இதழ்: 5

மார்ச் 2011

உள்நாடு

தனிஇதழ்: ரூ. 7.00

ஆண்டுசந்தா: ரூ. 90.00

வெளிநாடுகள்

(வான் அஞ்சலில்)

ஆண்டு சந்தா: ரூ.750.00



தொடர்பு முகவரி:

புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.

தொலைபேசி: 94446 32561

# தனியார்மயம்... தாராளமயம்... ஊழல்மயம்!

**ஆ.ராசாவின் 2-ஜி அலைக்கற்றை ஊழல்-கொள்ளையை, மன்மோகன் சிங்கின் எஸ்-பேண்ட் ஊழல்-கொள்ளை விஞ்சிவிட்டது.**

ஸ்பெக்ட்ரம் ஊழலில் டாடாவும், அம்பானியும் அடித்த இமாலயக் கொள்ளை அம்பலமாகி, இன்னும் அதன் முதல்நிலை விசாரணைகூட முடியவில்லை, அதற்குள் ஸ்பெக்ட்ரம் ஊழலையே விஞ்சிடும் எஸ்-பேண்ட் ஊழல் அம்பலமாகியிருக்கிறது.

இந்திய விண்வெளி ஆராய்ச்சிக் கழகத்தின் (இஸ்ரோ) வர்த்தகப் பிரிவான ஆன்ட்ரிக்ஸ் நிறுவனம், பெங்களூருவை மையமாகக் கொண்ட தேவாஸ் மல்ட்டிமீடியா எனும் தனியார் நிறுவனத்துக்கு எஸ்-பேண்டு அலைக்கற்றைகளை ஏலம் ஏதுமின்றி அடி மாட்டு விலைக்கு விற்க 2005-ஆம் ஆண்டு ஜனவரியில் செய்துகொண்ட மோசடியான இரகசிய ஒப்பந்தமே எஸ்-பேண்ட் ஊழல்.

இவ்வொப்பந்தம் 2 இலட்சம் கோடி ரூபாய் அளவிற்கு இஸ்ரோவிற்கு இழப்பை ஏற்படுத்தியுள்ளதாக மதிப்பிட்ட மத்திய தணிக்கைக் குழுவின் அறிக்கையை இந்து நாளேட்டுக் குழுமம் வெளிச்சத்துக்குக் கொண்டு வந்தது. இந்த தேவாஸ் நிறுவனத்தைத் தொடங்கியவர்கள் வேறு யாவருமல்ல; இஸ்ரோவின் முன்னாள் அதிகாரியான டாக்டர் எம்.ஜி.சந்திரசேகரும் அவரது கூட்டாளிகளும்தான்.

இவ்வொப்பந்தப்படி, தேவாஸ் நிறுவனத்துக்காக ஜிசாட் 6, ஜிசாட் 6ஏ ஆகிய இரண்டு செயற்கைக்கோள்களை இஸ்ரோ விண்ணில் ஏவும். இக்கோள்களில் பொருத்தப்பட்டு இருக்கும் ''டிரான்ஸ்பாண்டர்''களில் 90 சதவீதத்தை தேவாஸ் நிறுவனம் பயன்படுத்திக் கொள்ளும். இவ்வொப்பந்தப்படி, இச்செயற்கைக்கோள்களை அனுப்புவதற்கு ரூ.174 கோடியை தேவாஸ் நிறுவனம் இஸ்ரோவிற்குத் தரும். விண்ணில் செயற்கைக்கோள் செலுத்தப்பட்டுப் பயன்பாட்டுக்கு வந்த பின்னர், அலைக்கற்றை வாடகையாக ரூ.1150 கோடியை இந்நிறுவனம் இஸ்ரோவுக்கு வழங்கும். அதாவது, இஸ்ரோ கட்டமைத்து ஏவும் செயற்கைக் கோள்களின் அலைக்கற்றையில் 70 மெகாஹெர்ட்ஸ் அலைக்கற்றையை தேவாஸ் பயன்படுத்திக் கொள்ள, அது தரும் வாடகை வெறுமனே ரூ.1150 கோடிதான். ஆனால் இதே எஸ்-பேண்டின் 15 மெகா ஹெர்ட்ஸ் அலைக்கற்றையை 2008-இல் இந்திய அரசு, பி.எஸ்.என்.எல். மற்றும் எம்.டி.என்.எல். ஆகியவற்றுக்கு ரூ.67,719 கோடிக்கு ஏலம் விட்டுள்ளது. இதிலிருந்தே இவ்வொப்பந்தத்தின் மோசடித்தனத்தையும், ஊழலின் பிரம்மாண்டத்தையும் புரிந்து கொள்ளலாம்.

இந்த அலைக்கற்றைகளைப் பயன்படுத்தி இந்தியா முழுக்க ஒரே நேரத்தில் நேரடி டிவி நிகழ்ச்சிகளையும், தரைவழிக் கம்பித் தடம் மூலம் செல்போன், தொலைபேசி, இன்டர்நெட் சேவைகளையும் வழங்கிட முடியும். இந்த ஒப்பந்தம் முழுமையாகச் செயல்பாட்டிற்கு வரும்போது, இத்துறையில் ஏகபோகமாகக் கோலோச்சப்போகும் தேவாஸ், அடுத்த 20 ஆண்டுகளுக்குள் அடையப் போகும் இலாபம் பல இலட்சம் கோடிகளாக இருக்கும்.

எஸ்-பேண்ட் ஒதுக்கீட்டில் நடந்த ஊழலைப் பூசி மெழுகிப் பத்திரிக்கைகளுக்கு பேட்டி அளிக்கும் ''இஸ்ரோ''-வின் தலைவர் கே.ராதாகிருஷ்ணன்.



செயற்கைக் கோள்களை ஏவுவதில் இஸ்ரோ தாமதம் செய்தால், தேவாஸ் நிறுவனத்திற்கு இழப்பீடு தரவேண்டும் என ஒப்பந்தம் சொல்வதால், ஏரியன்ஸ்பேஸ் எனும் ஐரோப்பிய நிறுவனம் மூலம் ரூ.2400 கோடி செலவில் செயற்கைக் கோளை ஏவ இஸ்ரோ முயல்கிறது. ஆனால், இஸ்ரோவே இச்செயற்கைக்கோள்களை ஏவினால், அதற்குச் சில -று கோடிகள் மட்டுமே செலவாகும்.

அடிமாட்டு விலைக்கு அலைக் கற்றைகளை வாங்க ஒப்பந்தம் போட்ட

பின், தேவாஸ் நிறுவனம் தனது பங்குகளைக் கொள்ளை இலாபத்திற்கு விற்றுள்ளது. டாய்ச் டெலிகாம் எனும் ஜெர்மனி நிறுவனம் தேவாசின் பங்குகளில் 17 சதவீதத்தை 76 மில்லியன் டாலர் கொடுத்து வாங்கியது. கொலம்பியா கேப்பிட்டல் மற்றும் டெலிகாம் வெஞ்சுரர்ஸ் ஆகியவையும் தேவாசின் பங்குகளைப் பல கோடிகள் கொடுத்து வாங்கியுள்ளன.

2-ஜி ஸ்பெக்ட்ரம் ஊழலை மூடிமறைக்க முடியாத அளவிற்கு தகவல்கள் வெளிவந்துவிட்ட பிறகும், அவ்வூழலைக் கூட்டணிக் கட்சியான தி.மு.க. செய்ததாகக் காட்டித் தப்பித்துவிட காங்கிரசு கும்பல் முயலுகிறது. ஆனால், பிரதமரின் நேரடிக் கட்டுப்பாட்டில் இருக்கும் விண்வெளித்துறையிலேயே வரலாறு காணாத ஊழல் நடந்திருந்தபோதிலும் அதுகுறித்து பேச மறுக்கிறார், பிரதமர் மன்மோகன் சிங். இவ்வூழல் குறித்துத் தினமும் ஒவ்வொரு பொய்யாகச் சொல்லி வருகிறது, விண்வெளித் துறை அமைச்சகம்.




பெங்களூருவில் அமைந்துள்ள தேவாஸ் மல்டிமீடியா நிறுவனத்தின் தலைமை அலுவலகம். (உள்படம்) அந்நிறுவனத்தின் தலைவரும், ''இஸ்ரோ''வின் முன்னாள் அறிவியல் செயலருமான எம்.ஜி.சந்திரசேகர்.

பிரதமருக்கு ஒப்பந்தம் பற்றி எதுவுமே தெரியாது என பிரதமர் அலுவலகம் புளுகியது; ஆனால், இவ்வொப்பந்தம் போடப்பட்டபோது விண்வெளித்துறை இணை அமைச்சராக இருந்த சவாண், அப்போதே ஒப்பந்தத்திற்கு எதிர்ப்பு வந்ததாகக் கூறியதும் இந்தப் புளுகு சந்தி சிரித்தது. ஒப்பந்தம் போடப்படுவதற்கு 2 வாரம் முன்பு வரை தேவாஸ் நிறுவனத் தலைவர் பிரதமர் அலுவலக அதிகாரிகளைப் பலமுறை சந்தித்துப் பேசியிருக்கிறார்.

இந்த ஒப்பந்தத்தால் அரசுக்கு ரூ.2 லட்சம் கோடி இழப்பு என்று மத்திய அரசின் தணிக்கைத்துறை சொன்னதும், பிரதமர் அலுவலகமோ ''இந்த ஒப்பந்தப்படி அலைக்கற்றை ஒதுக்கப்படுவது நடைமுறைக்கு இன்னும் வராததால், அரசுக்கு வருவாய் இழப்பேதும் இல்லை'' என்றது. இதுவும் ஓரிரு நாட்களில் பொய் என்பது தெரிந்து போனது. அதிகாரப்பூர்வமாக அலைக்கற்றை ஒதுக்கப்படும் முன்பே தேவாஸ் நிறுவனம் ஏற்கெனவே எஸ்-பேண்ட் அலைக்கற்றையைப் பெற்று, இந்திய ரயில்வேக்கு இண்டெர்நெட் சேவைகளை வழங்க சில முன்னோட்டங்களையும் செய்து காட்டி வருகிறது எனும் விசயமும் அம்பலமாகிவிட்டது.

**70 மெகாஹெர்ட்ஸ் அலைக்கற்றையை தேவாஸ் பயன்படுத்திக் கொள்ள, அது தரும் வாடகை வெறுமனே ரூ.1150 கோடிதான். ஆனால், இதே எஸ்-பேண்டின் 15 மெகா ஹெர்ட்ஸ் அலைக்கற்றையை 2008-இல் இந்திய அரசு, பி.எஸ்.என்.எல். மற்றும் எம்.டி.என்.எல். ஆகிய அரசு நிறுவனங்களுக்கு ரூ.67,719 கோடிக்கு ஏலம் விட்டுள்ளது.**

இவ்வாறு அடுத்தடுத்து அம்பலமான அரசு, இந்த ஊழல் குறித்து விசாரிக்க இருநபர் குழுவை அமைத்தது. அதில் ஒருவரான பி.கே.சதுர்வேதி, அமைச்சரவைச் செயலராக இருந்து இந்த ஒப்பந்தத்தை அனுமதித்தவர். திருட்டுக்குத் துணை நின்றவனிடமே திருட்டைப் பற்றி விசாரிக்கச் சொல்வதா என்ற கேள்விக்கு அமைச்சர் அம்பிகா சோனி ''தன் மீதான குற்றச்சாட்டை சதுர்வேதி மறுத்திருக்கிறார். தம்மால் வெளிப்படையான அறிக்கையைத் தர முடியும் என சதுர்வேதி கூறி இருக்கிறார்'' என்று 'விளக்கினார்!'

பின்னர் அவசர அவசரமாக ஒப்பந்தத்தை ஆய்வு செய்த விண்வெளி ஆணைய அதிகாரிகள், இரண்டு மணி நேரத்தில் தமது விவாதத்தை முடித்துக் கொண்டு, ''பாதுகாப்புக் காரணங்களுக்காக இந்த ஒப்பந்தம் ரத்து செய்யப்பட வேண்டும்'' என அறிவித்தனர். இதனை அடுத்து, ஒருவழியாக ஒப்பந்தம் ரத்து செய்யப்படுவதாக அறிவித்த மைய அரசு, ''அலைக்கற்றையின் தேவை அதிகமாக உள்ளது. இராணுவம், துணை ராணுவம், ரயில்வே துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளின் பயன்பாட்டுக்குத் தேவைப்படுகிறது. நாட்டின் தேவையைக் கருத்தில் கொண்டு ஆன்ட்ரிக்ஸ் உள்ளிட்ட பிற நிறுவனங்களுக்கு அலைக்கற்றைகளை ஒதுக்க இயலாது'' என்ற காரணத்தைக் கூறி, ஊழல் நடந்திருப்பதை மறைத்தது.

2-ஜி அலைக்கற்றை ஊழலை விடப் பெரிதான எஸ்-பேண்டு ஊழலைத் தனது அரசியல் இலாபத்திற்காகவேனும் மக்களிடம் அம்பலப்படுத்தி, 'திருவாளர் பரிசுத்தம்' மன்மோகன் சிங்கைத் தனிமைப்படுத்தும் வேலையைச் செய்யக்கூட எதிர்க்கட்சிகள் தயாராக இல்லை. அறிக்கைப் போரோடு நின்றுகொண்டன.

நாட்டின் வளம் சூறையாடப்பட்டதை விட, அது அரசாங்க ஒப்புதல் பெறப்படாததுதான் தவறு என பா.ஜ.க. கவலைப்பட்டது. பா.ஜ.க.வின் கவலைக்கும் காரணமிருக்கிறது. ஏனெனில், இந்த தேசத் துரோக ஒப்பந்தத்தின் ஆணிவேரே 2003-இல் வாஜ்பேயி காலத்தில் நடைபெற்ற ஆரம்பக் கட்டப் பேச்சுவார்த்தையில் உள்ளது.

‘‘ஒப்பந்தம் போடப்பட்ட காலத்தில் அமெரிக்காவின் பொருளாதாரத் தடைப்பட்டியலில் (பொக்ரான் அணுகுண்டு வெடிப்பை அடுத்து 1998-இல் அமெரிக்கா சில முக்கிய இந்திய நிறுவனங்கள் மீது பொருளாதாரத் தடை விதித்திருந்தது) இஸ்ரோவும் இருந்தது. அவ்வாறு இருக்க, அமெரிக்க மூலதனத்தைக் கணிசமாகப் பெற்றிருக்கும் தேவாஸ் நிறுவனத்துடன் இஸ்ரோ எப்படி ஒப்பந்தம் போட முடிந்தது? தேவாஸ் நிறுவனத்தின் முக்கிய ஆலோசகர்களாக அமெரிக்க அரசின் முன்னாள் வெளியுறவுச் செயலர் மெடலின் ஆல்பிரைட்டும், முன்னாள் பாதுகாப்பு ஆலோசகர் சான்டி பெர்கரும், அமெரிக்கத் தொழில் மற்றும் வர்த்தகச் சங்கத்தைச் சேர்ந்த தாமஸ் டோனோஹ் சீனியரும் இவ்வொப்பந்தத்தை நிறைவேற்ற இந்திய அரசுடன் தொடர்பு கொண்டிருந்தனர். இந்திய அரசின் கூடுதல் சொலிசிடர் ஜெனரலும் விண்வெளித்துறை கமிஷனும் இவ்வொப்பந்தத்தை ரத்து செய்யப் பரிந்துரைத்து 6 மாதமாகியும் அரசு ஏன் ஒப்பந்தத்தை மறுபரிசீலனை செய்ய முயன்றது?’’ என ‘மார்க்சிஸ்ட்’ கட்சி எழுப்பியிருக்கும் கேள்விகளுக்கு அரசு இன்னமும் பதிலேதும் சொல்லவில்லை.




இதுவரை வரலாறு காணாத ஊழல்கள் அம்பலமாகும்போதெல்லாம், அரசியல்வாதிகள் அனைவரும் ஊழல்பேர்வழிகள்தான், என்றும் நேர்மையான அதிகாரிகள் கையில் அதிகாரம் இருந்தால் ஊழல்களே இருக்காது என்றும் ஊடகங்களும் அதிகாரவர்க்கமும் தொடர்ச்சியான பிரச்சாரத்தை செய்துவந்தன. இந்த பாமரத்தனமான வாதம், எஸ்-பேண்ட் ஊழலில் கந்தலாகியுள்ளது.

பாதுகாப்பு அம்சங்களைக் காரணம் காட்டி இஸ்ரோவிற்கு ஒதுக்கப்படும் நிதியோ, அதன் செலவீனங்களோ தணிக்கை செய்யப்பட்டு நாடாளுமன்றத்தில் வைக்கப்படுவதில்லை. இதனால் அங்கு அதிகாரிகள் நடத்தி வரும் தேசத்துரோக ஊழல்கள் மூடிமறைக்கப்பட ஏராளமான வாய்ப்புகள் உள்ளன. இஸ்ரோவில் மட்டுமல்ல, பெரும்பாலான பொதுத்துறை நிறுவனங்களின் அதிகார வர்க்கமே பொதுச்சொத்தை சூறையாடி நாட்டையே திவாலாக்கிக் கொண்டுள்ளது. பெல், பி.எஸ்.என்.எல். போன்ற பொதுத்துறை நிறுவனங்களின் மேலதிகாரிகள் தங்கள் மனைவி அல்லது உறவினர் பெயரில் சிறுதொழில்கூடங்களை ஏற்படுத்திக் கொண்டு, இரகசிய ஒப்பந்தங்கள் மூலம் கொள்ளையடிப்பதும், பல நேரங்களில் பொதுத்துறைக்கு சொந்தமான மூலப்பொருட்களையும், எந்திரங்களையும் கடத்திச் செல்வதும், விருப்ப ஓய்வில் சென்று அதே பொதுத்துறைக்கே ஒப்பந்தக்காரராவதும் நடந்து கொண்டுதான் உள்ளது. டி.ஆர்.டி.ஓ. எனும் இராணுவ ஆய்வு நிறுவனமும் இதற்கு விதிவிலக்கல்ல. பதவியில் இருக்கும்போதே வர்த்தகத் தொடர்புகள் மூலம் பினாமி நிறுவனங்களை உருவாக்கி, அதற்கு ஒப்பந்தங்களை அளிப்பது முதல் விருப்ப ஓய்வில் போய் அதே வர்த்தகத் தொடர்புகளைத் தங்கள் நிறுவனங்களுக்கு மடைமாற்றிக் கொள்வதும் டி.ஆர்.டி.ஓ. விலும் நடந்து வருகின்றன.

மத்திய அரசின் பட்ஜெட்டில் பாதுகாப்புத் துறைக்கு அடுத்தபடி அதிகமாக நிதி ஒதுக்கப்படுவது விண்வெளி ஆய்வுக்குத்தான். இந்த அதிகபட்ச நிதி ஆதாரங்களை வைத்துக் கொண்டு மீன் வளங்களைக் கண்டறிந்து இந்திய மீனவர்களுக்கு உதவி இருக்க முடியும். சுனாமி, கடற்சீற்றம் போன்ற இயற்கைப் பேரிடர்களைக் கண்டறிந்து மக்கள் உயிரைக் காத்திருக்க முடியும். ஆனால், மக்களின் பணத்தைத் தின்று கொழுத்த இந்திய விண்வெளி ஆய்வுத் துறை அதிகார வர்க்கமோ, பெப்சி, கோக் போன்ற பன்னாட்டு நிறுவனங்களுக்கு நாட்டின் நிலத்தடி நீர் ஆதாரங்களைக் காட்டிக் கொடுத்தும், விலை மதிப்பிட முடியாத அலைக்கற்றைகளை அடிமாட்டு விலைக்கு அந்நியர்கள் பயன்படுத்திக் கொள்ளையடிக்கத் துணையாக நின்றும் ‘சேவை’ செய்துள்ளது. இந்தச் சேவையைச் செய்திட இவர்களுக்கு உதவியிருப்பது தனியார்மயம், தாராளமயக் கொள்கையே!

• அழகு

# தேசத் துரோகிகளின் தேசபக்தி

**ஊழல், மனிதஉரிமை மீறல்கள், ஆக்கிரமிப்புப் போர் முதலான முதலாளித்துவக் குற்றங்கள், தேசியத்தின் பெயராலேயே நியாயப்படுத்தப்படுகின்றன.**

ஆடையின்றி வெற்று உடம்போடு நிற்கும் சிறுவனின் மார்பிலே மூவர்ணக் கொடி குத்தியிருக்கும் காட்சி அவ்வளவு எளிதில் யாரும் மறந்துவிடக் கூடியதல்ல. அது சுதந்திரத்துக்கும் வறுமைக்கும் இடையே நிலவும் முரண்நிலையை மட்டும் சொல்லவில்லை. பெற்ற குழந்தைக்கு உணவளிக்கவும் இயலாமல் போன மக்கள் ஒருவேளை உணவுக்காக, அங்கன்வாடிகள் அல்லது சத்துணவுக் கூடங்களுக்கு அனுப்பினால் அங்கும் கூடத் தேசிய அடையாளங்கள் திணிக்கப்படுவதையும் குறிக்கிறது. பால்குடி மறந்தவுடன் நம் பிள்ளைகளுக்குப் போதிக்கப்படும் கருத்து, தேசம், தேசபக்தி அல்லது தேசப்பற்று, தேசிய உணர்வு, தேசியப் பாதுகாப்பு, தேசிய ஒருமைப்பாடு - இவை போன்றவை.

பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழகங்கள், பத்திரிக்கைகள் - சின்னத்திரை - பெரியதிரை ஊடகங்கள் எல்லாம் இதைத்தான் போதிக்கின்றன. அரசுத்துறைத் தொழில் நிறுவனங்கள், அரசு அலுவலகங்கள், போலீசு, இராணுவம், நீதிமன்றங்கள், அரசு, அமைச்சகங்கள் எல்லாவற்றிலும் இந்தக் கருத்தைப் பிரதிபலிக்கும் அடையாளச் சின்னங்கள்தாம் உள்ளன. தேசம் குறித்த இந்தக் கருத்தாக்கம் புனிதமாக்கப்பட்டிருக்கிறது. யாருக்கும் சுயபுத்தி வந்து அதைக் கேள்வி கேட்கவோ, விமர்சிக்கவோ கூடாது என்பதற்காகத் தேசிய சின்னங்களைக் கூட மதிக்கத் தவறினால் தண்டனை விதிக்கவும், மொத்தத்தில் தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் யாரையும் விசாரணையின்றிச் சிறையில் அடைக்கவும், தண்டிக்கவும்கூட கிரிமினல் தண்டனைச் சட்டம் விதிக்கப்பட்டிருக்கிறது. ஆங்கிலேயக் காலனி ஆட்சியாளர்கள் ராஜதுரோகக் குற்றஞ்சாட்டி விடுதலைப் போராளிகளைத் தண்டித்தார்கள்; தற்போது தேசத்தைக் காப்பது என்ற பெயரில் ஆட்சியாளர்களை விமர்சித்துக் கேள்வி கேட்பவர்களை அதே ராஜதுரோகக் குற்றஞ்சாட்டி தண்டிக்கவும் முடியும்.

காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள் ஊழல் புகழ் ரேஷ் கல்மாடி.



அந்நிய ஆக்கிரமிப்பிலிருந்தும் கொள்ளையிலிருந்தும் நாட்டையும் மக்களையும் காத்துக் கொள்வதற்கும் அந்த உணர்வோடு, அதற்காகப் போராடித் தியாகம் செய்யவும் தேசம், தேசபக்தி அல்லது தேசப்பற்று, தேசிய ஒருமைப்பாடு முதலியன அவசியந்தான். ஆனால், பாசிச ஆட்சியாளர்கள் தமது கொடுங்கோலாட்சியையும் பகற்கொள்ளைகளையும், ஏகாதிபத்தியவாதிகள் தமது ஆக்கிரமிப்புப் போர்களையும் கைப்பற்றிய நாடுகளின் செல்வங்களைச் சூறையாடுவதையும் நியாயப்படுத்துவதற்கு அணிந்து கொள்ளும் தயார்நிலைக் கவசங்களாகத் தேசம் குறித்த கருத்துக் கட்டுமானங்களைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

அன்றைய இத்தாலியின் முசோலினி, ஜெர்மனியின் இட்லர், ஸ்பெயினின் ஃபிராங்கோ முதல் இன்றைய அமெரிக்காவின் புஷ், ஒபாமா வரை தேசத்தின் பெயரால்தான் எல்லா அக்கிரமங்கள், அட்டூயழியங்களை அரங்கேற்றினார்கள். மன்னராட்சிக் காலத்தில் ''ராஜ விசுவாச''த்தைக் காட்டித்தான் கொடுங்கோலாட்சிகள் நடந்தன. பல இஸ்லாமிய நாடுகளில் மத நம்பிக்கையையும் ராஜ விசுவாசத்தையும் காட்டி, ''ஷரியத்'' ஆட்சி நடக்கிறது. ஆப்பிரிக்க, இலத்தீன் அமெரிக்க நாடுகள் பலவற்றிலும் தேசத்தின் பெயரால், இராணுவ-பாசிச காட்டுமிராண்டித்தன ஆட்சி நடக்கிறது. இப்போது தேசத்துக்குப் பயங்கரவாதிகளால் ஆபத்து என்கிற பெயரில் ஜனநாயக நாடுகள் எனப்படும் மேற்கத்திய பாணி அமைப்புகளில்கூடத் தேசிய வெறியும் தேசிய போதையும் மக்களுக்கு ஊட்டப்பட்டு, பாசிச அடக்குமுறைகளும், இலஞ்ச-ஊழல்-முறைகேடுகளும் தடையின்றி நடக்கின்றன.

•••

• கடந்த ஆண்டு பிற்பாதியில் நடந்த காமன்வெல்த் நாடுகளின் விளையாட்டுப் போட்டிகள் ஏற்பாட்டில் 70,000 கோடி ரூபாய் அளவுக்கு ஏராளமான அற்பத்தனமான ஊழல்கள், மோசடிகள் நடந்திருப்பது அம்பலமாகின. அதற்குக் காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுத்தால், விளையாட்டுப் போட்டிகள் நின்று போய், ''தேசிய கௌரவம் பறிபோய் விடும்'', ''தேசிய அவமானம் நேர்ந்துவிடும்'' என்று கூறி காங்கிரசு கூட்டணி

அரசு நடவடிக்கை எடுக்க மறுத்தது. ஆனால், விளையாட்டுப் போட்டிகளுக்கான ஏற்பாடுகள் எல்லாம் தரங் கெட்டுப்போய் நாறி, காமன்வெல்த் நாடுகள் கேலி பேசி, புறக்கணிப்பதாக மிரட்டிய பிறகு, பொறுப்பாளர்களை மாற்றி அரைகுறை, அவசர ஏற்பாடுகள் செய்து ஒரு வழியாக நடத்தி முடித்தது.

● தேசியப் பாதுகாப்புக்காக கார்கிலில் போரிட்டு, தியாகிகளான இராணுவ வீரர்களின் குடும்பங்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க வேண்டும் என்று கூறி தென்மும்பை கடற்கரையில் இராணுவத்துக்குச் சொந்தமான நிலத்தை வாங்கி, விதிமுறைகளை மீறி அடுக்கு மாடி வீடுகளைக் கட்டி அமைச்சர்கள், அதிகாரிகள், இராணுவத் தளபதிகள் தங்களுக்குள் பங்கு போட்டுக் கொண்டார்கள்.

● நாட்டின் பல பகுதிகளில் உள்ள இராணுவத்துக்குச் சொந்தமான நிலங்கள் தனியாருக்கு அடிமாட்டு விலைக்கு விற்கப்படுகிறது. இராணுவத்துக்கு உடுப்பு வாங்குவது, உணவு விடுதிகளுக்குப் பொருட்கள் (இராணுவத்தினர் குடும்பத்துக்கு மலிவு விலையில் நுகர்பொருட்கள்) வாங்கித் தருவதில் ஊழல், மோசடிகள் நடந்துள்ளன. முப்படைகளுக்கும் விமானங்கள், போர்க்கப்பல்கள், பீரங்கிகள் முதலியன வாங்குவதிலும், பல ஆயிரம் கோடி ரூபாய் ஊழல்கள் நடக்கின்றன. எடுத்துக்காட்டாக, போபர்ஸ் பீரங்கி, ஜெர்மனி நீர் மூழ்கி கப்பல்கள் வாங்கிய ஊழல் விவகாரத்தில் ராஜீவ் காந்தி, சோனியாவின் குடும்ப நண்பர் குட்ரோச்சி சிக்கி அம்பலப்பட்டபோதும், தேசிய நலன் கருதித்தான் அவை வாங்கப்பட்டன என்று காங்கிரசு வாதாடியது.

காஷ்மீரிலும், வடகிழக்கு இந்தியாவிலும், தீவிரவாதிகளுடன் மோதல், தேசிய ஒருமைப்பாடு காப்பது என்கிற பெயரில் அப்பாவி இளைஞர்கள் போலி மோதல்கள் மூலம் இராணுவத்தால் படுகொலை செய்யப்படுகின்றனர். பெண்கள் கடத்தப்பட்டுப் பாலியல் வன்முறை செய்து கொல்லப்பட்டு, கால்வாய்களிலும், சாலைகளிலும் வீசப்படுகின்றனர். இராணுவத்தின் அட்டூழியங்களைச் சகிக்கமுடியாமல் கல்லெறிப் போராட்டங்கள் நடத்தும் சிறுவர்கள் ''காக்கை-குருவி'' போல சுட்டுத் தள்ளப்படுகின்றனர். ''ஆயுதப் படைகளுக்கான சிறப்பு அதிகாரச் சட்டம்'' என்ற கவச மணிந்த இராணுவ அட்டூழியங்கள் எல்லாம் தேசியப் பாதுகாப்பு, தேசிய ஒருமைப்பாடு என்கிற பெயரால் நியாயப்படுத்தப்படுகின்றன. இராணுவப் போர்த்தந்திரங்கள், செயல்பாடுகள் மட்டுமல்ல; அதன் நிர்வாகம், நிதி முதலிய அனைத்தும் இரகசியமாக வைக்கப்படுவதோடு, அவற்றை அறிந்திருப்பதும், அறிய முயற்சிப்பதும்கூடத் தேசியத் துரோகமாகச் சித்தரிக்கப்படுகிறது. இதை எதிர்ப்பவர்கள் மீது ராஜ துரோகம் மற்றும் தேசியப் பாதுகாப்புச் சட்டங்கள் பாய்கின்றன. ''புனிதமானது'' என்று தேச மக்கள் பார்வையிலிருந்து ஒதுக்கி வைக்கப்பட்டிருப்பது இராணுவம் மட்டுமல்ல; போலீசு, நீதித்துறை, அதிகார வர்க்கத்தினர் பற்றிய விவரங்களில்கூடத் (இலஞ்ச-ஊழலில் சிக்கிய போலீசு அதிகாரிகள், நீதிபதிகளின் சொத்து விவகாரங்கள் போன்றவை) தகவல் அறியும் உரிமை மறுக்கப்பட்டு, தேசியப் பாதுகாப்பு என்ற இரும்புத் திரைக்குப் பின்னே மறைத்து வைக்கப்படுகிறது.


க்னா நில பேர ஊழலின் சூத்திராதாரி லெப்டினென்ட் ஜெனரல் பி.கே.ரத்.

● இந்தியத் தமிழ் மீனவர்கள் சிங்களக் கடற்படையினரால் படுகொலை செய்யப்படுவதற்கு எதிராகப் பேசினார் என்பதற்காக இயக்குநர் சீமான் தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் சிறையிலடைக்கப்பட்டார். ஈழத் தமிழர் விடுதலைப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்த குற்றத்துக்காக தமிழினவாதத் தலைவர்கள் இந்திய இறையாண்மைக்கு எதிராகச் செயல்பட்டதாக பொய் வழக்குப் போட்டுச் சிறையிலடைக்கப்பட்டனர். சிங்கள இராணுவத் தாக்குதல்களுக்கு எதிராகப் போராடுவது இந்திய தேசியத்தையும் இறையாண்மையையும் எப்படிப் பாதிப்பதாகும்?

தேசியத்துக்கு இந்துத்துவ மதவெறி-சாதிவெறி சாயம் பூசி, இஸ்லாமிய-கிறித்துவ சிறுபான்மையினரின் உரிமைகள் எல்லாம் இந்து தேசியத்துக்கு-இந்திய தேசியத்துக்கு எதிரானவை என்று சித்தரித்துக் கொலைவெறியாட்டம் போடுகின்றன, ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க., வி.இ.ப. ஆகிய மதவெறி பாசிச கும்பல்கள். நரேந்திர மோடியின் இந்துத்துவ பயங்கரவாதப் படுகொலைகளை எதிர்ப்போரையெல்லாம் இந்திய தேசியத்துக்கும் குஜராத்தி இனத்துக்கும் எதிரானவர்கள் என்கிறது, மோடி தலைமையிலான இந்துத்துவ பாசிஸ்டுகள் கும்பல். கர்நாடகாவில் எடியூரப்பாவின் இலஞ்ச-ஊழல் முறைகேடுகளை எதிர்ப்பவர்களைக் கன்னட இனத்துக்கு எதிரானவர்கள் என்கிறார் எடியூரப்பா.

● இவர்களின் அமெரிக்க, இங்கிலாந்து முதலிய ஏகாதிபத்திய எஜமானர்களும் இதே உத்தியைத் தான் உலகமெல்லாம் கடைப்பிடிக்கிறார்கள். தமது தேசிய நலன்களுக்காக, பயங்கரவாதத்துக்கு எதிரான உலகப் போர் என்ற பெயரில் ஈராக், ஆப்கான், பாகிஸ்தானில் ஆளில்லா விமானங்களை ஏவிக் குண்டுமாரிப் பொழிந்து, அந்நாட்டு மக்களைக் கொன்று போடுகிறார்கள். இவர்களின் தேசியம் எப்படிக் கேலிக்குரியது என்பதற்கு சமீபத்தில் ஒரு எடுத்துக்காட்டு வெளிவந்திருக்கிறது. டேனிஸ் மாண்ட்கோமரி என்ற ஒரு அமெரிக்க மோசடிப் பேர்வழி, அல்கொய்தா பயங்கரவாதிகளின் பயங்கரவாதத் தாக்குதல்களை முன்னறிந்து எச்சரிக்கும் ஒரு தொழில்நுட்பத்தைத் தான் கண்டுபிடித்திருப்ப

தாகக் கூறி, அமெரிக்க இராணுவ (பெண்டகன்) அதிகாரிகளையும் புஷ் நிர்வாகத்தையும் நம்ப வைத்து 2,00,00,000 (இரண்டு கோடி) டாலர்களைக் கறந்து விட்டான். பின்னர், அது வெறும் மோசடி என்று தெரிய வந்தது. திருடனுக்குத் தேள்கொட்டியதைப் போல வாய் மூடிக் கொண்டது புஷ் நிர்வாகமும் அமெரிக்க நீதித்துறையும். வேறொரு மோசடி வழக்கில் மாண்ட்கோமரி சிக்கிய விவகாரம் வெளியே வந்தபோதும், முன்பு நாட்டின் பாதுகாப்பு இரகசியம் என்று கூறிச் சமாளித்த அமெரிக்க நிர்வாகம், இப்போது தேசியப் பாதுகாப்பு என்று இந்த மோசடியை மூடி மறைக்கிறது.

•••

**தே**சிய விசுவாசம், தேச பக்தி அல்லது தேசப் பற்று, தேசிய ஒருமைப்பாடு, தேசிய நலன் காக்க தியாகம் ஆகியவை நிபந்தனையற்ற முறையில் குடிமக்கள் கடைப்பிடிக்க வேண்டியவையா? தேசம் என்பது நாட்டையும் மக்களையும் மட்டும் குறிக்கிறதா? ஆளும் கட்சி அல்லது கூட்டணி அது நடத்தும் அரசாங்கத்தையும், நிரந்தர உறுப்புகளாகிய அர நிர்வாகத்தையும் குறிக்கிறதா? தேச விசுவாசம் என்பது இவற்றின் மீது காட்ட வேண்டிய விசுவாசத்தைக் குறிக்கிறதா? அதாவது, அரசாங்க நிர்வாகமும் அர நிர்வாகமும் மேற்கொள்ளும் அனைத்து நடவடிக்கைகளையும் ஆதரித்து விசுவாசமாக நடப்பதுதான் குடிமக்களின் கடமையும் பொறுப்புமா? அல்லது இவற்றின் நடவடிக்கைகளில் உடன்படாத குடிமக்கள் இவற்றை எதிர்த்துப் போராடவும், அவசியமாகக் கருதும்போது தேசிய அரசாங்கத்தையும் அரசையும் வீழ்த்த முயலுவது தேசத் துரோகமா?

நாட்டின் வளர்ந்த முதிர்ந்த அறிவுஜீவிகளிலேயே கூடப் பலரும் தேசத்தையும் தேச விசுவாசத்தையும், தேசிய நலனையும் அரசாங்கத்துடனும் அரசுடனும் போட்டுக் குழப்பிக் கொள்கிறார்கள். ஈராக், ஆப்கான் மீது ஆக்கிரமிப்பு மற்றும் பேரழிவுப் போர் நடத்தும் அமெரிக்க அரசையும் இங்கிலாந்து அரசையும் ஆதரிப்பது எவ்வாறு அந்நாட்டு மக்களின் தேசியக் கடமையாகும்? அந்நாடுகள் ஆக்கிரமிப்புப் போரில் தோற்க வேண்டுமென்று கருதுவது அந்நாட்டு மக்களின் தேசத் துரோகமாகி விடுமா? ஆக்கிரமிப்பு அழிவு உலகப் போரை நடத்திய இட்லரும், முசோலினியும், ஃபிராங்கோவும் வீழ்த்தப்பட வேண்டும் என்பது தானே ஜெர்மன், இத்தாலிய, ஸ்பெயின் மக்களின் தேசிய உணர்வாக இருந்திருக்க முடியும்?

நரசிம்ம ராவ், வாஜ்பாய், மன்மோகன் போன்ற இந்திய, இந்துத்துவ தேசியவாதிகள் தலைமையிலான அரசாங்கமும் அரசும் அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு நாட்டை அடிமையாக்கவும் அடகு வைக்கவும், தொடர்ந்து பல இராணுவ, அரசியல், பொருளாதார ஒப்பந்தங்கள் போட்டுள்ளன. அமெரிக்க எஜமானர்களால் எவ்வளவுமுறை அவமானப்படுத்தப்பட்டாலும் விசுவாச நாய்களைப் போல அவர்களின் கால்களை நக்குகின்றன. இந்திய அமைச்சர்களும் அதிகாரிகளும் அங்கே நிர்வாணமாக்கிச் சோதனையிடப்படுகிறார்கள். பெண்களின் கன்னித்தன்மை சோதனையிடப்படுகிறது. பயங்கரவாதிகள் என்ற பேரில் விமான நிலையங்களில் சிறை வைக்கப்படுகிறார்கள். இந்திய மாணவர்களின் கால்களில் கண்காணிப்பு காமிராக்கள் பொருத்தி விலங்குகளைப் போல அலையவிடுகிறார்கள். புஷ், ஒபாமா போன்ற அமெரிக்க அதிபர்கள் வந்தால் பாதுகாப்பு என்ற பெயரில் அமெரிக்க உளவுப் படைகள் நமது நாட்டு போலீசு, இராணுவத்துக்கு மேலே நிர்வாகத்தை எடுத்துக் கொள்கிறது. நமது நாட்டு முதல் மந்திரிகளே (அமைச்சர்களே) அடையாள அட்டை கேட்டு அவமானப்படுத்தப்படுகிறார்கள். போபால் படுகொலைகளுக்குக் காரணமானவர்கள் மீது கிரிமினல் சட்ட நடவடிக்கை எடுக்க முடியவில்லை. மேலும் இந்தியாவை அடிமையாக்கும் அரசியல், பொருளாதார, இராணுவ, அணுசக்தி ஒப்பந்தங்கள் போடப்படுகின்றன. நமது நாட்டின் வெளிநாட்டுக் கொள்கைகளை அவர்களது உத்தரவுக்கு ஏற்பத்தான் வைத்துக் கொள்ள வேண்டியுள்ளது. தேசிய நலன், தேசிய மரியாதை, தேசியப்பாதுகாப்புகளை எல்லாம் இவ்வளவு தூரம் அந்நியருக்கு அடிமையாக்கும், அடகு வைக்கும் ஆட்சியாளர்கள்தாம் உண்மையில் தேசத் துரோகிகள். ஆனால், இவை அனைத்தையும் எதிர்த்துப் போராடுபவர்கள் மீது பயங்கரவாதிகள், உள்நாட்டுப் பாதுகாப்புக்கு ஆபத்தானவர்கள் என்று முத்திரை குத்தி ஒடுக்குகிறார்கள்.


காஷ்மீரில் இராணுவம்-போலீ நடத்தும் படுகொலைகள் அனைத்தும் தேசிய ஒருமைப்பாட்டைப் பாதுகாப்பது என்ற பெயரில் நியாயப்படுத்தப்படுகின்றன.

நாட்டுக்கும் மக்களுக்கும் எதிராக கார்ப்பரேட் தரகு அதிகார முதலாளிகளுக்கும் ஏகாதிபத்தியப் பன்னாட்டு ஏகபோக முதலாளிகளுக்கும் விசுவாச ஊழியம் செய்யும் அரசாங்க நிர்வாகமும் அரசு நிர்வாகமும் தேசத்தின் பெயரால் மோசடி செய்கின்றன. இந்த உண்மையைப் புரிந்து கொள்ளாமலும் அல்லது புரிந்து கொண்டும் அதை மூடி மறைக்கும் மெத்தப்படித்த அறிவுஜீவி வர்க்கப் பிரிவினர், தாம் இந்தியர் என்றும் தேசியவாதிகள் என்றும் சொல்லிக் கொள்வதில் பெருமைப் படுவதாக வெட்கமின்றிப் பீற்றிக் கொள்கிறார்கள். உண்மையில் நாட்டுக்கும் மக்களுக்கும் எதிரான எல்லா துரோகிகளையும் எதிர்த்துப் போராடுவதில்தான் பெருமை உண்டு.

● ஆர்.கே.

## தமிழக மீனவர் படுகொலை:

# எல்லை தாண்டுவதுதான் பிரச்சினையா?

**இந்திய–இலங்கை அரசுகளின் தமிழின வெறுப்பையும், கூட்டுச்சதியையும் மூடிமறைக்கவே மீனவர்கள் எல்லை தாண்டுவது ஊதிப் பெருக்கப்படுகிறது.**

கடந்த ஜனவரியில் இந்தியக் கடல் எல்லைக்குள் மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர் ஜெயக்குமார் சிங்களக் கடற்படையினரால் கொடூரமாகக் கொல்லப்பட்டார். அதற்கு முன், எல்லை தாண்டி வந்த சிங்களக் கடற்படை ஜெகதாப்பட்டினம் மீனவர் வீரபாண்டியனைச் சுட்டுக் கொன்றது. சிங்களக் கடற்படையால் இதுவரை 500-க்கும் மேற்பட்ட மீனவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இவற்றுக்கு முதல் தகவல் அறிக்கைகள் பதிவாகியுள்ளன. கொலை (இபிகோ 302), கொலை முயற்சி (இபிகோ 307) உள்ளிட்ட பல்வேறு குற்றப் பிரிவுகளின் கீழ் சிங்களக் கடற்படைக்கு எதிராக வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும், ஒரு வழக்கில்கூடத் தமிழக போலீசு இதுவரை மேல்விசாரணை நடத்தவில்லை.

அண்டை நாட்டுக் கடற்படைக்கு எதிரான கிரிமினல் வழக்குகள் என்ற முறையில் மத்திய அரசு இவற்றின் மீதான விசாரணை தொடர்வதை உத்திரவாதப்படுத்தியிருக்கவேண்டும். சாட்சியங்களின் அடிப்படையில், நிராயுதபாணிகளான மீனவர்களைப் படுகொலை செய்த குற்றத்துக்காக சம்பந்தப்பட்ட இலங்கை கடற்படை அதிகாரிகளை இந்திய அரசிடம் ஒப்படைக்குமாறு கோரியிருக்க வேண்டும்.

இவையனைத்தும் சட்டபூர்வமாக இந்திய அரசும், தமிழக அரசும் மேற்கொண்டிருக்க வேண்டிய, ஆனால் மேற்கொள்ள விரும்பாத நடவடிக்கைகள். இதில் புரிந்து கொள்ளவியலாத சட்ட நுணுக்கம் ஏதும் இல்லை. ராஜீவ் கொலைக்காக பிரபாகரனை ஒப்படைக்க வேண்டும் என்று கோரிய இந்திய அரசு, 500-க்கும் மேற்பட்ட தமிழக மீனவர்கள் கொலை செய்யப்பட்ட பிறகும் மவுனம் சாதிப்பதற்கு தெளிவான அரசியல் உள்நோக்கம் இருக்கத்தான் செய்கிறது.

'எல்லை தாண்டிய பயங்கரவாதிகள்' தொடர்பான பிரச்சினைகளில் பாகிஸ்தான் அரசை இந்திய அரசு எப்படிக் கையாள்கிறது என்பது இங்கே ஒப்பிட்டுப் பார்க்கத்தக்கது. இந்தியாவில் தாக்குதல்கள் நிகழும்போதெல்லாம், குறிப்பிட்ட சில 'பயங்கரவாதிகளின்' பெயர்களைக் 'கொலைக் குற்றவாளிகள்' என்று குறிப்பிட்டு, அவர்கள் பாகிஸ்தானில்தான் இருப்பதாகவும், பாகிஸ்தான் அரசும் உளவுத்துறையும்தான் அந்தக் குற்றவாளிகளைப் பயிற்றுவிக்கின்றன, பாதுகாக்கின்றன என்றும் தொடர்ந்து குற்றம் சாட்டி வந்திருக்கிறது இந்திய அரசு. இந்திய அரசு குறிப்பிடும் நபர்களெல்லாம் பாகிஸ்தான் அரசுடன் தொடர்பற்றவர்கள் என்றும் (Non-state actors) அவர்களுடைய நடவடிக்கைகளுக்குத் தாங்கள் பொறுப்பேற்கவியலாது என்றும் பாக். அரசு கூறிவந்திருக்கிறது.

பாக். அரசின்பால் இந்திய அரசின் அணுகுமுறையையும் இலங்கை அரசின்பால் இந்திய அரசின் அணுகுமுறையையும் ஒப்பிட்டுப் பார்க்கலாம். நிராயுதபாணிகளான தமிழக மீனவர்களை நடுக்கடலில் வைத்துச் சுட்டுக் கொன்றவர்கள் இலங்கைக் கடற்படையினர் என்று பல வழக்குகள் தெளிவாகப் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. சமீபத்தில் இலங்கைக் கடற்படை தொடுத்த துப்பாக்கிச் சூட்டில் தெறித்து விழுந்த இலங்கைக் கடற்படையின் துப்பாக்கித் தோட்டாக்களை சாட்சியமாகக் காட்டி, ''இது

சிங்களக் கடற்படையின் பயங்கரவாதப் படுகொலை: கழுத்தில் சுருக்கு மாட்டிக் கடலில் தள்ளிக் கொல்லப்பட்ட வேதாரண்யம் மீனவர் ஜெயக்குமார்; கண்ணீர் கடலில் தவிக்கும் அவரது குடும்பம்.





இலங்கைக் கடற்படை செய்த குற்றம்தான்'' என்று இந்திய வெளியுறவுத்துறைச் செயலர் நிருபமா ராவ் மறுக்கமுடியாமல் நிரூபித்திருப்பதாக இந்து பத்திரிகை எழுதுகின்றது. இது சமீபத்திய எடுத்துக்காட்டு.

பாகிஸ்தான் அரசுடன் தொடர்புள்ளவர்கள் என்று அறுதியிட்டு நிரூபிக்க முடியாத வழக்குகளிலும் கூட, பயங்கரவாத தாக்குதல்களுக்கு பாக். அரசைக் குற்றம் சாட்டும் இந்திய அரசு, சிங்களக் கடற்படையினரால் நிகழ்த்தப்பட்டுள்ள இந்தப் படுகொலைக் குற்றங்களுக்காக, குறிப்பிட்ட கடற்படை அதிகாரிகளை ஒப்படைக்க வேண்டும் என்று கோரியிருக்க வேண்டும். ஆனால், கடந்த 20 ஆண்டுகளில் 500-க்கும் மேற்பட்ட இந்தக் கொலைகள் எதற்கும் விசாரணையே நடத்தப்படவில்லை.

ஆனால், ஒவ்வொரு முறை தமிழக மீனவர்கள் சுட்டுக் கொல்லப்படும்போதும், தமிழக மீனவர்கள் எல்லை தாண்டி இலங்கைக் கடற்பகுதிக்குள் மீன் பிடிக்கச் செல்வதால்தான் இத்தகைய விபரீதங்கள் ஏற்படுகின்றன என்று இந்திய - இலங்கை அரசுகளும், அவற்றின் ஊதுகுழல்களான ஊடகங்களும் தொடர்ந்து குற்றம் சாட்டி வருகின்றன. தமிழக மீனவர்கள் எல்லை தாண்டுவதால்தான் பிரச்சினை ஏற்படுகிறது; எல்லை தாண்டும் மீனவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்றார், வெளியுறவுத் துறை அமைச்சர் கிருஷ்ணா.

போருக்குப் பின், ஈழத்து மீனவர்கள் இப்போதுதான் மீன் பிடிக்கத் தொடங்கியுள்ளதாகவும், தமிழக மீனவர்கள் எல்லை தாண்டி வந்து டிராலிங் முறையில் மீன் பிடிப்பதால், ஈழத்துத் தமிழ் மீனவர்கள் பாதிக்கப்படுவதாகவும் ஈழத் தமிழர்களுக்காகக் கண்ணீர் வடிக்கிறது, இந்து நாளேடு. இலங்கை மீனவர்கள் இன்னமும் கட்டுமரம் மூலம் மீன்பிடிப்பதாகவும், தமிழகத்திலிருந்து வரும் விசைப்படகுகளுடன் அவர்கள் போட்டி போடமுடியவில்லை என்றும் தமிழக மீனவர்கள் மீது குற்றம் சாட்டப்படுகிறது.

**''இந்தியாவின் மேலாதிக்க நலன்களுக்கு மீனவர்களைப் பலியிடாதே!**
**மீனவர்களின் தற்காப்புக்கு ஆயுதம் ஏந்தும் உரிமையைச் சட்டப்படி வழங்கு!**
**கச்சத்தீவுப் பகுதியில் தமிழக மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமையை நிலைநாட்டு!''**

## -பிரச்சாரம், ஆர்ப்பாட்டம், பொதுநல வழக்கு

தமிழக மீனவர்கள் சிங்களக் கடற்படையால் படுகொலை செய்யப்படுவதைக் கண்டித்தும், இந்திய மேலாதிக்கம் மற்றும் இந்திய ஓட்டுப் பொறுக்கிகளை அம்பலப்படுத்தியும், மீனவர்களுக்கு ஆயுதம் ஏந்தும் உரிமை கோரியும், ம.க.இ.க., வி.வி.மு., பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு., ஆகிய அமைப்புகளின் சார்பில் தமிழகம் தழுவிய அளவில் சுவரொட்டி, துண்டறிக்கை, ஆர்ப்பாட்டங்கள் போன்ற வடிவங்களில் பிரச்சாரம் கொண்டு செல்லப்பட்டது. இந்திய அரசிடம் மீனவர்கள் பாதுகாப்புக் கோருவது பயனற்றது. சிங்களக் கடற்படையைத் தமிழக மீனவர்கள் திருப்பிச் சுட்டுக் கொல்லாதவரை நடந்துள்ள கொலைகளுக்கு நீதி கிடைக்காது எனப் பிரச்சாரம் செய்யப்பட்டது.

இதனை ஒட்டி, மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தின் சார்பில் அதன் மதுரைக் கிளை வழக்குரைஞர் வாஞ்சிநாதன், இரண்டு பொதுநல வழக்குகளை மதுரை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறார்.

''இந்திய அரசியல் சட்டப்பிரிவு 19(1)(ஜி)-யின் படி மீன்பிடி உரிமையும், சட்டப் பிரிவு 21-இன்படி வாழ்வுரிமையும் மீனவர்களின் அடிப்படை உரிமையாகும். இவற்றைப் பாதுகாக்க வேண்டிய இந்திய அரசு அக்கடமையிலிருந்து தவறிவிட்டதால், தமிழக மீனவர்கள் நம்பிக்கை இழந்து விட்டனர். எனவே, மீனவர்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள அனைவருக்கும் உரிமம் கொண்ட துப்பாக்கிகளை இலவசமாக அளிக்க வேண்டும். இந்தியத் தண்டனைச் சட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ள இத்தற்காப்பு உரிமையை நிலைநாட்ட வேண்டும்'' என்று ஒரு பொதுநல வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதுவரை பதிவு செய்யப்பட்டுள்ள வழக்குகளின் மீது ஏன் புலன்விசாரணை நடக்கவில்லை என்பதை நீதிமன்றம் தலையிட்டு விசாரிக்க வேண்டும் என்றும் அந்த மனுவில் கோரப்பட்டுள்ளது.

மற்றொரு பொதுநல வழக்கில், ''இந்திய - இலங்கை ஒப்பந்தங்கள் 1974, 1976-இன்படித் தமிழக மீனவர்களின் பாரம்பரிய உரிமை அங்கீகரிக்கப்பட்டுள்ளதால், கச்சத்தீவை மையப்படுத்தித் தமிழக மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமையைப் பாதுகாக்கும் வகையில் இந்தியாவின் கடல் எல்லையை இந்திய அரசு வரையறுக்க வேண்டும் என உயர் நீதிமன்றம் உத்தரவிட வேண்டும்'' என்று கோரப்பட்டுள்ளது.

மேற்படி வழக்குகள் 15.2.2011 அன்று விசாரணைக்கு வந்து வழக்குரைஞர் லஜபதிராய் ஆஜராகி வாதிட்டபோது, கச்சத்தீவு மற்றும் தமிழக மீனவர்கள் பிரச்சினை தொடர்பாக ஜெயலலிதா உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனுவைக் காரணம் காட்டி, நீதிபதிகள் வழக்கை ஒத்தி வைத்துள்ளனர்.



கடலூரில்...

மீனவர் படுகொலைக்குத் துணைநிற்கும் இந்திய அரசை எதிர்த்தும், சுனாமி குடியிருப்பு கட்டியதில் நடந்துள்ள பல கோடி ஊழலை அம்பலப்படுத்தியும் கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பாக 21.2.2011 அன்று ம.உ.பா.மையத்தின் சார்பில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் வழக்குரைஞர்களும் மீனவர்களும் திரளாகப் பங்கேற்றனர்.

- பு.ஜ.செய்தியாளர்கள்

விசைப்படகுகளில் சென்று கடலில் வீசுகிற வலைகளைக் கடல் தன் நீரோட்டத்துக்கு ஏற்ப பல மைல் தூரம் இழுத்துச் சென்றுவிடுவதாகவும், இழுத்துச் செல்லப்படும் வலைகளை நீரோட்டத்தின் போக்கில் சென்றுதான் வெளியே எடுக்க முடியும் என்றும், பருவ நிலைக்கு ஏற்ப மாறும் இத்தகைய கடல் நீரோட்டங்கள், பாக். நீரிணையில் மட்டுமின்றி உலகெங்கும் உள்ள பிரச்சினைதான் என்றும் கூறுகின்றனர் தமிழக மீனவர்கள். இந்தியா - இலங்கைக்கு இடையிலான கடல் எல்லைகள் வரையறுக்கப்பட்டு அவை மீனவர்களுக்குப் புரியும் விதத்தில் தெளிவுபடுத்தப்படவில்லை என்றும், எல்லையை உடனே வரையறுக்க வேண்டும் என்றும் இந்திய நீதிமன்றங்களில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றன.



தமிழக சட்டமன்றத் தேர்தல் நெருங்குவதால், இந்திய - இலங்கை அரசுகளின் புதிய உத்தி: எல்லை தாண்டியதாகக் குற்றம் சாட்டிக்கைது செய்யப்பட்டு, பின்னர் விடுவிக்கப்பட்ட தமிழக மீனவர்கள்.

500-க்கும் மேற்பட்ட தமிழக மீனவர்கள் சிங்கள இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டு, அது குறித்த விசாரணைகூட நடக்காத நிலையில், அவ்வாறு கொல்லப்படுவதற்குக் காரணம், தமிழக மீனவர்கள் எல்லை தாண்டுவதுதான் என்றும், எனவே அதனைத் தடுப்பதன் மூலம்தான், இந்தப் படுகொலைகளைத் தடுக்க முடியும் என்று தீர்ப்பளிப்பதும், இந்தக் கோணத்தில் விவாதத்தைக் கொண்டு செல்வதும் நயவஞ்சகமானது.

இந்திய, இலங்கை மீனவர்களிடையே மட்டுமல்ல, இந்தியாவைச் சேர்ந்த இரு மாநில மீனவர்களிடையேயும், தமிழகத்தைச் சேர்ந்த இரண்டு மாவட்ட மீனவர்களிடையேயும்கூட இத்தகைய முரண்பாடுகள் தொடர்ந்து எழத்தான் செய்கின்றன. பன்னாட்டு நிறுவனங்களின் டிராலர்களும், பெரிய மீன்பிடி நிறுவனங்களின் நவீனப் படகுகளும் கடல் வளத்தை அள்ளிச் செல்லும்போது அதனால் ஏற்படும் முரண்பாடு சிறிய, நடுத்தர மீனவர்களிடையிலான பிரச்சினையாக உருவெடுக்கிறது.

வங்கதேசம், பர்மா, தாய்லாந்து போன்ற நாட்டு மீனவர்களிடையிலோ, அல்லது மிகவும் முக்கியமாக இந்திய - பாகிஸ்தான் மீனவர்கள் இடையிலோ ஏற்படும் இத்தைகைய முரண்பாடுகள் அல்லது எல்லை மீறல்களில் ஒரு நாட்டு இராணுவம் இன்னொரு நாட்டின் நிராயுதபாணி மீனவர்களைச் சுட்டுக் கொல்வதில்லை. அதிகபட்சம் அவர்கள் கைது செய்யப்படுகின்றனர். பின்னர், அரசுகளிடையே அப்பிரச்சினை பேசித் தீர்க்கப்படுகிறது.

ஆனால், தமிழக மீனவர்கள் மட்டும்தான் இந்திய மேலாதிக்க அரசின் ஆசியுடன், சிங்கள இராணுவத்தால் தொடர்ந்து வேட்டையாடப்படுகின்றனர். இந்திய மீனவர்கள் இலங்கைக் கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்ததனால்தான் சிங்களக் கடற்படை இந்தப் படுகொலைகளை நிகழ்த்தவில்லை. இந்தியாவின் தலையீட்டை வேண்டி விரும்பிப் பெற்றுத்தான் ஈழத் தமிழின அழிப்புப் போரை நடத்தியது, சிங்கள இன வெறி அரசு. எந்தத் தமிழின வெறுப்பு, ஈழத்தமிழருக்கு எதிரான இனப்படுகொலையை நடத்துமாறு சிங்கள இராணுவத்தை தூண்டியதோ, அதே தமிழின வெறுப்புதான் பரிதாபத்துக்குரிய தினக்கூலிகளான, தமிழக மீனவர்கள் மீதும் தோட்டாக்களாகப் பாய்ந்திருக்கிறது.

தமிழக மீனவர்கள் மீது இலங்கை நடத்தும் படுகொலைகளை ‘இந்திய வல்லரசு’ கண்டுகொள்ளாமல் இருக்கக் காரணம், இலங்கையின் மீது இந்திய அரசும் ஆளும் வர்க்கங்களும் கொண்டிருக்கும் மேலாதிக்க நலன்கள். அதுமட்டுமல்ல, தமிழின வெறுப்பு என்ற விசயத்தில் சிங்கள இனவெறியர்களுக்கும் இந்திய மேலாதிக்கவாதிகளுக்கும் இடையில் நிலவும் கொள்கை ரீதியான ஒற்றுமையும் இதில் பெரும்பங்காற்றுகிறது. 1983 ஜூலைப் படுகொலை முதல் ஈழத் தமிழ் மக்களின் போராட்டத்துக்கு ஆதரவுத் தளமாக இருந்தவர்கள் என்ற முறையில் தமிழக மக்கள் மீது சிங்கள இனவெறியர்களுக்கு மாளாத வெறுப்பு இருக்கிறது. இந்திய ஆளும் வர்க்கங்களுக்கும் அந்த வெறுப்பு இருக்கிறது. இந்த வெறுப்புதான் கடந்த இருபது ஆண்டுகளாகத் தமிழக மீனவர்களைச் சிங்களக் கடற்படை வேட்டையாடுவதற்கும், இந்திய அரசு தட்டிக் கொடுத்து அதனை ஊக்குவிப்பதற்கும் காரணமாக இருந்து வருகிறது.

தற்போது தமிழகத்தில் சட்டமன்றத் தேர்தல் நெருங்குவதால், இதுநாள் வரை சுட்டுக் கொலை செய்து கொண்டிருந்த சிங்களக் கடற்படை, இலங்கை மீனவர்களை வைத்தே தமிழக மீனவர்களைச் சுற்றி வளைத்துக் கைது செய்திருக்கிறது. இது இந்திய அரசின் ஆலோசனையாகக்கூட இருக்கலாம்.

ஆனால், இலங்கைக் கடல் எல்லையின் புனிதத்தைப் பாதுகாப்பதற்கு, தங்களது தாய் மண்ணை சிங்கள இனவெறிக்குக் காவு கொடுத்த ஈழத் தமிழினத்தின் மத்தியிலிருந்தே சில வீடணர்களை உருவாக்க முடிந்திருப்பது, நிச்சயமாக ராஜபக்சே அரசின் வெற்றிதான்.

● **தனபால்**

## மதுரை அருகே ஒரு போபால்:

# மாடுகளைப் பலி கொண்ட நச்சு ஆலை

மதுரை - அவனியாபுரம் மண்டேலா நகர் பகுதியில் கடந்த பிப்ரவரி 20-ஆம் தேதியன்று கண்மாயில் தண்ணீர் குடித்த 100-க்கும் மேற்பட்ட மாடுகள் வாயில் நுரை தள்ள துடிதுடித்து மாண்டு போயுள்ளன. கிடை போட்ட இடத்திலிருந்து ஏறத்தாழ 2 கி.மீ. தொலைவுக்கு மாடுகள் இறந்து கிடந்த கோரமான காட்சி மக்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியது. இப்பகுதியிலுள்ள லேன்செஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் மற்றும் பெனார் ஸ்பெஷாலிட்டி புரொடெக்ட்ஸ் பிரைவேட் லிமிடெட் எனுமிரு இரசாயனத் தொழிற்சாலைகளின் நச்சுக் கழிவுகள் இக்கோரக் கொலைகளுக்குக் காரணமாக இருக்கலாம் என்று பிரேதப் பரிசோதனை நடத்திய கால்நடை மருத்துவர்கள் ஊகங்களைத் தெரிவித்துள்ளனர்.

1977-ஆம் ஆண்டு சதர்ன் சின்டான்ஸ் என்ற பெயரில் குடிசைத் தொழிலாக ஆரம்பிக்கப்பட்ட பெனார் ஆலை இன்று 130 தொழிலாளர்களுடன் பல கோடி சொத்துக்களைக் கொண்ட நிறுவனமாக மாறி லேன்செஸ் என்ற பன்னாட்டு கம்பெனியின் கூட்டோடு இயங்கி வருகிறது. லேன்செஸ் என்ற ஜெர்மானிய நிறுவனத்தின் பெயரால் ஆலை இருந்தாலும், குத்தகை ஒப்பந்த அடிப்படையில் உற்பத்தி செய்வது பெனார் நிறுவனம்தான். இந்நிறுவனம் மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரத்தின் சொந்த ஊரான கானாடுகாத்தானுக்கு அருகிலுள்ள கோட்டையூரைச் சேர்ந்த நாராயணன் செட்டியாருக்குச் சொந்தமானது.

அசிடோன், காஸ்டிக் பொட்டாஷ், எதிலீன் கிளைகோல், குளோரோ பென்சீன் முதலான ஐரோப்பிய நாடுகளில் தடை செய்யப்பட்டுள்ள கொடிய ஆபத்தான வேதிப் பொருட்கள் இந்த ஆலையில் இரகசியமாகத் தயாரிக்கப்பட்டு வந்துள்ளன. எவ்விதப் பாதுகாப்புச் சாதனங்களும் தரப்படாததால் பல தொழிலாளர்கள் காசநோய், புற்றுநோய், தோல் நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளனர். இத்தொழிற்சாலையின் அபாயகரமான நச்சுக் கழிவுகளை அகற்றும் பணி ஒரு தனியாரிடம் ஒப்படைக்கப்பட்டு, அந்த நபர் அவற்றைக் கண்மாய் அருகே கொட்டிவிட்டுச் செல்வதாலும், இரசாயனக் கழிவுகளைச் சட்டவிரோதமாக நிலத்தில் புதைப்பதாலும், இந்த ஆலைக்கு அருகிலுள்ள கிராமங்களில் நிலத்தடி நீர் மாசுபட்டுப் போயுள்ளது. இதுதவிர, நள்ளிரவில் ஆலையிலிருந்து வெளியேற்றப்படும் நச்சு வாயுக்களால் சுற்றுப்புற கிராம மக்களுக்கு பாதிப்புகள் ஏற்படுவதோடு, கண்மாயில் மீன்கள் செத்து மிதப்பதும், அத்தண்ணீரைக் குடிக்கும் ஆடு-மாடுகள் நோய்வாய்ப்படுவதும் தொடர்கிறது. இவற்றுக்கெதிராக அவ்வப்போது போராடும் மக்களை அதிகார வர்க்கம் மற்றும் போலீசின் துணையோடு ஆலை நிர்வாகம் மிரட்டியும் சமரசப்படுத்தியும் வந்துள்ளது.

லேன்செஸ் நிறுவனம், தமிழ்நாட்டிலிருந்து குஜராத்துக்கு மாறப் போகிறது. இதனால், வரும் ஜூன் மாதத்துடன் ஆலை மூடப்படுவதாக அறிவிக்கப்பட்டு, ஆலை மூடலுக்கு எதிராகத் தொழிலாளர்கள் தங்களுக்குச் சட்டப்படி அளிக்க வேண்டிய இழப்பீட்டைக் கோரி போராடி வருகின்றனர். ஆலை முதலாளி நாராயணன் செட்டியாரும், கழிவுகளை அகற்றப் பொறுப்பேற்றுள்ள நபரும், துணை நின்ற அதிகாரிகளும் கொலைக் குற்றவாளிகளாக அறிவிக்கப்பட்டுக் கைது செய்து தண்டிக்கப்பட வேண்டும்; மாண்டு போன மாடுகளுக்கு மட்டுமின்றி, ஆலையில் இரகசியமாக புதைக்கப்பட்டுள்ள நச்சுக் கழிவுகளை அகற்றவும் அம்முதலாளியிடமிருந்து இழப்பீடு தொகை பெற்று அப்பகுதியைத் தூய்மைப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கைகளுடன் போராட்டத்தைக் கட்டியமைத்து முன்னெடுத்துச் செல்ல விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, தொழிலாளர் விடுதலை முன்னணி, ம.க.இ.க; பு.மா.இ.மு; மனித உரிமைப் பாதுகாப்பு மையம் மற்றும் பிற உள்ளூர் சங்கங்கள் தொழிலாளர்களுக்கு ஆதரவாக நின்று போராட்டங்களை நடத்தி வருகின்றன.



**தகவல்:**
**மனித உரிமைப் பாதுகாப்பு மையம், மதுரை.**

# தமிழகச் சட்டமன்றத் தேர்தலும் தமிழினவாதிகளின் பிழைப்புவாதமும்

## "காங்கிரசைத் தோற்கடிப்பது" என்ற பெயரில் பார்ப்பன–பாசிச ஜெயாவுக்குத் தமிழினவாதிகள் வால் பிடிக்கிறார்கள்.

**த**மிழ் விரோத - தமிழின விரோத பார்ப்பன - பாசிச ஜெயலலிதாவுக்கு மக்கள் மத்தியில் அங்கீகாரம் தேடித் தரும் திருப்பணியை மேற்கொண்டு, அ.தி.மு.க. கூட்டணிக்கு வாக்களிக்கக் கோரி கிளம்பியிருக்கிறார்கள், சீமான் முதலான சில ஈழ ஆதரவாளர்கள். அ.தி.மு.க.வுக்கு இளைஞர் அணி, மகளிர் அணி இருப்பதைப்போல, ஈழ ஆதரவு அணியாக சீமானின் நாம் தமிழர் இயக்கம் மாறிவிட்டது. ஓட்டுக்கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்ட இலட்சிய இயக்கங்களாகத் தம்மைக் காட்டிக் கொள்ளும் இத்தகையோரின் சந்தர்ப்பவாதமும் பிழைப்புவாதமும் சந்தி சிரித்து, இப்போது ஒரு பிரிவு தமிழினவாதிகளாலேயே சீமான் விமர்சிக்கப்படுகிறார்.

பார்ப்பன - பாசிசத்தைச் சித்தாந்தமாகக் கொண்டுள்ள அ.தி.மு.க. தலைவி ஜெயலலிதா, தொடக்கத்திலிருந்தே ஈழ விடுதலைப் போரை எதிர்த்தும் ஈழ ஆதரவாளர்களை ஒடுக்கியும் வந்தவர் என்பது நாடறிந்த உண்மை. அத்தகைய பார்ப்பன - பாசிசக் கும்பலுக்கு ஆதரவு தெரிவித்து ஓட்டுப் பொறுக்கக் கிளம்பியுள்ளார், சீமான். ''எங்களது நோக்கம் அடுத்து யார் ஆட்சிக்கு வர வேண்டும் என்பதல்ல; யார் ஆட்சிக்கு வரக்கூடாது என்பதுதான். காங்கிரசும், தி.மு.க.வும் மீண்டும் ஆட்சிக்கு வரக்கூடாது என்பதுதான் எங்கள் நிலை. ஈழத்தமிழர் விடுதலைக்காகப் போராடிய பிரபாகரனைத் தூக்கில் போடச் சொன்ன ஜெயலலிதாவை நான் ஆதரிக்கவில்லை. ஈழத்தில் தமிழினத்தை அழிக்கக் காரணமாக இருந்த காங்கிரசுக் கட்சிக்குப் பாடம் புகட்ட வேண்டும் என்பதே என் நிலைப்பாடு. அதற்காக நான் யாரையும் ஆதரிப்பேன்'' என்கிறார், சீமான்.

''அ.தி.மு.க.வும் அதன் கூட்டணியும் போட்டியிடுகிற அத்தனை தொகுதிகளிலும் வெற்றிக்குப் பாடுபட்டால்தான் நாம் ஆதரிப்பதாக அர்த்தம். ஆனால் நாங்கள் அப்படிச் செய்யவில்லை. விடுதலைச் சிறுத்தைகளும் அ.தி.மு.க.வும் எதிர்த்து நின்றால், நாங்கள் விடுதலைச் சிறுத்தைகளுக்குத்தான் ஓட்டுக் கேட்போம். யாருக்கோ ஓட்டுப் போடுங்கள் என்று குடுகுடுப்பை அடிக்க முடியாது. தனித்து நிற்பது யானைகளின் காலடியில் சிக்கிய குழந்தைக்குச் சமமானது. தேர்தலைப் புறக்கணியுங்கள் என்று சொல்வது தற்கொலைக்குச் சமமான கோழைத்தனம். கிடைக்கின்ற ஆயுதத்தைக் கொண்டு எதிரியைக் கிழிப்பதுதான் சாமர்த்தியம்'' என்றெல்லாம் கொள்கை விளக்கங்களை அளித்து தமிழர்களைப் புல்லரிக்க வைக்கிறார், சீமான்.

தேர்தலில் காங்கிரசை வீழ்த்த பாசிச ஜெயாவுக்கு ஆதரவாக ஓட்டுப் பொறுக்கக் கிளம்பியுள்ள சீமான்: பச்சையான சந்தர்ப்பவாதம்.



''இரட்டை இலைக்கு சீமான் வாக்கு கேட்கலாமா என்று கேட்பவரிடத்தில் சொல்லுங்கள்; இந்தியத் திருநாட்டின் விடுதலைக்குப் போராடிய சுபாஷ் சந்திர போஸ் உலகக் கொடுங்கோலனாக இருந்த இட்லரிடத்தில் ராணுவ உதவி கேட்டார். போஸ், இட்லரிடத்தில் ராணுவ உதவி கேட்கலாமா என்று யாரும் கேட்கவே இல்லை. இந்திய அமைதிப்படை தமிழர்களை வேட்டையாடியபோது, அவர்களை எதிர்கொள்ள எதிரி பிரேமதாசாவுடன் பிரபாகரன் கைகோர்க்கவில்லையா, அது போலத்தான் எங்களது அ.தி.மு.க. ஆதரவு நிலையும்'' என்று தனது பச்சையான பிழைப்புவாதத்துக்குச் சித்தாந்த விளக்கமளித்துள்ளார், சீமான்.

சீமான் மட்டுமல்ல, இதர தமிழினவாதிகளும் வெளிப்படையாகவோ, மறைமுகமாகவோ இதே நிலைப்பாட்டைத்தான் கொண்டுள்ளனர். கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் பார்ப்பன - பாசிச ஜெயலலிதாவுடன் கூட்டணி கட்டுவதற்கான உந்து பலகையாக ''இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கம்'' என்ற பெயரில் ஒரு அணியை உருவாக்கி ஏய்த்த வைகோ, நெடுமாறன், ராமதாசு, தா.பாண்டியன் வகையறாக்கள், பின்னர் தேர்தலில் கூட்டணி கட்டிக் கொண்டு ஜெயலலிதாவுக்குக் காவடி தூக்கினர். இத்தகைய ஓட்டுக்கட்சி சந்தர்ப்பவாத அரசியலுக்கு அப்பாற்பட்ட கொள்கை பூர்வ இயக்கமாகக் காட்டிக் கொள்ளும் சில தமிழினக் குழுக்களும் காங்கிரசையும் தி.மு.க.வையும் தேர்தலில் வீழ்த்துவதே முதன்மைப் பணி என்று கூறிக் கொண்டு பிழைப்புவாதத்தில்

மூழ்கி பார்ப்பன - பாசிச ஜெயலலிதாவை வெட்கமின்றி ஆதரித்து ஓட்டுப் பொறுக்கின.

இருப்பினும், இந்த நிலைப்பாட்டை மூடிமறைக்கப்பட்ட சந்தர்ப்பவாதத்துடன் நியாயப்படுத்தினர், மணியரசன் போன்ற சில தமிழினவாதிகள். ''நாம் யாருக்கும் வாக்களிக்கச் சொல்லவில்லை. வாக்களிக்க விரும்புவோர் காங்கிரசுக்குப் போடாதீர் என்று வேண்டுகிறோம்'' என்று - அதாவது, அ.தி.மு.க. கூட்டணிக்கு வாக்களியுங்கள் என்று கடந்த நாடாளுமன்றத் தேர்தலின் போது அதிமேதாவித்தனமாகக் கோரினார், தமிழ்த்தேசப் பொதுவுடமைக் கட்சியின் பொதுச் செயலாளரான பெ.மணியரசன். ''கருப்பனைக் கட்டிவைத்து அடித்தால்,வேலன் வேலியை முறித்துக் கொண்டு ஓடுவான்'' என்ற பழமொழியைக் கூறி, நாடாளுமன்றத் தேர்தலில் காங்கிரசை வீழ்த்தினால், அத்வானியும் ஜெயலலிதாவும் தமக்கும் இதுபோல் நேரிடும் என்று அஞ்சி ஈழ விடுதலையை ஆதரிப்பார்கள் என்று தனது பிழைப்புவாதத்துக்கு அப்போது விளக்கமளித்தார்.



கடந்த தேர்தலில் காங்கிரசுக்கு எதிராக வாக்களிக்கக் கோரிவிட்டு இப்போது தேர்தல் புறக்கணிப்பு சவடால் அடிக்கும் பெ.மணியரசன்: மூடிமறைக்கப்பட்ட சந்தர்ப்பவாதம்.

ஆனால் இதே மணியரசன், இப்போது யோக்கிய சிகாமணியைப் போல சீமான் முதலான தமிழினப் பிழைப்புவாதிகளை விமர்சிக்கிறார். ''காங்கிரசையும் தி.மு.க.வையும் எதிர்ப்பதற்கு செயலலிதாவுடன் குறைந்த அளவு பொதுத் திட்டம் ஒன்றை வகுத்து உடன்பாடு செய்து கொள்ள இந்த ஈழ ஆதரவுத் தோழர்களால் முடியுமா? அந்த உடன்பாட்டை ஊடகங்களில் வெளியிட முடியுமா?'' என்று ஜெயலலிதாவுக்கு ஆதரவாக நிற்கும் சீமான் முதலான ஈழ ஆதரவாளர்களைப் பார்த்துக் கேட்கிறார்.

''தமிழீழ ஆதரவாளர்களை ஒடுக்குவதில் தி.மு.க., அ.தி.மு.க. கட்சிகளுக்கிடையே வேறுபாடு இல்லை என்று தெரிந்தும் அ.தி.மு.க. ஆட்சிக்கு வர நாம் ஏன் உதவ வேண்டும்?'' என்று சீமானைக் கேட்கிறார் கவிஞர் தாமரை. ''அம்மையாரை அரியணையில் அமர்த்திவிட்டு ஐந்தாண்டுகளுக்குப் பிறகு அடுத்த தேர்தலில் கலைஞருக்கு ஆதரவு கேட்க மாட்டீர்கள் என்பதற்கு என்ன நிச்சயம்? தேர்தலில் நிற்க வேண்டாம், நின்றாலும் காங்கிரசு நிற்குமிடங்களில் மட்டும் போட்டியிடுங்கள், மற்ற தொகுதிகளில் 49-ஓ போடுங்கள்'' என்று சீமானுக்கு ஆலோசனை சொல்கிறார்.

''நம் ஈழ ஆதரவு நண்பர்கள் செயலலிதாவுக்குப் பின்னால் பரப்புரைப் படைவரிசையாய் போய்ச் சேர்வது பகைவர்களிடையை உள்ள முரண்பட்டைப் பயன்படுத்துவது ஆகாது. ஒரு பகையாளியிடம் சரணாகதி அடைவது ஆகும். இந்தத் தேர்தலில் காங்கிரசைத் தோற்கடித்துவிட்டால், தமிழ்நாட்டிலிருந்து காங்கிரசை ஒழித்து விட்டதாகுமா? அடுத்தடுத்தத் தேர்தல்களிலும் அக்கட்சி தோற்றுத்தான் போகுமா?'' என்று கேட்கிறார், பெ.மணியரசன் ( தமிழ்த் தேசியத் தமிழர் கண்ணோட்டம், 2011 பிப்ரவரி 1-15)

கடந்த நாடாளுமன்றத் தேர்தலின் போது காங்கிரசுக்கு ஓட்டுப் போடாதீர்கள் என்று உபதேசித்த பெ.மணியரசன் இப்போது சந்தர்ப்பவாதமாக தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டு, தாங்கள் ''தேர்தலைப் புறக்கணிப்பது என்று உறுதியாக முடிவு செய்து அந்நிலையைத் தொடர்ந்து கடைபிடித்து வருகிறோம்'' என்று கூசாமல் புளுகிறார். தேர்தல் சூதாட்டத்தில் தேசிய விடுதலையைப் பணயம் வைக்காமல், தேர்தலுக்கு வெளியே நடக்க வேண்டிய போர்க்குணம் மிக்க எழுச்சிக்கு மக்களை அணியம் செய்வோம் என்று சவடால் அடிக்கிறார். கடந்த நாடாளுமன்றத் தேர்தலின் போது எடுத்த நிலைப்பாடும் தற்போது அவர் அறிவிக்கும் நிலைப்பாடும் ஒன்றுதானா? அப்போது சந்தர்ப்பவாதமாக எடுத்த நிலைப்பாடு பற்றி மறுபரிசீலனை கூட செய்யாமல், தேர்தலுக்கொரு நிலைப்பாடு எடுப்பதுதான் த.தே.பொ.கட்சியின் கொள்கையா?

தமிழ்த்தேச விடுதலைக்கான திட்டத்திலிருந்து, அதை நிறைவேற்றுவதற்கான வழிமுறையாகத் தேர்தல் புறக்கணிப்பை மணியரசனின் கட்சி மேற்கொள்ளவில்லை. அப்படியொரு திட்டமே இல்லாமல், அவ்வப்போது சந்தர்ப்பவாதமாக கொள்கை முடிவுகளை அறிவிப்பதுதான் இவர்களது நடைமுறையாக உள்ளது. இதற்கு முன்பு மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி என்ற பெயரில் இயங்கியபோது, தேர்தலில் பங்கேற்று ஓட்டுப் பொறுக்கினர். அது எட்டாக்கனியானதும், த.தே.பொ.கட்சியாக உருமாறி, சீச்சீ.. இந்தப் பழம் புளிக்கும் என்ற நரியின் கதையாக, யாருக்கும் தகுதி இல்லை என்று கூறி தேர்தலைப் புறக்கணிப்பதாக அறிவித்தனர். கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தாங்கள் எடுத்த சந்தர்ப்பவாத நிலைப்பாடு அம்பலப்பட்டுப் போனதாலேயே, இப்போது தேர்தல் புறக்கணிப்பு சவடால் அடித்து, தாங்கள் எப்போதுமே சரியாக இருந்தது போல காட்டிக் கொள்கின்றனரே தவிர, வாய்ப்பு கிடைத்தால் நாளை ஓட்டுப் பொறுக்கமாட்டார்கள் என்பதற்கு அவர்களிடம் எந்த அடிப்படையும் இல்லை.

சீமான் தனது பச்சையான சந்தர்ப்பவாதத்தைப் பகிரங்கமாக்கிவிட்டார். மணியரசன் முதலான இதர தமிழினவாதிகளோ மூடிமறைக்கப்பட்ட சந்தர்ப்பவாதத்துடன், தமிழன் காதில் பூச்சுற்றிக் கொண்டிருக்கின்றனர். வெளிப்படையான சந்தர்ப்பவாதத்தைவிட மூடிமறைக்கப்பட்ட சந்தர்ப்பவாதம்தான் அபாயமானது என்கிறார், மார்க்சியப் பேராசான் லெனின்.

● இளங்கோ



# அமெரிக்க அநீதி!

**தீவிரவாதத்தை ஒழிப்பது என்ற போர்வையில், அநாகரிகமான ஒடுக்கு முறைகளைச் சட்டபூர்வமாக்கி வருகிறது, அமெரிக்கா.**

கணுக்காலில் மாட்டப்பட்டுள்ள மின்னணுக் கண்காணிப்புக் கருவியுடன்...

அமெரிக்காவின் கலிஃபோர்னியா மாநிலத்திலுள்ள சான்ஃபிரான்ஸிஸ்கோ நகருக்கு அருகே இயங்கி வந்த ட்ரை-வேலி பல்கலைக்கழகம், அமெரிக்காவின் குடியுரிமைச் சட்டங்களை மீறியிருப்பதைக் கண்டுபிடித்த அமெரிக்க அரசு, அத்தனியார் பல்கலைக்கழகத்தை இழுத்து மூடிவிட்டது. அப்பல்கலைக்கழகத்தில் படித்துவந்த 1,000-க்கும் மேற்பட்ட இந்தியாவைச் சேர்ந்த மாணவர்கள் மீது அமெரிக்காவில் சட்டவிரோதமாகக் குடியேறியிருப்பதாகக் குற்றஞ்சுமத்தி, அமெரிக்கக் குடியேற்ற அதிகாரிகள் அவர்களை விசாரித்து வருகின்றனர்.

அமெரிக்கப் பல்கலைக்கழகங்களில் சேர்ந்து படிக்கும் செலவை ஈடுகட்ட, படிக்கும் காலத்திலேயே மாணவர்கள் ஏதாவதொரு வேலை தேடிக்கொள்ள வேண்டும். அமெரிக்கக் குடியேற்றச் சட்டப்படி, அமெரிக்கப் பல்கலைக்கழகங்களில் சேரும் வெளிநாட்டு மாணவர்களுக்கு உடனடியாக இந்த அனுமதி கிடைக்காது; வெளிநாட்டு மாணவர்கள், ஒரு வருட காலப் படிப்பை முடித்த பிறகுதான் பல்கலைக்கழகங்கள் இந்த அனுமதியை மாணவர்களுக்கு வழங்க முடியும். இந்த விதியில்தான் ட்ரை-வேலி பல்கலைக்கழகம் புகுந்து விளையாடிவிட்டது. ''தமது பல்கலைக்கழகத்தில் சேரும் மாணவர்களுக்கு உடனடியாகவே வேலைக்கான அனுமதி வழங்கப்படும்; அதற்கேற்ப மாணவர்கள் தமது பல்கலைக்கழகத்தின் இணைய தள வகுப்புகளில்கூடச் சேர்ந்து கொள்ளலாம்'' என அறிவித்தது, ட்ரை-வேலி பல்கலைக்கழகம். இந்தச் சலுகையின் காரணமாகத்தான் ஆயிரத்துக்கும் மேற்பட்ட இந்திய மாணவர்கள் இந்தப் பல்கலைக்கழகத்தில் மேல்படிப்புக்காகச் சேர்ந்தனர். பல மாணவர்கள், ஏற்கெனவே தாம் படித்துவந்த பல்கலைக்கழகத்திலிருந்து விலகி, இப்பல்கலைக்கழகத்திற்கு மாறிக் கொண்டனர்.

நியாயமாகப் பார்த்தால், இலட்சக்கணக்கான ரூபாய்களைக் கொட்டி இப்பல்கலைக்கழகத்தில் சேர்ந்த மாணவர்களின் விசாவை ரத்து செய்யாமல், அம்மாணவர்கள் வேறு பல்கலைக்கழகங்களில் சேர அமெரிக்கா அனுமதி அளித்திருக்க வேண்டும். ஆனால், அமெரிக்க அரசோ, இம்மாணவர்கள் அமெரிக்காவிலிருந்து தாமே வெளியேறிவிட வேண்டும்; அல்லது வெளியேற்றப்படுவார்கள் எனக் கூறி வருகிறது. இதுவொருபுறமிருக்க, இம்மாணவர்களுள் -ற்றுக்கும் மேற்பட்டோரைச் சந்தேகத்துக்குரியவர்கள் என்ற பட்டியலில் வைத்து, அம்மாணவர்களின் நடமாட்டத்தைக் கண்காணிக்க, ''ரேடியோ டாக்'' என்ற மின்னணுக் கண்காணிப்புக் கருவியை, விலங்கு போல அம்மாணவர்களின் கணுக்காலில் மாட்டிவிட்டிருக்கிறது, அமெரிக்க அரசு.

குற்றம் நிரூபிக்கப்படாதவரைக் குற்றம் சுமத்தப்பட்டவர்களை நிரபராதிகளாகக் கருத வேண்டும் என்பதுதான் நாகரிக சமுதாயத்தின் நீதி பரிபாலன முறை. ஆனால், அமெரிக்க ஏகாதிபத்தியமோ இம்மாணவர்களைக் கொடிய குற்றவாளிகளைப் போலக் கண்காணிப்புக்கு உட்படுத்தி அவமானத்திற்கும் மன உளைச்சலுக்கும் ஆளாக்கியிருப்பதோடு, இந்த மனித உரிமை மீறலைப் பல விதங்களில் நியாயப்படுத்தியும் வருகிறது. ''அம்மாணவர்கள் சிறைக்குச் செல்லுவதைவிட, கணுக்காலில் இந்தக் கண்காணிப்புக் கருவியைக் கட்டிக் கொள்வது சாதாரணமானது'' என ஒருபுறம் திமிராகவும், இன்னொருபுறம், ''அமெரிக்காவில் இதெல்லாம் நாகரிகமானதப்பா'' என நையாண்டியாகவும் பதில் அளித்துள்ளனர், அமெரிக்க வெளியுறவுத் துறை அதிகாரிகள்.

ரேமண்ட் டேவிஸ் என்ற அமெரிக்கன், பாகிஸ்தானின் லாகூர் நகரில் பட்டப்பகலில் இரண்டு பாகிஸ்தானியர்களைச் சுட்டுக் கொன்றான். பாகிஸ்தான் நீதி

மன்றம் டேவிஸை விசாரிக்கக் கூடாது எனக் கூறிவரும் அமெரிக்கா, டேவிஸைத் தண்டனையில் இருந்து காப்பாற்றுவதற்காக தூதரக விதிகளையே வளைத்து வருகிறது. ஏழை நாடுகளின் சட்டங்களைச் சிறிதளவுகூட மதிக்காத அமெரிக்கா, தனது நாட்டு சட்டங்களைச் சிறிதளவு மீறும் ஏழை நாட்டு மாணவர்களை மிருகங்களைப் போல நடத்துகிறது; சிறைக்கு அனுப்பத் துடிக்கிறது.

தீவிரவாதிகள் தனது நாட்டிற்குள் நுழைவதைத் தடுப்பது என்ற போர்வையில், தனது குடியேற்றச் சட்டங்களைக் கடுமையாக்கி, இத்தகைய அநாகரிகமான ஒடுக்குமுறைகள் அனைத்தையும் சட்டபூர்வமாக்கி வருகிறது, அமெரிக்கா. இந்தியா உள்ளிட்டு ஆசிய கண்டத்தைச் சேர்ந்த பல ஏழை நாடுகளைச் சந்தேகப் பட்டியலில் வைத்துக் கண்காணித்து வரும் அமெரிக்கா, இந்நாடுகளைச் சேர்ந்தவர்கள் அமெரிக்காவில் இறங்கியவுடனேயே சோதனை என்ற பெயரில் அவர்களை நிர்வாணமாக்கி அவமானப்படுத்தி வருகிறது.

இந்தியாவின் முன்னாள் அரசுத் தலைவர் அப்துல் கலாம், முன்னாள் இராணுவ அமைச்சர் ஜார்ஜ் பெர்ணாண்டஸ், இந்தியத் தூதரகத்தைச் சேர்ந்த பெண் அதிகாரி உள்ளிட்ட பல பிரபலமான இந்தியர்கள் அமெரிக்காவின் விமான நிலையங்களில் நிர்வாணப் படுத்தப்பட்டு அவமானப்படுத்தபட்டனர். ஆனாலும், இந்திய அரசு இந்த அவமதிப்பைப் பெருந்தன்மையோடு ஏற்றுக்கொள்ளவே செய்தது.

இந்திய மாணவர்கள் கிரிமினல்களைப் போலக் கண்காணிக்கப்படும் இப்பிரச்சினையில்கூட, ஆரம்பத்தில் வீறாப்புப் பேசிய இந்திய அரசு, பின்னர் அடங்கிப் போனது. ‘‘அமெரிக்காவின் சட்டம் இத்தகைய கண்காணிப்பை அனுமதிக்கும்பொழுது, இந்திய அரசால் வேறெதுவும் செய்ய முடியாது’’ என இந்தக் காட்டுமிராண்டித்தனத்தை நியாயப்படுத்த முயன்றார், வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா. அமெரிக்காவின் மனம் கோணாதபடி நடந்துகொண்டு, அதன் தயவில் வல்லரசாகிவிட வேண்டும் என்ற இலட்சியத்தைக் கொண்ட இந்திய அரசிடமிருந்து இந்த ஜால்ரா சத்தத்தைத் தவிர வேறெதையும் எதிர்பார்க்க முடியாது.

பட்டால்தான் புத்தி வரும் என்பார்கள். அமெரிக்க மோகத்திலும், இந்திய தேசியப் பெருமிதத்திலும் மூழ்கிக் கிடக்கும் இந்திய நடுத்தர வர்க்கம் இதன் பின்னராவது தெளிவடையுமா?

● திப்பு

## அரசுப் பள்ளியின் கட்டணக் கொள்ளை:

# மாணவர் போராட்டத்தின் மீது அடக்குமுறை

திருவாரூர் அருகிலுள்ள அம்மையப்பன் அரசினர் மேல்நிலைப் பள்ளி நிர்வாகத்தினர், அரசு பள்ளிக் கல்வித்துறையின் விதிமுறைகளுக்கு மாறாக, மாணவர்களிடம் கூடுதல் கட்டணமும் கட்டாய நன்கொடையும் வசூலித்ததற்கு எதிராக அப்பள்ளி மாணவர்கள் 11.2.2011 அன்று ஆர்ப்பாட்டத்துடன் வகுப்புப் புறக்கணிப்புப் போராட்டம் நடத்தினர். புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணியின் அம்மையப்பன் மேல்நிலைப்பள்ளிக் கிளையின் சார்பில் நடைபெற்ற இந்தப் போராட்டத்தில் 500-க்கும் மேற்பட்ட மாணவ - மாணவியரும் பெற்றோரும் கலந்து கொண்டனர்.

காலை 11 மணியளவில் வகுப்புப் புறக்கணிப்புப் போராட்டமும் ஆர்ப்பாட்டமும் நடந்துகொண்டிருந்தபோது, தி.மு.க. பிரமுகர்களின் கூட்டாளியான தலைமையாசிரியர் தகவல் தெரிவித்ததும், தி.மு.க. மாவட்டச் செயலாளர் பூண்டி கலைவாணனும் மாவட்ட ஆட்சியர் பாஸ்கரனும் காரில் வந்திறங்கி போலீசை ஏவி மாணவர்கள் மீது தடியடி நடத்த உத்தரவிட்டனர். போலீசு நடத்திய தடியடித் தாக்குதலில் மாணவர்கள் படுகாயமடைந்து சிதறியோட, இப்போராட்டத்தைக் கவனித்துக் கொண்டிருந்த பு.மா.இ.மு. தோழர்கள் ஆசாத், முரளி, குமார், சட்டக் கல்லூரி மாணவர் மாதவன் ஆகியோர் கைது செய்யப்பட்டு, பொய் வழக்கு சோடிக்கப்பட்டு திருச்சி மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.



இத்தாக்குதலையும் பள்ளி நிர்வாகத்தின் சட்டவிரோதக் கட்டணக் கொள்ளையையும் எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடத்த முயன்ற பு.மா.இ.மு.வினருக்கும், அனைத்துக் கட்சிக் கூட்டம் நடத்த முயன்ற தோழமை அமைப்பான விவசாயிகள் விடுதலை முன்னணிக்கும் போலீசு அனுமதி தர மறுத்து, தனது ஆணவத்தைக் காட்டியது. வன்முறைத் தாக்குதலை ஏவியும் முன்னணியாளர்களைக் கைது செய்தும் போராட்டத்தை ஒடுக்கிவிடலாம் என்று ஆளும் கட்சியும் அதிகார வர்க்கமும் மனப்பால் குடிக்கின்றன. இந்த ஆணவத்தை ஒடுக்க, இவ்வட்டார மக்களைத் திரட்டிப் புரட்சிகர அமைப்புகளும் ஜனநாயக சக்திகளும் அடுத்தகட்டப் போராட்டத்துக்கு ஆயத்தமாகி வருகின்றன.

தகவல்: பு.மா.இ.மு., திருவாரூர்.

# விழலுக்கு இறைத்த நீரானதேன்?

## நடுத்தர வர்க்க அறிவுஜீவிகளின் தலைமை, தனது சித்தாந்த ஓட்டாண்டித்தனத்தால் மக்களின் எழுச்சியை மழுங்கடித்துவிட்டது.

**து**னிசியாவிற்கு அடுத்து எகிப்திலும் தன்னெழுச்சியாக நடந்த மக்கள் போராட்டங்களையடுத்து, கடந்த 30 ஆண்டுகளாக அந்நாட்டின் அதிபராக இருந்துவந்த ஹோஸ்னி முபாரக் பதவியிலிருந்து விலகி, தலைநகர் கெய்ரோவிலிருந்து வெளியேறிவிட்டார். எகிப்தையடுத்து, சர்வாதிகார ஆட்சி நடத்திவரும் அதிபர்கள்/மன்னர்களைப் பதவி விலகக் கோரும் போராட்டம் இப்பொழுது அல்ஜீரியா, மொராக்கோ, வடக்கு சூடான், ஏமன், லிபியா, ஜோர்டான், பஹ்ரைன் ஆகிய நாடுகளிலும் பரவியிருக்கிறது.

முதலாளித்துவ ஊடகங்கள் எகிப்திலும் துனிசியாவிலும் நடைபெற்ற போராட்டங்களைப் புரட்சியெனச் சித்திரிக்கின்றன. ''காந்தியின் அஹிம்சை ஆயுதம் உலகம் முழுவதிலும் வெற்றி பெற்று வருவதாகவும், இனி தலைவன், கட்சி எதுவுமே தேவையில்லாமல், மக்களே சமூக மாற்றத்தைக் கொண்டு வந்துவிடுவார்கள்'' என்றும் தினமணி நாளிதழ் இப்போராட்டங்களைக் காட்டி வாதிடுகிறது. ஆனால், எகிப்திலும், துனிசியாவிலும் நடைபெற்ற இந்த ''அஹிம்சைப் புரட்சி'' தமது கோரிக்கைகளுள் ஒன்றைக்கூட முழுமையாக நிறைவேற்ற முடியாமல் தோல்வியில் முடிந்துவிட்டது என்பதுதான் உண்மை. கிளர்ச்சிகாரர்களுள் ஒருவர் சொன்னபடி, ''சர்வாதிகாரி வெளியேறிவிட்டார்; ஆனால், சர்வாதிகார ஆட்சி தொடர்கிறது'' என்பதுதான் இப்போராட்டங்களின் பின் கிடைத்துள்ள பலன்.

துனிசியாவில் அதிபர் அபிடைன் பென் அலி அதிபர் பதவியில் இருந்து இறங்கிய பிறகு, கிளர்ச்சி நடத்திய மக்களின் தலைவர்களைக் கொண்ட இடைக்கால அரசு அமையவில்லை. மாறாக, அவரது ஆட்சியில் அவருக்கு மிகவும் நெருக்கமானவராக இருந்த முகம்மது கன்னோசி அதிபராகவும், பென் அலியின் வேறு சில கூட்டாளிகள் அமைச்சர்களாகவும் பொறுப்பேற்றுள்ளனர். அமெரிக்காவிற்கு நெருக்கமான துனிசிய இராணுவம் இப்புதிய அரசைத் தாங்கிப் பிடித்து நிற்கிறது.

எகிப்தில், ஆட்சி அதிகாரத்தை இராணுவக் கவுன்சிலிடம் ஒப்படைத்துவிட்டுப் பதவி விலகினார், ஹோஸ்னி முபாரக். போராட்டத்தின் பொழுது ஹோஸ்னி முபாரக்கால் துணை அதிபராக நியமிக்கப்பட்ட உமர் சுலைமான், இராணுவத் தளபதி ஹுசைன் தந்தவி, லெப்டினன்ட் ஜெனரல் ஸாமி ஹஃபேஸ் ஆகிய மூவரும்தான் தற்பொழுது அமைக்கப்பட்டுள்ள இடைக்கால அரசின் முக்கியப் புள்ளிகள். இவர்களுள் உமர் சுலைமான் எகிப்திய மக்களால் மிகவும் வெறுக்கப்பட்ட உளவுத் துறையின் தலைவராக இருந்தவர்; அமெரிக்காவிற்கும், இசுரேலுக்கும் மிகவும் நெருக்கமானவர். இராணுவத் தளபதி ஹுசைன் தந்தவி எகிப்தில் எவ்விதமான அரசியல் சீர்திருத்தமும் செய்யத் தேவையில்லை என்ற கொள்கையைக் கொண்டவர்.

''முப்பதாண்டுகளாக எகிப்தில் நிலவி வரும் நெருக்கடி நிலைச் சட்டத்தை ரத்து செய்ய வேண்டும்; புதிய அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்க வேண்டும்; போராட்டத்தில் ஈடுபட்ட மக்களின் பிரதிநிதிகளைக் கொண்ட இடைக்கால அரசை அமைக்க வேண்டும்; 20,000-க்கும் மேற்பட்ட அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும்'' என்ற கோரிக்கைகளுள் ஒன்றைக்கூட புதிய அரசு ஏற்றுக்கொள்ள முன்வரவில்லை. மாறாக, பெயரளவில் நிலவிவந்த நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டதோடு, அரசியலமைப்புச் சட்டத்தையும் தற்காலிகமாக ரத்து செய்துவிட்டது, இராணுவ கவுன்சில். ஹோஸ்னி முபாரக் இராணுவத்தின் பக்கபலத்தோடு கடந்த முப்பதாண்டுகளாக சர்வா

சர்வாதிகாரி ஹோஸ்னி முபாரக்கைப் பதவியில் இருந்து விலகக் கோரி கெய்ரோ நகரிலுள்ள தஹ்ரிர் சதுக்கத்தில் நடந்த முற்றுகைப் போராட்டம்.



திகார ஆட்சியை நடத்தினார் என்றால், தற்பொழுது நேரடி இராணுவ சர்வாதிகாரத்தின் கீழ் எகிப்து தள்ளப்பட்டுள்ளது.

எகிப்திலும், துனிசியாவிலும் நடந்த போராட்டங்களின்பொழுது சர்வாதிகார அதிபர் வெளியேற வேண்டும்; ஊழல் ஆட்சி ஒழிய வேண்டும்; மனித உரிமைகள் காக்கப்பட வேண்டும்; பல கட்சி நாடாளுமன்ற ஜனநாயக ஆட்சி முறை வேண்டும் என்ற சாதாரண முதலாளித்துவ சீர்திருத்தக் கோரிக்கைகள்தான் எழுப்பப்பட்டனவே தவிர, வேறெந்த புரட்சிகரமான கோரிக்கையும் முன்வைக்கப்படவில்லை. குறிப்பாக, அந்நாடுகளில் நிலவும் வறுமை, வேலையில்லாத் திண்டாட்டத்துக்குக் காரணமான தனியார்மயம்-தாராளமயத்துக்கு எதிராக எவ்விதக் கோரிக்கையும் முன்வைக்கப்படவில்லை.



மக்களின் எழுச்சிக்குப் பிறகு அதிபர் பதவியில் இருந்து விலகிவிட்ட ஹோஸ்னி முபாரக் (இடது); முபாரக்கால் துணை அதிபராக்கப்பட்ட உளவுத்துறையின் தலைவர் ஓமர் லைமான்.

இக்கிளர்ச்சியைத் தலைமையேற்று நடத்திய படித்த நகர்ப்புறத்தைச் சேர்ந்த, மேல்தட்டு-நடுத்தர வர்க்கம், சர்வாதிகாரத்தையும், ஊழலையும், மனித உரிமை மீறல்களையும் ஆட்சியாளர்களின் தனிப்பட்ட குணங்களாகவும், ஒழுக்கம் சார்ந்த பிரச்சினையாகவும்தான் பார்த்ததேயொழிய, அவற்றுக்கும் நாட்டின் சமூகப் பொருளாதாரக் கட்டமைப்புக்கும் இடையிலான உறவில் வைத்துப் பார்க்கவில்லை.

துனிசியாவில் 1980-களில் அதிபராக இருந்த ஹபிப் பூர்கைபா, சர்வதேச நாணய நிதியத்தின் கட்டளைப்படி அந்நாட்டுப் பொருளாதாரத்தைத் தனியார்மயமாக்க முழு ஒத்துழைப்பு கொடுக்க மறுத்தார். இதனையடுத்துதான் அந்நாட்டில் மேற்குலக ஏகாதிபத்தியங்களின் ஆதரவோடு இராணுவ ஆட்சிக் கவிழ்ப்பு நடத்தப்பட்டு, அப்பொழுது இராணுவத் தளபதியாக இருந்த பென் அலி ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றினார்.

நாட்டின் பொதுச் சொத்துக்களைத் தனியார்மயமாக்குவது, இறக்குமதிக்கு இருந்த கட்டுப்பாடுகளை நீக்குவது, மிகவும் மலிவான கூலியில் துனிசிய மக்களின் உழைப்பைப் பன்னாட்டு நிறுவனங்கள் சுரண்ட அனுமதிப்பது - என ஏகாதிபத்தியங்கள் திணித்த பல சீர்திருத்தங்களை எவ்விதத் தடையுமின்றி அமுல்படுத்திய பென் அலி, அதற்கு எதிரான போராட்டங்களை இரும்புக் கரம்கொண்டு ஒடுக்கினார். பென் அலியின் சர்வாதிகார ஆட்சியை இந்தப் பின்னணியில் இருந்து துண்டித்துப் பார்க்க முடியாது.

எகிப்தில் தேசியவாதியான நாசருக்குப் பின் பதவிக்கு வந்த அன்வர் சதாத், பாலஸ்தீனப் போராட்டத்துக்கு அளித்து வந்த ஆதரவைக் கைவிட்டு, அமெரிக்காவோடும், இசுரேலோடும் நெருக்கமான உறவுகளை வளர்த்துக் கொண்டார். இதன் பின், மேற்காசியாவில் இசுரேலுக்கு அடுத்து எகிப்துதான் அமெரிக்காவின் நம்பகமான கூட்டாளியாக மாறியது.

அன்வர் சதாத் படுகொலை செய்யப்பட்ட பின் பதவிக்கு வந்த ஹோஸ்னி முபாரக், அமெரிக்க ஆதரவுக் கொள்கைகளைத் தீவிரமாகப் பின்பற்றியதோடு, நாட்டின் பொருளாதாரத்தில் தனியார்மயம்-தாராளமயத்தைப் புகுத்தினார். ''மிகச் சிறந்த பொருளாதார சீர்திருத்தவாதி'' என உலக வங்கி பட்டம் வழங்கி கௌரவிக்கும் அளவிற்கு, ஹோஸ்னி முபாரக் பொருளாதாரச் சீர்திருத்தங்களை அமுல்படுத்தினார். எகிப்தின் இசுரேல் ஆதரவுக் கொள்கை காரணமாக உருவான முசுலீம் அடிப்படைவாத அமைப்புகளை ஒடுக்குவது என்ற பெயரில் அவசர காலச் சட்டங்களை அமுல்படுத்தினார், முபாரக். எகிப்தின் இந்த அடிவருடித்தனத்திற்குப் பரிசாக அமெரிக்கா ஆண்டுதோறும் எகிப்து அரசிற்கு 200 கோடி அமெரிக்க டாலர்களை உதவியாக வழங்கியது. இதைப் பயன்படுத்திக் கொண்டு, மேற்காசியாவில் இசுரேலுக்கு அடுத்து மிகப் பெரிய இராணுவத்தையும், போலீசு படைகளையும், உளவுத் துறையையும் உருவாக்கினார், முபாரக். இதன் விளைவாக, இராணுவம் நாட்டின் அதிகார மையமாக உருவெடுத்தது.

முபாரக் குடும்பம், இராணுவ உயர் அதிகாரிகள் ஆகியோரை உள்ளடக்கிய ஒரு சிறு கும்பல், ஊழல் மற்றும் கார்ப்பரேட் பகற்கொள்ளையின் மூலம் நாட்டின் வளங்கள் அனைத்தையும் சுருட்டிக் கொண்டது. இத்தனியார்மயக் கொள்ளையின் காரணமாக எகிப்தில் வேலையில்லாத் திண்டாட்டம் 20 சதவீதத்தைத் தொட்டது. குறிப்பாக, இளைஞர்கள் மத்தியில் வேலையில்லாத் திண்டாட்டம் 50 சதவீதமாக அதிகரித்தது. முபாரக்கின் ஆட்சியில் 44 சதவீத எகிப்திய மக்கள் வெறும் இரண்டு டாலர் தினக்கூலியில் வாழ வேண்டிய வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

இப்பொருளாதாரத் தாக்குதல்களுக்கு எதிரான தொழிலாளர் போராட்டம் 2006-ஆம் ஆண்டிலிருந்து தீவிரமடையத் தொடங்கியது. குறிப்பாக, ஏப்ரல் 6, 2008 -இல் மஹல்லா அல் குப்ரா என்ற தொழில் நகரில் நடந்த வேலைநிறுத்தப் போராட்டம் மிக முக்கியமானதாகும். 28,000 தொழிலாளர்கள் பங்கேற்ற இப்போராட்



எகிப்தின் கஸ்ல் அல்-மஹல்லா என்ற நகரில் நடந்த, 10,000-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பங்கு கொண்ட வேலைநிறுத்தப் போராட்டம். (கோப்புப் படம்)

டம் இரத்த வெள்ளத்தில் மூழ்கடிக்கப்பட்டாலும், மஹல்லாவைத் தொடர்ந்து எகிப்தின் பல பகுதிகளில் தனியார்மயக் கொள்கைக்கு எதிரான தொழிலாளர்களின் போராட்டங்கள் அலைஅலையாக எழத் தொடங்கின. இந்தப் போராட்டங்கள் அரசுக்கு எதிரான கலகமாக உருவெடுத்தால், எகிப்தின் இசுரேல் ஆதரவுக் கொள்கை, தனியார்மய ஆதரவுக் கொள்கைகளைப் பாதிக்காத வகையில் ஆட்சி மாற்றம் சுமுகமான முறையில் நடைபெற வேண்டும் என்பதில் அமெரிக்கா குறியாக இருந்தது.

நகர்ப்புற நடுத்தர வர்க்க அறிவுஜீவிகளால் தொடங்கப்பட்ட ஏப்ரல்-6 இயக்கம் இத்தொழிலாளர் போராட்டங்களை ஆதரித்து வந்தாலும், அவர்கள் இப்போராட்டத்தை ஏகாதிபத்தியங்கள் திணிக்கும் மறுகாலனியாதிக்கத்துக்கு எதிரான போராக வளர்த்துச் செல்லவில்லை. ஜனநாயகம், மனித உரிமை பற்றிய முதலாளித்துவ பிரமைகளுக்கு ஆட்பட்டுள்ள அவ்வர்க்கம் முபராக்கை வெளியேற்றுவது, பல கட்சி நாடாளுமன்ற ஆட்சி முறையைக் கோருவது என்பதாக அப்போராட்டத்தைச் சுருக்கிவிட்டது.

முசுலீம் சகோதரத்துவம் உள்ளிட்ட எதிர்க்கட்சிகளும்; ஃப்ரீடம் ஹவுஸ், ஜனநாயகத்திற்கான தேசிய அறக்கட்டளை போன்ற அமெரிக்க நிறுவனங்களால் பயிற்றுவிக்கப்பட்ட அறிவு ஜீவிகளும், ''முபாரக்கே வெளியேறு'' என்ற வரம்பைத் தாண்டி போராட்டம் சென்றுவிடாமல் தடுப்பதில் வெற்றி பெற்றனர். இதற்கு ஏற்பவே, சர்வதேச அணுசக்தி கமிசனின் தலைவராக இருந்த, அமெரிக்காவின் தலையாட்டி பொம்மையாக இருந்துவந்த முகம்மது எல் பராதி, இவர்களால் கிளர்ச்சியின் தலைவராக முன்னிறுத்தப்பட்டார்.

அதே சமயம் எகிப்து மக்களின் போராட்டத்தை இராணுவம் ஆதரிப்பதைப் போன்ற ஒரு நாடகம் அமெரிக்காவாலும் உயர் இராணுவ அதிகாரிகளாலும் சேர்ந்து நடத்தப்பட்டது. கிளர்ச்சிக்காரர்களை ஒடுக்க போலீசும் கூலிப்படைக் குண்டர்களும் இறக்கிவிடப்பட்டு, இராணுவம் நடுநிலை வகிப்பதைப் போலக் காட்டப்பட்டது. இந்தப் பின்னணியில் இருந்துதான் ''போராடும் மக்களைச் சுடமாட்டோம்'' என எகிப்து இராணுவம் அறிவித்தது. போராட்டத் தலைமை, தமது குட்டி முதலாளித்துவக் கண்ணோட்டம் காரணமாக, இராணுவம்தான் இச்சர்வாதிகார ஆட்சியின் குவிமையமாக இருக்கிறது என்பதைப் பார்க்கத் தவறி, இராணுவத்திலுள்ள சில கறுப்பு ஆடுகள்தான் சர்வாதிகாரி முபாரக்கை ஆதரிப்பதாக எண்ணி வந்ததை, அமெரிக்கா தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டது.

குறிப்பாக, முபராக் இராணுவத்திடம் அதிகாரத்தை ஒப்படைத்துவிட்டு வெளியேறியவுடன், முதலாளித்துவ ஊடகங்களால் இப்போராட்டத்தின் நாயகனாக முன்னிறுத்தப்பட்ட வேல் கோனிம், ''அனைவரும் வேலைக்குத் திரும்புங்கள்; முன்னெப்போதையும்விடக் கடினமாக உழைத்து, எகிப்து வளர்ந்த நாடாக மாற உதவுங்கள்'' எனத் தனது இணைய தளத்தில் அறைகூவல் விடுத்துப் போராட்டத்தைப் பின்னுக்கு இழுக்க முயன்றார். கோனிமை ஆதரித்த கும்பல் ஆட்சியில் பங்கு பெற இராணுவ ஆட்சியாளர்களோடு பேச்சுவார்த்தை நடத்தவும் செய்தது. கோனிமின் துரோகத்துக்கு எதிரான போராட்டங்கள் இணைய தளத்தில் நடந்த அளவிற்கு தெருவில் நடைபெறவில்லை.

காங்கிரசுக்குப் பதிலாக பா.ஜ.க., கருணாநிதிக்குப் பதிலாக ஜெயா ஆட்சியைப் பிடித்தால் என்ன 'மாற்றம்' வருமோ, அதைப் போன்றதொரு மாற்றம்தான் எகிப்திலும் துனிசியாவிலும் நடந்திருக்கிறது. பிற அரபு நாடுகளில் நடந்து வரும் போராட்டங்களும் இதே திசையில்தான் செல்கின்றன. இப்படிக் கூறுவது சர்வாதிகாரத்துக்கு எதிராகப் போராடத் துணிந்த அம்மக்களின் வீரத்தையோ, தியாகத்தையோ குறைத்து மதிப்பிடுவது ஆகாது. போராட்டத்திலிருந்து படிப்பினைகளைப் பெறுவதற்கு, அதன் பலவீனங்களையும் குறைபாடுகளையும் பரிசீலனை செய்வது தவிர்க்க முடியாதது.

வட ஆப்பிரிக்கா மற்றும் மேற்காசியாவைச் சேர்ந்த அரபு நாடுகளில் நடந்து வரும் ஜனநாயகத்திற்கான போராட்டங்கள், முசுலீம் மக்கள் மத அடிப்படைவாத அமைப்புகளையும் கருத்துக்களையும்தான் ஆதரிப்பார்கள் என மேற்குலக ஏகாதிபத்தியவாதிகளும், இந்தியாவின் பார்ப்பன பாசிஸ்டுகளும் பரப்பி வரும் அவதூறைச் சுக்கு -றாக உடைத்துப் போட்டுவிட்டன. இப்போராட்ட அனுபவங்கள், அமெரிக்க மேலாதிக்கத்தை வீழ்த்தி நாட்டை விடுதலை செய்வது என்ற திட்டத்தின் கீழ் இம்மக்களை அணி திரட்ட வேண்டிய அவசியத்தையும், ஒரு புரட்சிகரக் கட்சி, அதன் கீழ் அணி திரட்டப்பட்ட மக்கள், மக்கள் இராணுவம் - இவை எதுவுமின்றி சமூக மாற்றத்தையோ, உழைக்கும் மக்களுக்கான ஜனநாயகத்தையோ கொண்டு வந்து விட முடியாது என்பதையும் உணர்த்தியுள்ளன.

● குப்பன்

## தெற்கு சூடான் விடுதலை:

# ஏகாதிபத்தியங்களின் பகடைக்காயானது

**கச்சா எண்ணெய் வளத்தைக் கைப்பற்றுவதற்காகவே, தெற்கு சூடானின் விடுதலையை ஏகாதிபத்திய நாடுகள் அங்கீகரித்துள்ளன.**

கடந்த ஜனவரியில், உலக நாடுகளின் மேற்பார்வையில் நடந்த கருத்துக் கணிப்புத் தேர்தலில் ஏறத்தாழ 99 சதவீத வாக்குகளைப் பெற்று, வடக்கு சூடானிலிருந்து பிரிந்து தெற்கு சூடான் தனி நாடாவதற்கு அங்கீகாரம் பெற்றுள்ளது. வரும் ஜூலை 9-ஆம் தேதியன்று ஜூபா நகரைத் தலைநகராகக் கொண்ட தெற்கு சூடான் அதிகாரபூர்வமாகத் தனி நாடாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. புதிய நாடான தெற்கு சூடானைத் தமிழினவாதிகள் வாழ்த்தி வரவேற்கின்றனர். ஆப்பிரிக்க கண்டத்தில் மிகப் பெரிய நாடான சூடானிலிருந்து தெற்கு சூடான் தனியாகப் பிரிந்து செல்வதற்கான வாக்கெடுப்பு நடந்துள்ளதையொட்டி, இது போலவே நாளை ஈழம் மலரும் என்று பல தமிழினவாதிகள் நம்பிக்கை தெரிவிக்கின்றனர்.

தெற்கு சூடானைத் தனிநாடாக்குவதற்கான கருத்துக் கணிப்புத் தேர்தலை நடத்துமாறு சூடான் அரசை ஏகாதிபத்தியங்கள் நிர்பந்திக்கக் காரணம் என்ன? நீண்டகாலமாக தெற்கு சூடானின் பிரிவினைக் கோரிக்கையை ஏற்க மறுத்து ஒடுக்கி வந்த ஒன்றுபட்ட சூடானின் அதிபரான ஓமர் அல் பஷீர், கருத்துக் கணிப்புத் தேர்தல் நடத்தவும், முடிவுகளை மனப்பூர்வமாக ஏற்பதாக அறிவிக்கவும் காரணம் என்ன? இது, தெற்கு சூடானின் ஆயுதப் போராட்டத்தின் தாக்கத்தினால் ஏற்பட்ட விளைவா? தனிநாடாக உருவாகியுள்ள தெற்கு சூடான் விடுதலையைப் பாட்டாளி வர்க்கம் ஆதரிக்க வேண்டுமா? - இந்த விவாதங்களுக்குள் நுழையும் முன் சூடான் பற்றிய எதார்த்த நிலையை வரலாற்றுப் பின்னணியோடு நாம் அறிந்து கொள்வது அவசியம்.

பல -று ஆண்டுகளுக்கு முன்பு எகிப்திய படையெடுப்பைத் தொடர்ந்து, அரபு மொழி சூடானின் ஆட்சி மொழியாகியதால், அராபியரிடமிருந்து வேறுபட்டுள்ள போதிலும் அரபு மொழி பேசும் வடக்கு சூடானிய கருப்பினத்தவர்களும் தம்மை அராபியர்கள் என்றே அழைத்துக் கொள்கின்றனர். வடக்கு சூடானில் இஸ்லாமிய நாகரிகம் வளர்ந்த அதேநேரத்தில், தெற்கே சிறுபான்மையினரான பழங்குடியினர் பல்வேறு மொழிகளுடன் தமது மரபுவழி பழக்க வழக்கங்களுடன் இருந்தனர். மதம்,மொழி, பண்பாடு முதலானவற்றில் வடக்கு சூடானுக்கும் தெற்கு சூடானுக்குமிடையே வேறுபாடும் முரண்பாடுகளும் நீடித்தன. ஆங்கிலேயர்கள் 19 -ஆம் -ற்றாண்டில் சூடான் முழுவதையும் தமது காலனியாட்சியின் கீழ் கொண்டு வந்தனர். காலனிய ஆட்சியிலும் வடக்கு - தெற்கு முரண்பாடு தொடர்ந்தது. ஆங்கிலேயர்கள் வடக்கு சூடானில் கல்விக்கூடங்களை உருவாக்கி, தமது ஆட்சிமுறைக்கு ஏற்ப வடக்கு சூடானியர்களைப் பயிற்றுவித்தனர். இரண்டாம் உலகப் போரில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் பலவீனமடைந்ததைத் தொடர்ந்து 1956-இல் வடக்கு சூடானியர்களிடம் பெயரளவிலான சுதந்திரத்தை அளித்துவிட்டு ஆங்கிலேயர்கள் வெளியேறினர். தென்பகுதியின் பழங்குடியினரை நாகரிகப்படுத்தும் பொறுப்பு கிறித்துவ மிஷினரிகளிடம் ஒப்படைக்கப்பட்டது. அடுத்து வந்த காலங்களில் தெற்கு சூடான் கிறித்துவமயமாகியது.

இஸ்லாமிய வடக்கு சூடானின் அராபிய அரசாங்கம், தனது பேரினவாத அடக்குமுறையை தெற்கில் ஏவி, பல்வேறு மொழிகள் பேசும் பழங்குடி மக்களை அரபு மொழி பேசுமாறு கட்டாயப் படுத்தியது. வடக்கு சூடானில் தென்பகுதியைச் சேர்ந்தவர்கள் குடியேறவோ, தொழில் செய்யவோ அனுமதி மறுக்கப்பட்டது. சூடானின் டார்பர் பிராந்தியத்தைத் தொடர்ந்து, 80-களில் தெற்கு சூடானில் எண்ணெய் கண்டறியப்பட்டு, எண்ணெய் மூலம் கிடைக்கும் வருவாய் அதிகரித்த போதிலும், வடக்கு சூடானின் ஆட்சியாளர்கள் தெற்கு சூடானைத் தொடர்ந்து புறக்கணித்து வந்தனர். சூடானின் அப்போதைய சர்வாதிகார அதிபரான நிமோரி, சவூதி அரேபியா



வுடன் நெருக்கமான உறவை ஏற்படுத்திக் கொண்டு இஸ்லாமிய ஷாரியத் சட்டத்தை நாடெங்கும் திணித் தார். இது, இஸ்லாமியர் அல்லாத தெற்கு சூடானியர் களிடம் அதிருப்தியைத் தோற்றுவித்தது. இக்கட்டாய சட்டத்தை எதிர்த்து பொர் நகரிலிருந்த இராணுவ முகாம் அரசுக்கெதிராக கலகம் செய்தது. அதே நகரைச் சேர்ந்த ஜான் கரங் என்ற இராணுவத் தளபதி கலகக்கா ரர்களுடன் சேர்ந்து கொண்டு போராட்டத்தைத் தொடர்ந்தார். அவரது தலைமையில் பின்னர் 1983-இல் உருவானதுதான் சூடான் மக்கள் விடுதலை இயக்கம் (SPLM). இதன் தலைமையில், சூடான் மக்கள் விடு தலை இராணுவம் கட்டியமைக்கப்பட்டு, அது அரசுக் கெதிராக ஆயுதப் போராட்டத்தைத் தொடர்ந்தது.

1989-இல் சூடானின் இராணுவத் தளபதி அல் பஷீர், இஸ்லாமிய மத அடிப்படைவாதக் கட்சியான தேசிய இஸ்லாமிய முன்னணியுடன் சேர்ந்து ஆட்சிக் கவிழ்ப் பின் மூலம் அதிகாரத்தைக் கைப்பற்றினார். சூடானை இஸ்லாமிய அடிப்படைவாதப் பாதையில் இழுத்துச் சென்றார். பின்லாடன் ஆதரவாளர்களுக்கு சூடானில் அடைக்கலமளித்தார். அல் பஷீர் அரசு, அமெரிக்க எதிர்ப்பு இஸ்லாமிய அடிப்படைவாதிகளின் பிடியில் சென்றதால் சூடான் அரசுடன் அமெரிக்கா முரண்பட் டது. தெற்கிலிருந்த சூடான் மக்கள் விடுதலை இராணு வத்துக்கு ஆயுத உதவிகள் செய்து உள்நாட்டுப் போரைக் கொம்பு சீவிவிட்டது. ஐ.நா. மன்றத்தின் பெயரால் அந் நாட்டின் மீது பொருளாதாரத் தடை விதித்தது. இரசா யன ஆயுதங்கள் தயாரிப்பதாகக் குற்றம் சாட்டி, அந்நாட் டின் மீது ஏவுகணைத் தாக்குதலை நடத்தியது. தெற்கு சூடானின் எண்ணெய் வளத்தைக் கொள்ளையிடுவதற் கான ஏகாதிபத்தியங்களின் தீராப்பசி தனிநாடு கோரிக் கையாக உருமாறியது. அரபு இஸ்லாமிய பேரினவா தத்தை எதிர்த்து கிறித்துவ தெற்கு சூடான் போரிடுவதா கவும், இது தேசிய சுயநிர்ணய உரிமைப் போர் என்றும் மேற்கத்திய ஊடகங்கள் ஊதிப் பெருக்கத் தொடங்கின.

எண்ணெய் வளத்தைக் கொள்ளையிட ஏகாதிபத்தியங்கள் நடத்தும் ஜனநாயக நாடகம்: தனிநாடாகப் பிரிந்து செல்ல கடந்த ஜனவரியில் தெற்கு சூடானில் நடந்த கருத்துக்கணிப்புத் தேர்தல்.




கிறித்துவ சபைகளுடன் நெருக்கமான உறவைக் கொண்டுள்ள தெற்கு சூடானின் மக்கள் விடுதலை இராணுவத்துக்குக் கென்யா வழியாக அமெரிக்கா இர கசியமாக ஆயுத உதவிகளைச் செய்தது. தெற்கு சூடா னின் நகரங்களில் மட்டும் அரசுப் படைகள் அதிகாரம் செலுத்த, கிராமப்புறங்களை சூடான் மக்கள் விடுதலை இயக்கம் கட்டுப்படுத்தியது. சூடான் அரசுப் படை களுக்கும் தெற்கு சூடானின் மக்கள் விடுதலை இராணு வத்துக்கும் இடையிலான நீண்ட நெடிய உள்நாட்டுப் போரில் ஏறத்தாழ 2 இலட்சம் மக்கள் கொல்லப்பட் டனர். 4 இலட்சம் பேர் அகதிகளாயினர்.

தெற்கு சூடானின் மக்கள் விடுதலை இராணுவப் படையின் அரசியலும் சித்தாந்தமும் வலதுசாரி குட்டி முதலாளித்துவ தன்மை கொண்டது. தெற்கு சூடான் பிரிந்து தனிநாடாவதா அல்லது சுயாட்சி உரிமையா என் பதில்கூட இந்த இயக்கம் தெளிவின்றி இருந்தது. மக் களைச் சார்ந்திராமல் ஆயுதங்களையே முதன்மையாகச் சார்ந்திருந்த இந்த இராணுவப் படையில் அடிக்கடி பிளவுகளும் மோதல்களும் தொடர்ந்தன. தெற்கு சூடான் ஒரு தேசிய இனமாக உருவாகி வளரும் போக்கு முழுமையடையாததால், பல்வேறு மரபினக் குழுக்கள் பிளவுபட்டு மோதிக் கொண்டன.

ஏற்கெனவே டார்பர் பிராந்தியத்தில் இனப்படு கொலையைக் கட்டவிழ்த்துவிட்ட அதிபர் அல் பஷீ ரைப் போர்க்குற்றவாளியாக அமெரிக்க - ஐரோப்பிய ஏகாதிபத்தியங்கள் குற்றம் சாட்டின. அனைத்துலக நீதி மன்றத்தில் அவர் போர்க்குற்றவாளியாகச் சித்தரிக்கப்பட் டார். உண்மையில் மேற்கத்திய ஏகாதிபத்தியங்களின் நோக்கம், டார்பர் பற்றியது அல்ல. போர்க்குற்றம் சாட்டு வதன் மூலம் அதிபர் மீது நிர்ப்பந்தங்கள் கொண்டுவரு வதற்குத்தான். சூடானின் எண்ணெய் வளத்தையும், கனிம வளத்தையும் நைல் நதியின் நீராதாரங்களையும் கைப்பற்றிக் கொள்ளையிடுவதற்காகவே பொருளாதாரத் தடைகளும் நிர்ப்பந்தங்களும் ஏகாதிபத்தி யங்களால் ஏவப்பட்டன.

இந்நிலையில், 2001 செப்டம்பர் 11 நிகழ்வுப் பிறகு, பயங்கரவாதத்துக்கு எதி ரான போர் என்ற பெயரில் அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்தியங்களின் தாக்குதல் தீவிரமானதும், சூடானின் ஆளும் வர்க்கம் தனது நிலையை மாற்றிக் கொண்டு அமெரிக்காவுடன் இணக்க மான போக்கை மேற்கொள்ளத் தொடங் கியது. அதைத் தொடர்ந்து, சூடான் மீதான அமெரிக்காவின் பொருளாதாரத் தடைகள் படிப்படியாக நீக்கப்பட்டன. எண்ணெய் வளமிக்க தெற்கு சூடானில் எண்ணெய் அகழ்வுப் பணிகளில் சீனா, பாகிஸ்தான், மலேசியா, பிரான்ஸ் ஆகிய நாடுகள் ஈடுபட்டு வருகின்றன. இத் தொழிலில் சீனா முன்னணியில் உள்ளது. தெற்கு சூடான் போராளிகள் தொடுத்த

ஆயுதப் போராட்டம் காரணமாக மேற்கத்திய எண்ணெய் நிறுவனங்கள் வெளியேறியதால், அந்த இடத்தை சீனா பிடித்துக் கொண்டது. இப்போது சீனாவை அகற்றிவிட்டு மேற்கத்திய எண்ணெய் கம்பெனிகள் காலூன்றத் துடிக்கின்றன.

சூடான் அரசே அமெரிக்காவுக்கு விசுவாசமாக இறங்கி வந்த பிறகு, அதற்கெதிராக தெற்கு சூடானின் கலகப் படைகளுக்கு அமெரிக்கா ஆயுத உதவி செய்து சூடான் அரசை நிர்பந்திக்க வேண்டிய அவசியம் எழவில்லை. எனவே, சமரசத்துக்கு வருமாறு இரு தரப்பையும் அழைத்து தெற்கு சூடானைத் தனி நாடாக்கத் தீர்மானித்தது. மேலும், தெற்கு சூடானைவிட அதற்கு வடக்கேயுள்ள அபெய் மாகாணத்தில்தான் அதிக அளவுக்கு எண்ணெய் கிடைக்கிறது. வடக்கு சூடானுக்கும் தெற்கு சூடானுக்கும் இடையிலுள்ள அபெய் மாகாணம் யாருடன் சேர்வது என்பது குறித்துத் தனியாக வாக்கெடுப்பு நடத்துகிறது. தொடரும் உள்நாட்டுப் போர் காரணமாக, தெற்கு சூடான் மற்றும் அபெய் மாகாணங்களில் பெட்ரோலிய உற்பத்தி பாதிக்கப்பட்டு ஏகாதிபத்தியங்கள் கொள்ளையிட முடியாமல் போனதால், ஏகாதிபத்தியவாதிகளின் நிர்பந்தத்தாலேயே இப்படியொரு சமரச ஏற்பாடு நடந்துள்ளது.



அமெரிக்க ஆதரவில், வடக்கு சூடானின் இஸ்லாமியப் பேரினவாதத்தை எதிர்த்துப் போரிட்ட தெற்கு சூடானின் மக்கள் விடுதலை இராணுவப் படை.

அமெரிக்காவின் தலையீட்டினால் கடந்த 2005-ஆம் ஆண்டில் சூடான் அரசுக்கும் தெற்கு சூடானின் மக்கள் விடுதலை இயக்கத்துக்குமிடையே அமைதி ஒப்பந்தம் கையெழுத்தாகி, 22 ஆண்டு கால உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்தது. அப்போது தெற்கு சூடானுக்கு தன்னாட்சி அதிகாரம் வழங்கப்பட்டு, இது 6 ஆண்டுகள் நீடிக்கும் என்று அறிவிக்கப்பட்டது. ஐ.நா. அமைதிப் படை கண்காணிப்பில் சமாதான நடவடிக்கைகள் தொடர்ந்தன.

நேற்றுவரை சர்வதேசப் போர் குற்றவாளியாகச் சித்தரிக்கப்பட்ட சூடானின் அதிபர் பஷீர், தெற்கு சூடானில் கருத்துக் கணிப்புத் தேர்தலை அமைதியான முறையில் நடத்த முன்வந்ததும், அவருக்குப் போர் குற்றங்களிலிருந்து மன்னிப்பு வழங்க ஐ.நா.பாதுகாப்புக் கவுன்சில் முடிவு செய்துள்ளது. பயங்கரவாதப் பட்டியலில் இருந்து சூடானை நீக்க அமெரிக்காவும் ஒப்புதல் தெரிவித்துள்ளது. அமெரிக்காவுக்கு ஆமாம் சாமி போட்டதால், போர்க் குற்றவாளியான அதிபர் அல் பஷீர் இப்போது புனிதமானவனாகிவிட்டார். எண்ணெய் வளத்தைக் கொள்ளையிடவும் இஸ்லாமிய வட ஆப்பிரிக்காவில் தமது விசுவாச கிறித்துவ நாட்டை உருவாக்குவதற்காகவுமே சூடான் இப்போது பிளவுபடுத்தப் படுகிறது.

சூடானிலிருந்து பிரிந்து தனி நாடாகியுள்ள தெற்கு சூடான் ஒரு சுதந்திர நாடல்ல. அது ஏகாதிபத்தியங்களின் ஆதிக்கத்துக்கான களம். அவற்றின் காலனியாதிக்க - மேலாதிக்க ஆட்டங்களுக்கான பகடைக்காய் என்பதுதான் உண்மை. ஏகாதிபத்தியப் பொன் விலங்கைப் பூட்டிக் கொண்டாலென்ன, எப்படியோ வடக்கு சூடானின் பேரினவாத இரும்பு விலங்கு போனால் போதும் என்று நியாயவாதம் பேசி ஏகாதிபத்திய வலையில் வீழ்வது தேசிய இன விடுதலையாகாது. ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடாமல் எந்தவொரு தேசிய இன விடுதலையையும் சாதிக்கவும் முடியாது. இந்த உண்மைகளை உலகுக்கு உணர்த்திவிட்டு அமெரிக்க - ஐரோப்பிய ஏகாதிபத்தியங்களின் கண்காணிப்புப் பிடியில் சிக்கித் தவிக்கிறது தெற்கு சூடானின் 'தேசிய இன விடுதலை'.

ஏகாதிபத்தியத்தை வலுப்படுத்தக்கூடிய அதன் மேலாதிக்கத்துக்குப் புறக்காவல் அரண்களாக அமைந்துள்ள இத்தகைய 'விடுதலை' களை ஆதரிப்பதானது, தேசிய இன விடுதலைக்கே எதிரான ஏகாதிபத்தியக் கைக்கூலித்தனமாகும். தேசிய இனங்களின் உரிமையையும் ஜனநாயகத்தையும் மதித்து அங்கீகரிக்கும் சைவப்புலியாக ஏகாதிபத்தியம் மாறிவிட்டதாகக் காட்டி ஏய்க்கும் அயோக்கியத்தனமாகும்.

உலகின் அரசியல் - பொருளாதார நிலைமைகளை அலசி ஆராயாமல், உணர்ச்சி வேகத்தில் தமிழினவாதிகள் சூடானைப் போல ஈழமும் மலரும் என்று நம்புவது அவர்களது அரசியல் - சித்தாந்த ஓட்டாண்டித்தனத்தையே காட்டுகிறது. இப்படித்தான் கொசாவோ விடுதலையையும் இவர்கள் ஆதரித்து நின்றனர். திபெத்தின் தலாய்லாமா இந்தியாவின் கைக்கூலி என்று நிரூபிக்கப்பட்டுள்ள போதிலும், அவரது இலட்சியம் உயர்வானது என்று நியாயப்படுத்துகின்றனர். ஏதோ ஒரு வழியில், எப்படியாவது தனிநாடு அமைந்தால் அதை ஆதரிப்பது என்பதற்கு மேல் இதில் ஒரு வெங்காயமும் இல்லை. ஏகாதிபத்தியத்தைப் பலவீனப்படுத்தாத இத்தகைய பிற்போக்குத்தனமான 'விடுதலை' களைப் பாட்டாளி வர்க்கம் வரவேற்று ஆதரிக்கவும் எந்த அடிப்படையும் இல்லை.

● பாலன்

## போஸ்கோவிற்கு அனுமதி:

# கார்ப்பரேட் பகற்கொள்ளைக்குப் பட்டுக் கம்பளம்

**2-ஜி, எஸ்-பேண்ட் அலைக்கற்றைகளைப் போல, ஒரிசாவின் இரும்புக் கனிம வளமும் அடிமாட்டு விலைக்கு விற்கப்பட்டுள்ளது.**

தென்கொரியாவைச் சேர்ந்த தேசங்கடந்த தொழிற்கழகமான போஸ்கோ நிறுவனம், ஒரிசாவின் ஜகத்சிங்பூர் மாவட்டத்தில் அமைக்கத் திட்டமிட்டுள்ள உருக்காலை மற்றும் அவ்வுருக்காலையோடு சேர்ந்து அமையவுள்ள மின் உற்பத்தி நிலையம், துறைமுகம் ஆகியவற்றுக்காக விவசாய, வன நிலங்களைக் கையகப்படுத்துவதற்கு விதிக்கப்பட்டிருந்த தடையை மைய அரசின் சுற்றுப்புறச் சூழல் அமைச்சகம் விலக்கிக் கொண்டுவிட்டது. இதனையடுத்து, இக்கையகப்படுத்தலுக்கு எதிராக அப்பகுதியைச் சேர்ந்த விவசாயிகளும், பழங்குடியின மக்களும், மீனவர்களும் நடத்தி வரும் போராட்டமும் மீண்டும் தீவிரமடைந்துள்ளது. இந்திய அரசை போஸ்கோவின் கூலிப் படையெனச் சாடியுள்ள அம்மக்கள், ''தங்கள் பிணங்களின் மீதேறிப் போய்தான் நிலங்களைக் கையகப்படுத்த முடியும்'' எனச் சூளுரைத்துள்ளனர்.

சுற்றுப்புறச் சூழல் மற்றும் வனச் சூழலைப் பாதுகாக்க ஏற்கெனவே இருந்து வரும் பல விதிகளையும் சட்டங்களையும் போஸ்கோ மீறியிருப்பதைக் காட்டித்தான், அத்திட்டத்திற்கு வழங்கப்பட்டிருந்த சுற்றுப்புறச் சூழல் அனுமதிக்கும், நிலம் கையகப்படுத்துவதற்கும் இடைக்கால தடையை விதித்தது, சுற்றுப்புறச் சூழல் அமைச்சகம். போஸ்கோவின் அத்துமீறல்களை விசாரிக்க சுற்றுப்புறச் சூழல் அமைச்சர் ஜெய்ராம் ரமேஷால் நியமிக்கப்பட்ட மீனா குப்தா கமிட்டியின் பெரும்பான்மை உறுப்பினர்கள், போஸ்கோவிற்கு வழங்கப்பட்டுள்ள சுற்றுப்புறச் சூழல் மற்றும் வனச் சூழல் அனுமதியை நிரந்தரமாக ரத்து செய்ய வேண்டும் எனப் பரிந்துரைத்தனர். அதே சமயம் அக்கமிட்டியின் தலைவரான மீனா குப்தா, கூடுதலாக நிபந்தனைகள் விதித்து போஸ்கோவிற்கு மீண்டும் அனுமதி வழங்க வேண்டும் எனப் பரிந்துரைத்தார். மீனா குப்தா, சுற்றுப்புறச் சூழல் அமைச்சகச் செயலராக இருந்த பொழுதுதான் போஸ்கோவிற்குச் சுற்றுப்புறச் சூழல் அனுமதி வழங்கப்பட்டது என்ற ஒற்றை வரி உண்மையே ஜெய்ராம் ரமேஷின் கபடத்தனத்தைப் புரிய வைத்துவிடும். போஸ்கோ ஆலை அமையவுள்ள வனப் பகுதியின் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கக் கூடுதலாக 60 புதிய நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளதைக் காட்டி போஸ்கோ ஆலைக்கு மீண்டும் அனுமதி வழங்கப்பட்டுள்ளதை நியாயப்படுத்தியிருக்கிறார், சுற்றுப்புறச் சூழல் மற்றும் வனத் துறை அமைச்சர் ஜெய்ராம் ரமேஷ்.

ஏற்கெனவே இருந்து வரும் விதிகளை மதிக்காத போஸ்கோ, தனக்குப் புதிதாக விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை இம்மி பிசகாமல் கடைப்பிடிக்கும் என்பதற்கு எந்த உத்தரவாதமும் கிடையாது. போஸ்கோவின் அத்தனை அத்துமீறல்களுக்கும் துணையாக நின்று, அத்திட்டத்திற்குச் சுற்றுப்புறச் சூழல் மற்றும் வன அனுமதியை அளித்த அதிகார வர்க்கக் கும்பல், போஸ்கோ மீண்டும் அத்துமீறலில் ஈடுபட்டால், அதனைத் தட்டிக் கேட்பார்கள் என்பதற்கும் எந்த உத்தரவாதமும் கிடையாது.

இவ்வுருக்காலை அமையவுள்ள மொத்த நிலப்பரப்பில் - 1,620 ஹெக்டேரில் 1,253 ஹெக்டேர் நிலப்பரப்பு வனப்பகுதியாகும். வன உரிமைச் சட்டத்தின்படி, கிராம சபைகளிடமிருந்துதான் வன அனுமதியைப் பெறுவதற்கான சான்றிதழைப் பெற வேண்டும். போஸ்கோவிற்கு ஏற்கெனவே வன அனுமதி வழங்கப்பட்டபொழுது, இச்சட்ட விதி அப்பட்டமாகவே மீறப்பட்டது. ஒரிசா மாநில அரசு இவ்விதிக்குப் புறம்பாக, சம்பந்தப்பட்ட கிராம

ஒரிசா அர அதிகாரிகள் மற்றும் போஸ்கோ நிர்வாகிகள், தமது கிராமத்திற்குள் நுழைவதைத் தடுப்பதற்காக, எல்லையில் காவலுக்கு நிற்கும் திங்கியா கிராம விவசாயிகள்.



சபைகள் போஸ்கோவிற்கு அனுமதி வழங்கத் தெரிவித்த எதிர்ப்புகளை மறைத்துவிட்டு, இவ்வனப்பரப்பில் வசிக்கும் பழங்குடியின மக்களும் பழங்குடியினர் அல்லாத விவசாயிகளும் வன உரிமைச் சட்டத்தின் கீழ் வரமாட்டார்கள் என்ற மோசடியான சான்றிதழைத் தானே தயாரித்துக் கொடுத்து, போஸ்கோ வன அனுமதியைப் பெறுவதற்கு உதவியது.

**ஒரிசாவின் உயர் ரக இரும்புக் கனிமத்தை வெட்டியெடுப்பதற்கு போஸ்கோ நிறுவனம் இந்திய அரசிற்குத் தரவுள்ள உரிமத் தொகை ஒரு டன்னுக்கு ரூ.27-தான். அதேசமயம், இன்றுள்ள நிலவரப்படி சர்வதேசச் சந்தையில் ஒரு டன் இரும்புக்கனிமத்தை ரூ.10,000-க்குக் குறையாமல் போஸ்கோவால் விற்க முடியும்.**

ஜெய்ராம் ரமேஷ் விதித்துள்ள புதிய நிபந்தனைகளின்படி, போஸ்கோவிற்கு வன அனுமதி வழங்குவதற்குத் தேவையான சான்றிதழை வழங்க வேண்டிய பொறுப்பு, ஏற்கெனவே மோசடிச் சான்றிதழ் வழங்கிய ஒரிசா மாநில அரசிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளது. போஸ்கோ தனது வருடாந்திர நிகர இலாபத்தில் 2 சதவீதத்தைச் சமூக மேம்பாட்டுக்குப் பயன்படுத்த வேண்டும் என்பது இன்னொரு விதி. இதிலிருந்தே இந்தப் புதிய விதிகளின் 'கடுமையை'ப் புரிந்து கொண்டு விடலாம்.

பொருளாதார வளர்ச்சியையும் ற்றுப்புறச் சூழலையும் ஒருசேரக் காப்பாற்றுபவர் போலக் காட்டிக் கொள்ளும் ஜெய்ராம் ரமேஷின் கபடத்தனம், போஸ்கோவோடு மட்டும் நின்றுவிடவில்லை. மக்களின் எதிர்ப்பையும் மீறி, ஆந்திராவில் அமையவுள்ள பொலாவரம் அணைக்கட்டுத் திட்டம், மகாராஷ்டிராவில் அமையவுள்ள ஜெய்தாபூர் அணுமின் திட்டம் ஆகியவற்றுக்கு அனுமதி வழங்கியிருக்கிறார். மகாராஷ்டிரா மாநிலத்தில் புனே நகருக்கு அருகே மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் தனியார் நகரத்தை அமைத்துவரும் லாவாசா கார்ப்பரேஷனின் சுற்றுப்புறச் சூழல் விதி மீறல்களை, அந்நிறுவனத்திற்கு அபராதம் விதித்ததன் மூலம் சட்டபூர்வமாக்கிவிட்டார்; வேதாந்தா நிறுவனம் ஒரிசாவின் நியம்கிரி மலைப்பகுதியில் அலுமினியத் தாதுவை வெட்டியெடுப்பதற்குத் தடை விதித்த அவர், இன்னொருபுறமோ, வேதாந்தா தனது அலுமினிய ஆலையின் உற்பத்தித் திறனை தற்போது இருப்பதைவிட ஆறு மடங்கு அதிகமாக்கிக் கொள்ள அனுமதி அளித்திருக்கிறார்.

சுற்றுப்புறச் சூழல் விதிகளைக் காட்டி, தமது தொழில் திட்டங்களுக்குத் தடை விதிக்கக் கூடாது என்பதுதான் கார்ப்பரேட் முதலாளிகளின் வாதம். அவர்கள் போஸ்கோவிற்கு விதிக்கப்பட்ட இடைக்காலத் தடையை நாட்டின் பொருளாதார வளர்ச்சியின் மீது விதிக்கப்பட்ட தடையெனப் பிரச்சாரம் செய்தார்கள். ''சுற்றுப்புறச் சூழல் விதிகள், அனுமதி போன்றவை லைசென்ஸ்-பர்மிட் ராஜ்ஜியத்திற்கு அழைத்துச் சென்று விடக் கூடாது'' எனக் கூறி, மன்மோகன் சிங்கும் கார்ப்பரேட் முதலாளிகளின் குரலை எதிரொலித்தார். இதற்கு ஏற்ப சுற்றுப்புறச் சூழல் அமைச்சர் ஜெய்ராம் ரமேஷ் கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் போஸ்கோ, வேதாந்தா, பொலாவரம், ஜெய்தாபூர் உள்ளிட்டு 535 திட்டங்களுக்கு அனுமதியை வாரி வழங்கியிருக்கிறார். போஸ்கோ மீதான இடைக்காலத் தடையை நீக்கியுள்ள ஜெய்ராம் ரமேஷ், ''நாட்டின் பொருளாதார மற்றும் தொழில் நுட்பத் தேவைகளின் முக்கியத்துவம் கருதியே போஸ்கோவிற்கு அனுமதி அளித்ததாக''க் குறிப்பிட்டுள்ளார்.

போஸ்கோ கொண்டு வரவுள்ள அந்நிய மூலதனத்தாலும், தொழில்நுட்பத்தாலும் பின்தங்கிய ஒரிசா மாநிலத்தின் முகவிலாசமே மாறிப் போய்விடும் என இவர்கள் கூறுவதெல்லாம் முழுப் பொய். போஸ்கோ ஆலைக்காக 11 கிராமங்கள் முற்றிலுமாக அழிக்கப்படும்; தற்பொழுது ஓரளவு பொருளாதாரத் தன்னிறைவோடு வாழ்ந்து வரும் 4,000-க்கும் மேற்பட்ட விவசாயக் குடும்பங்கள் உள்நாட்டிலேயே அகதிகளாக வாழ வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவார்கள். இவ்வாலையால் சுற்றுப்புறச் சூழலுக்கு ஏற்படுத்தும் பாதிப்புகளை இப்பொழுது அறுதியிட்டுக் கூற முடியாது எனக் கூறுகிறார்கள், அத்துறை சார்ந்த நிபுணர்கள்.

இந்தப் பாதிப்புகளைவிட, போஸ்கோவோடு போடப்பட்டுள்ள தொழில் ஒப்பந்தமே சமூக விரோதமானது என்பதுதான் முக்கியமானது. ஒரிசாவின் உயர் ரக இரும்புக் கனிமத்தை வெட்டியெடுப்பதற்கு போஸ்கோ நிறுவனம் இந்திய அரசிற்குத் தரவுள்ள உரிமத் தொகை ஒரு டன்னுக்கு ரூ.27/-தான். அதேசமயம், இன்றுள்ள நிலவரப்படி சர்வதேசச் சந்தையில் ஒரு டன் இரும்புக் கனிமத்தை ரூ.10,000/-க்குக் குறையாமல் போஸ்கோவால் விற்க முடியும். இதன் மூலம் இந்நிறுவனம் அடையப் போகும் இலாபத்தைக் கணக்கிட்டுப் பார்த்தால் மலைத்துத்தான் போவோம். போஸ்கோ இந்தியாவிற்குக் கொண்டுவரவுள்ள அந்நிய மூலதனத்தை விட, அது எடுத்துச் செல்லப் போகும் இலாபம் பல மடங்கு அதிகமாகும்.

2-ஜி அலைக்கற்றை அடிமாட்டு விலைக்கு விற்கப்பட்டிருப்பதைப் போல, ஒரிசாவின் உயர்ரக இரும்புக் கனிம வளம் போஸ்கோவிற்குத் தாரை வார்த்துக் கொடுக்கப்பட்டுள்ளது. மேற்குத் தொடர்ச்சி மலையிலுள்ள பழங்குடியின மக்களின் நிலங்களையும், அங்குள்ள நீரோடைகளையும் லாவாசா அபகரித்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது. நாட்டின் பொதுச் சொத்தாகிய இந்த இயற்கை வளங்களை கார்ப்பரேட் முதலாளித்துவக் கும்பல் அபகரித்துக் கொள்ளும் இந்தப் பகற்கொள்ளை, ஊழலாகக் காட்டப்படுவதில்லை; மாறாக, வளர்ச்சி என்ற பெயரில் நியாயப்படுத்தி வருகிறது, ஆளும் கும்பல்.

● திப்பு

## ஜெய்தாபூர் அணுமின் திட்டம்:

# ஏகாதிபத்திய சேவைக்கு மக்கள் பலிகிடா!

### ஆயிரக்கணக்கான விவசாயிகளின், மீனவர்களின் வாழ்வாதாரங்களை அழித்துக் கிடைக்கும் மின்சாரத்தால் இலாபமடையப் போவது யார்?

தென்னை மரங்கள் அசைந்தாட, பாக்கு மரங்கள் தலையசைக்க, மாமரத் தோப்புகள் நிறைந்த கொங்கண் பிராந்தியத்திலுள்ள மதுபான் கிராம மக்களின் கண்களில் அச்சமும் கவலையும் ஆட்கொண்டுள்ளது. அக்கிராமத்தை அடுத்துள்ள கடலோரப் பகுதியைச் சேர்ந்த மீனவர்கள், அரபிக்கடலை வெறித்துப் பார்த்து விம்முகின்றனர். இந்த நிலமும் நீரும் கடலும் ஆறும் காய்களும் கனிகளும் வாழ்வும் வளமும் இனி அவர்களுக்குச் சொந்தமில்லை. இப்பகுதிவாழ் மக்களின் வாழ்வைப் பறிக்க இடியாய் இறங்கியுள்ளது ஜெய்தாபூர் அணு மின் திட்டம்.

ஜெய்தாபூர் அணுமின் திட்டம் என்பது உலகிலேயே மிகப் பெரிய 9,900 மெகாவாட் திறன் கொண்ட அணுமின் திட்டமாகும். அணுசக்தி கடப்பாடு மசோதா சட்டமாக்கப்பட்ட பின்னர் உருவாகியுள்ள பேரழிவுத் திட்டம்தான் இது. மகாராஷ்டிராவின் ரத்னாகிரி மாவட்டத்தில் ஜெய்தாபூர் துறைமுகத்தை ஒட்டியுள்ள மதுபான் கிராமத்தில் இது அமையவுள்ளது. கடந்த ஆண்டு டிசம்பர் 6-ஆம் தேதி பிரான்ஸ் அதிபர் இந்தியாவுக்கு வந்தபோது, இத்திட்டத்திற்கான ஒப்பந்தம் கையெழுத்தாகியது. இதன்படி, அந்நாட்டின் அரிவா எனும் நிறுவனத்தின் ஆறு அணு உலைகள் இறக்குமதி செய்யப்படவுள்ளன. முதற்கட்டமாக 1650 மெகாவாட் திறன் கொண்ட இரண்டு அணு உலைகள் 2012-லிருந்து 2017-க்குள் நிறுவப்படும் என்றும், இதற்கு மட்டும் ஏறத்தாழ ரூ.25,000 முதல் 35,000 கோடிகள் வரை செலவாகும் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.

இம்மாபெரும் அணுமின் திட்டத்திற்கென மதுபான் மற்றும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களில் ஏறத்தாழ 968 ஹெக்டேர் நிலம் கையகப்படுத்தப்பட்டு 2,033 குடும்பங்கள் அவர்களது மண்ணிலிருந்து விரட்டப்படவுள்ளனர். கதிரியக்கம் பரவும் என்பதால் இத்திட்டம் அமைந்துள்ள இடத்தைச் சுற்றி 2 கி.மீ. தொலைவுக்கு அனைத்துக் குடியிருப்புகளும் வெளியேற்றப்படவுள்ளன. இதன்படி, கடந்த 2006-ஆம் ஆண்டில் நிலத்தைக் கையளிக்குமாறு விவசாயிகளுக்கு அரசு நோட்டீசு அனுப்பியது. இவ்வாண்டு ஜனவரி முதலாக போலீசு துணையுடன் நிலப்பறிப்பு நடந்து வருகிறது.

தோட்டக்கலை மண்டலங்களாக அரசால் அறிவிக்கப்பட்டுள்ள ரத்னாகிரி மற்றும் சிந்துதுர்க் மாவட்டங்களில் மா, முந்திரி, தென்னை, பாக்கு மர வளர்ப்பு முதலானவை முக்கியத் தொழிலாக உள்ளது. மாம்பழங்களின் அரசனாகச் சித்தரிக்கப்படும் அல்போன்சோ மாம்பழம் இங்கு பெருமளவில் உற்பத்தியாகி, கணிசமான அளவுக்கு மேலை நாடுகளுக்கு ஏற்றுமதியாகிறது. ஜெய்தாபூர் அணுமின் திட்டம் வெளியேற்றும் கழிவுகளால் இம்மாவட்டங்களில் மரம் வளர்ப்புத் தொழிலும் விவசாயமும் நாசமாகி, ஏறத்தாழ 7 இலட்சம் விவசாயிகள் பாதிக்கப்படுவர்.

ரத்னாகிரி மாவட்டத்தின் கடலோர சக்ரி நாதே கிராமத்தைச் சேர்ந்த மீனவர்கள் ஆண்டுக்கு பத்தாயிரம் டன் அளவுக்கு மீன் பிடிக்கின்றனர். இந்நிலையில், கடல் நீரை அணுமின் நிலையம் உறிஞ்சினாலும், கழிவு நீரை கடலுக்கு வெளியேற்றினாலும் மீன்வளம் நாசமாகும். மீன்பிடித் தொழிலை நம்பியுள்ள இக்கிராம மக்களின் வாழ்வுரிமை இத்திட்டத்தால் பறிக்கப்பட்டு, அவர்கள் நாடோடிகளாக அலைய நேரிடும். 5000-க்கும் மேற்

ஜெய்தாபூர் அணுமின் திட்டத்தை எதிர்த்து ரத்னாகிரி மாவட்ட உழைக்கும் மக்களின் ஆர்ப்பாட்டம் - கொடும்பாவி எரிப்புப் போராட்டம்.





ஜெய்தாபூர் அணுமின் திட்டத்துக்கு எதிராக அறிவுத்துறையினரும் விவசாயிகளும் மீனவர்களும் இணைந்து நடத்திவரும் பிரச்சார இயக்கம்.

பட்ட கடற்வாழ் உயிரிகளும் ஒருசெல் உயிரி வகைகளும் நிறைந்துள்ள, உலகின் பல்லுயிரிப் பெருக்கக் கடற்பகுதிகளில் ஒன்றாக அறிவிக்கப்பட்டுள்ள கொங்கன் கடற்கரைப் பகுதியானது இத்திட்டத்தால் நாசமாகும். மேலும், நிலநடுக்க அபாயமுள்ள பகுதியில் இந்த அணுமின் திட்டம் நிறுவப்படுவதால் பெருத்த அபாயம் ஏற்படும் என்று சுற்றுச்சூழலாளர்களும் புவியியலாளர்களும் எச்சரிக்கின்றனர். இதுமட்டுமின்றி,மரபு ரீதியான அனல் மின் திட்டங்களை ஒப்பிடும்போது அணுமின் திட்டங்கள் மிக ஆபத்தானவை. அணுமின் திட்டத்தின் மூலம் பெறப்படும் மின்சாரம், நிலக்கரி மூலமாக அனல்மின் திட்டத்தின் மூலம் பெறப்படும் மின்சாரத்தின் அடக்கச் செலவைவிட 2 முதல் 3 மடங்கு அதிகமாகும் என அணு ஆயுதத்துக்குத் தடை மற்றும் அமைதிக்கான கூட்டமைப்பு விரிவாகப் பட்டியலிட்டுக் காட்டியுள்ளது.

இருப்பினும், கடந்த டிசம்பரில் இந்தியாவுக்கு பிரெஞ்சு அதிபர் வருவதற்கு முன்னதாக, நவம்பர் 28-ஆம் தேதியன்று அவசர அவசரமாகச் சுற்றுச்சூழல் அமைச்சகம் இத்திட்டத்துக்கு ஒப்புதல் அளித்துள்ளது. இதை எதிர்த்து கடந்த நவம்பர் 29-ஆம் தேதியன்று இந்த வட்டாரத்தைச் சேர்ந்த மக்கள் ஆயிரக்கணக்கில் திரண்டு தடையை மீறிப் போராட்டம் நடத்திக் கைதாகினர். முன்னாள் உயர் நீதிமன்ற நீதிபதி பி.ஜி. கோஸ்லே பட்டீல், முன்னாள் கடற்படைத் தளபதி ராம்தாஸ், முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதி பி.பி.சாவந்த் முதலானோர் இப்பகுதிவாழ் மக்களின் நியாயமான போராட்டத்தை ஆதரித்து நிற்கின்றனர். போராட்டத்தில் ஈடுபட்டுள்ள இப்பகுதிவாழ் மக்கள் எந்தவகையிலான நிவாரணத்தையும் இதுவரை ஏற்கவில்லை. கூடுதல் நிவாரணமும் கோரவில்லை.

பிரஞ்சு அதிபர் நிக்கோலஸ் சர்கோசி இந்தியாவுக்கு வந்தபோது, டிசம்பர் 4 அன்று இத்திட்டத்தை எதிர்த்து பல்லாயிரக்கணக்கான விவசாயிகளும் மீனவர்களும் தடையுத்தரவை மீறி ஜெய்தாபூர் அணுமின் திட்டத்துக்கு எதிராக ஆங்கிலம், பிரெஞ்சு, மராத்தி மொழிகளில் பதாகைகளை ஏந்திப் போராட்டம் நடத்தினர். கொங்கன் பச்சோ சமிதி, ஜன்ஹித் சேவா சமிதி, கொங்கன் வினாஸ்கரி பிரகல்ப் விரோதி சமிதி முதலான தன்னார்வ அமைப்பினர் ஜெய்தாபூர் அணுமின் திட்ட எதிர்ப்புப் போராட்டத்தை ஒருங்கிணைத்து நடத்தி வருகின்றனர். அணுமின் திட்டம் அமையவுள்ள பகுதியில் நிரந்தரமாக போலீசுப் படை நிறுத்தி வைக்கப்பட்டு, ரத்னாகிரி மாவட்டமே போலீசு ராஜ்ஜியமாக மாறிவிட்டது. கடந்த இரு மாத காலமாகப் பள்ளி - கல்லூரி மாணவர்களும் இளைஞர்களும் விவசாயிகளும் ஆடு-மாடு மேய்க்கச் சென்ற பெண்களும் சிறுவர்களும் அடுத்தடுத்து கைது செய்யப்பட்டுள்ளனர். முன்னணியாளர்கள் பலமுறை கைது செய்யப்பட்டு சிறையிடப்பட்டதால், அவர்களில் பலர் இன்று தலைமறைவாகி விட்டனர்.

பிரான்ஸ் நாட்டின் ஆறுகளை அணுக்கழிவுகள் மூலம் நாசப்படுத்துவதாக பிரான்ஸ் நாட்டிலேயே அரிவா நிறுவனத்தின் மீது வழக்கு நடந்து வருகிறது. பின்லாந்து, பிரான்ஸ், பிரிட்டன் நாடுகளைச் சேர்ந்த ஐரோப்பிய அணுசக்தி முறைப்படுத்தல் ஆணைய அதிகாரிகள், அரிவா நிறுவன அணு உலைகளின் பாதுகாப்பை அங்கீகரிக்கவில்லை. இந்த அரிவா நிறுவனம்தான் இப்போது ஆறு அணு உலைகளை வடிவமைத்து இந்தியாவில் நிறுவப் போகிறது.

ஏகாதிபத்திய நாடுகளில் தீவிரமாகிவிட்ட பொருளாதார


''புதிய ஜனநாயகம்'' உரிமையாளர்
மற்றும் இதர விவரங்கள்
படிவம் IV (விதி 8-இன் படி)

1. வெளியிடும் இடம் : 110, இரண்டாம் தளம், மாநகராட்சி வணிக வளாகம், 63, என்.எஸ்.கே. சாலை, கோடம்பாக்கம், சென்னை -600 024.

2. வெளியிடும் காலம் : மாதம் ஒருமுறை

3. அச்சிடுபவர் பெயர் : இரா. சண்முகராசு
இந்தியக் குடிமகனா? : ஆம்
முகவரி : எழில் பிரிண்ட்ஸ், 110, இரண்டாம் தளம், மாநகராட்சி வணிக வளாகம், 63, என்.எஸ்.கே. சாலை, கோடம்பாக்கம், சென்னை -600 024.

4. உரிமையாளர் மற்றும் வெளியிடுபவர் பெயர் : இரா. சண்முகராசு,
இந்தியக் குடிமகனா? : ஆம்
முகவரி : 110, இரண்டாம் தளம், மாநகராட்சி வணிக வளாகம், 63, என்.எஸ்.கே. சாலை, கோடம்பாக்கம், சென்னை -600 024.

5. ஆசிரியர் பெயர் : இரா. சண்முகராசு
இந்தியக் குடிமகனா? : ஆம்
முகவரி : 110, இரண்டாம் தளம், மாநகராட்சி வணிக வளாகம், 63, என்.எஸ்.கே. சாலை, கோடம்பாக்கம், சென்னை -600 024.

இரா. சண்முகராசுவாகிய நான், மேலே குறிப்பிட்டுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மை என்று உறுதியளிக்கின்றேன்.

(ஒப்பம்) இரா. சண்முகராசு,
வெளியிடுபவர்.

1.3.2011

நெருக்கடியிலிருந்து மீள போக்குவரத்து, தொலைத்தொடர்பு, மேம்பாலங்கள், அணுமின் திட்டங்கள் முதலானவற்றை ஏகாதிபத்திய நிறுவனங்கள் ஏழை நாடுகளில் திணித்து வருகின்றன. சென்னையில் கூவம் ஆற்றின் மேலாக கட்டப்படும் அதிவிரைவு சரக்குப் போக்குவரத்துக்கான மேம்பாலத் திட்டமானது, உற்பத்திப் பொருட்களை ஏகாதிபத்திய நிறுவனங்கள் விரைவாக துறைமுகத்துக்குக் கொண்டு செல்வதற்காகவே அமைக்கப்படுகிறது. இது, தமிழகத்தின் தொழில் வளர்ச்சிக்கு அவசியமான திட்டமாகச் சித்தரிக்கப்பட்டு, -ற்றுக்கணக்கான கூவம் ஆற்றோரக் குடிசைவாழ் மக்கள் கட்டாயமாக விரட்டியடிக்கப்பட்டனர்.




‘‘அரிவா நிறுவனமே, இந்தியாவிலிருந்து வெளியேறு!’’ - அணுமின் திட்ட ஒப்பந்தம் போட பிரான்ஸ் அதிபர் இந்தியாவுக்கு வந்து போது, அதை எதிர்த்து நடந்த விவசாயிகளின் ஆர்ப்பாட்டம்.

இப்படித்தான், உலக வங்கி நிர்ப்பந்தப்படி நர்மதா அணைக்கட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு இலட்சக்கணக்கான மக்கள் அவர்களது மண்ணிலிருந்து விரட்டப்பட்டனர். இப்படித்தான், தாமிரவருணி ஆற்றை கோக் உறிஞ்சவும், போஸ்கோவும் வேதாந்தாவும் ஒரிசாவின் கனிம வளங்களைக் கொள்ளையிடவும் அனுமதிக்கப்பட்டு, நாட்டின் தொழில் வளர்ச்சிக்கானதாகச் சித்தரிக்கப்படுகின்றன. இப்படித்தான், ஜெய்தாபூர் அணுமின் திட்டமும் உள்நாட்டுத் தேவைக்கான அவசியமான திட்டமாக இல்லாமல், ஏகாதிபத்தியங்களின் நெருக்கடிக்குத் தீர்வைத் தேடும் திட்டமாக இங்கே திணிக்கப்படுகிறது. இதனால்தான், சுற்றுச்சூழல் அமைச்சரான ஜெய்ராம் ரமேஷ், ‘‘நான் இந்தத் திட்டத்தைத் தடுத்து நிறுத்த முடியாது. இது நாட்டின் போர்த்தந்திர முக்கியத்துவம் வாய்ந்த திட்டமாகும். இது, இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையின் அடிப்படையில் உருவானதாகும்’’ என்று விளக்கமளித்து, இது ஏகாதிபத்தியங்களால் திணிக்கப்பட்ட திட்டம்தான் என்பதை வேறு வார்த்தைகளில் வெளிப்படுத்தியுள்ளார்.

‘‘எங்கள் நிலங்களைப் பறிப்பதற்காக மட்டும் நாங்கள் போராடவில்லை. இயற்கையை அழிப்பதை எதிர்த்துத்தான் நாங்கள் போராடுகிறோம்’’ என்கிறார்கள், ரத்னாகிரி மாவட்ட விவசாயிகளும் மீனவர்களும். அவர்களது நியாயமான போராட்டமும், நர்மதா அணைக்கட்டு திட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் போராட்டமும், சட்டிஸ்கர் மற்றும் ஒரிசா மக்களின் போராட்டங்களும், சிறப்புப் பொருளாதார மண்டலத்துக்கு எதிராகத் தமிழகத்தின் திருவள்ளூர் மாவட்டத் தேர்வாய் கிராம மக்களின் போராட்டமும் வெவ்வேறானவை அல்ல. இவையனைத்தும் ஏகாதிபத்தியக் கொள்ளைக்கும் மறுகாலனியாக்கத்துக்கும் எதிரான போராட்டத்தில் சங்கமிக்கும் நீரோட்டங்களாகவே உள்ளன. இப்போராட்டங்களை ஒருங்கிணைத்து மறுகாலனியாதிக்க எதிர்ப்புப் போரை முன்னெடுத்துச் செல்வதே புரட்சிகர - ஜனநாயக சக்திகளின் இன்றைய அவசர அவசியக் கடமையாகியுள்ளது.

● குமார்

## சந்தாதாரர்கள் கவனத்திற்கு...

● புதிய ஜனநாயகம் இதழுக்கான புதிய சந்தாக்கள், நடப்பிலுள்ள சந்தாவினைப் புதுப்பித்தல், சந்தா தொடர்பான முகவரி மாற்றங்கள் மற்றும் இதழ் சந்தாதாரர்களுக்குக் கிடைக்காதது குறித்த புகார்கள் உள்ளிட்ட அனைத்தும் **ஒவ்வொரு மாதமும் 15-ஆம் தேதிக்குள்** எமக்குக் கிடைக்குமாறு அனுப்பி வைக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறோம்.

இத்தேதிக்குள் எமக்குக் கிடைக்கும் சந்தாக்களுக்கு மட்டுமே, அடுத்து வெளிவரும் இதழ் அனுப்பப்படும். இத்தேதிக்குப் பிறகு எமக்குக் கிடைக்கப்பெறும் சந்தாக்களுக்கு அதற்கடுத்த இதழிலிருந்துதான் பிரதிகள் அனுப்பி வைக்கப்படும்.

● சாதாரண பணவிடை மூலம் சந்தாதொகை செலுத்தும் சந்தாதாரர்கள், பணவிடை படிவத்தில் கதவு எண், தெருவின் பெயர், அஞ்சல் குறியீட்டு எண் உள்ளிட்ட **முழுமையான விவரங்களை தெளிவான கையெழுத்தில்** எழுதி அனுப்ப வேண்டுகிறோம்.

● மின்னணு பணவிடை மூலம் (E-M.O.) சந்தாத் தொகையினை அனுப்பும் வாசகர்கள், தமது **முழு முகவரியினையும், சந்தாதொகை அனுப்பிய விவரத்தையும்** தனியாக எமக்குக் கடிதம் மூலம் தெரியப்படுத்த வேண்டும் என வேண்டுகிறோம். முகவர்களும் சந்தா குறித்து மேற்சொன்ன நிர்வாக நடைமுறையைக் கண்டிப்பாக பின்பற்ற வேண்டும் எனக் கோருகிறோம்.

● முகவர்கள், சந்தாதாரர்கள், மற்றும் வாசகர்கள் சாதாரண அஞ்சல் மூலம் எமக்குக் கடிதம் அனுப்பும்பொழுது, முகவரியில் எமது **அஞ்சல் பெட்டி எண்:2355**-ஐத் தவறாமல் குறிப்பிட்டு அனுப்ப வேண்டுகிறோம்.

நிர்வாகி,
புதிய ஜனநாயகம்.

# மருந்தின் விலையும் இனி கசக்கும்!

**இந்திய மருந்து உற்பத்தி நிறுவனங்களைப் பன்னாட்டு நிறுவனங்கள் கைப்பற்றி வருவது, மருந்துகளின் விலையை எகிற வைத்துவிடும்.**

இந்தியக் குடும்பத்தின் வருமானத்தில் மருத்துவச் செலவானது கணிசமான தொகையை விழுங்குகிறது. உழைக்கும் மக்களுக்கோ மருந்துக் கடைகள்தான் மருத்துவமனைகளாக இருக்கின்றன. விலைவாசி விண்ணைத் தொடும் இந்தக் காலத்தில், மக்களால் ஒரு வேளைச் சோற்றைக் தவிர்க்க முடிந்தாலும்கூட மருந்தைத் தவிர்க்க முடிவதில்லை. சமீபத்தில் ''லேன் செஸ்ட்'' என்ற மருத்துவ இதழில் வெளியாகியுள்ள ஒரு ஆய்வில், இந்தியாவின் மொத்த மருத்துவச் செலவில் 78 சதவீதத்தை மக்கள் தங்களது சொந்தப் பணத்திலிருந்து செலவிடுகின்றனர் என நிறுவப்பட்டுள்ளது. இதுவே மாலத்தீவில் 14%, பூட்டானில் 29%, தாய்லாந்தில் 31%-ஆக உள்ளதாக அவ்வாய்வு தெரிவிக்கிறது.

2004-ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட ஒரு புள்ளிவிவரத்தின்படி, கிராமப்புறங்களைச் சேர்ந்தவர்களில் 47% பேரும், நகரங்களைச் சேர்ந்தவர்களில் 31% பேரும் கடன் வாங்கி அல்லது தங்களது சொத்துக்களை விற்றுக் கிடைத்த பணத்தைச் செலவு செய்துதான் மருத்துவ சிகிச்சை பெற முடிந்திருக்கிறது. மராட்டிய மாநிலத்தின் விதர்பா விவசாயிகள் பலரது கடன் எகிறிப் போனதற்கும், அதனால் அவர்கள் தற்கொலை செய்து கொண்டதற்கும் மருத்துவச் செலவும் ஒரு காரணமாக இருந்திருக்கிறது. இந்திய மக்கள் தொகையில் 65% பேருக்கு அதாவது 68 கோடி இந்தியர்களுக்கு அத்தியாவசிய மருந்துகள் கூடக் கிடைப்பதில்லை என உலக சுகாதார நிறுவனம் கூறுகிறது.

இந்திய அரசு மக்களது பொது சுகாதாரத்துக்காக ஒதுக்கும் தொகையானது, மற்ற பின்தங்கிய ஆசிய நாடுகள் ஒதுக்கும் தொகையைவிடப் பலமடங்கு குறைவாக உள்ளது. தனியார்மய-தாராளமயக் கொள்கைகளின் விளைவாக மருத்துவத்துக்கான இந்த அற்பமான ஒதுக்கீடும் படிப்படியாகக் குறைக்கப்படுவதால், தனியார் மருத்துவமனைகளின் கொள்ளையே எங்கும் கோலோச்சும் நிலை உருவாகிவிட்டது. இவ்வளவு இருந்த போதிலும் இந்தியாவில் மருந்துகளின் விலை மற்ற நாடுகளை விட ஓரளவு குறைவு என்பதால், மக்கள் மருத்துவச் செலவைக் கடன்பட்டாவது சமாளித்து வந்தனர். ஆனால், தற்போது நம் நாட்டின் மருந்து உற்பத்தித் துறையைத் தங்களது கட்டுப்பாட்டில் கொண்டுவரும் பொருட்டு, இந்தியாவின் முன்னணி மருந்து உற்பத்தி நிறுவனங்களைப் பன்னாட்டு நிறுவனங்கள் விழுங்கத் தொடங்கியிருக்கின்றன. இதனால் அடிப்படை மருந்துகளின் விலை உயர ஆரம்பித்துள்ளன. தமது மருத்துவச் செலவில் 78 சதவீதத்தைத் தங்களது சொந்தப் பணத்திலிருந்து செலவு செய்து வரும் மக்களுக்கு, இது மேலும் சுமக்க முடியாத பாரத்தை ஏற்றியுள்ளது.

கடந்த 2004-ஆம் ஆண்டில் மட்டும், 30% கிராமவாசிகள் ஏழ்மையின் காரணமாக மருத்துவ சிகிச்சை பெற முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இந்த எண்ணிக்கை ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்துக் கொண்டும் செல்கிறது. மேலும், ஆண்டொன்றிற்கு 4 கோடி இந்தியர்கள், மருத்துவச் செலவின் காரணமாக ஏழ்மைக்குத் தள்ளப்பட்டுவரும் சூழலில், பன்னாட்டு நிறுவனங்கள் இந்திய மருத்துவத் துறையை மீண்டும் தமது பிடிக்குள் கொண்டுவருவது இப்போக்கை மேலும் அதிகரிக்கச் செய்யும் என்பது உறுதி.

மருந்து உற்பத்தித் தொழிலில் அறிவுசார் காப்புரிமையைப் புகுத்துவது தொடர்பாக நடந்த கருத்தரங்கில் (வலமிருந்து) இந்தியத் தரகு முதலாளிகள் சங்கத்தின் துணைத் தலைவர் டி.டி.அசோக், இரசாயன மற்றும் உரத்துறை அமைச்சர் எம்.கே.அழகிரி மற்றும் ஆர்சிட் மருந்து கம்பெனியின் தலைமை நிர்வாக இயக்குநர் ராகவேந்திர ராவ்.




கடந்த நான்கு ஆண்டுகளில் மட்டும் ரான்பாக்சி, டாபர் பார்மா, சாந்தா பயோடெக், பிராமல் ஹெல்த்கேர், மேட்ரிக்ஸ் லேப் மற்றும் ஆர்கிட் கெமிகல்ஸ் ஆகிய ஆறு இந்திய மருந்து நிறுவனங்கள், பன்னாட்டு நிறுவனங்களால் வாங்கப்பட்டு விட்டன. அது மட்டுமன்றி, வணிகக் கூட்டு ஒப்பந்தகளின் மூலம் பல முன்

னணி உற்பத்தியாளர்கள் பன்னாட்டு நிறுவனங்களின் தரகர்களாக மாற்றப்பட்டுள்ளனர். டாக்டர் ரெட்டீஸ், அரபிந்தோ, ஸ்டிரைட்ஸ் அக்ரோ லேப், கிளாரிஸ், காடில்லா, டொரன்ட் போன்ற இந்திய நிறுவனங்கள், ஃபைசர், ஜி.எஸ்.கே, அப்போட், ஆஸ்டிரா ஜினகா போன்ற பன்னாட்டு நிறுவனங்களின் தரகர்களாக மாறி விட்டன.

கடந்த 30 ஆண்டுகளில் அரசின் ஆதரவுடன் மக்கள் வரிப்பணத்தில் இந்திய மருந்து உற்பத்தி துறை கண்ட முன்னேற்றம் அனைத்தையும் கேள்விக்குறியாக்கிவிட்டது, பன்னாட்டு நிறுவனங்களின் இந்தப் படையெடுப்பு. 1960-70-ஆம் ஆண்டுகளில் இந்தியா மருந்து உற்பத்தித் துறையில் மிகவும் பின்தங்கியிருந்தது. இறக்குமதியையே முழுமையாக நம்பியிருந்த இத்துறையில் பன்னாட்டு நிறுவனங்களே ஆதிக்கம் செய்து வந்தன. மருந்துகளின் விலையோ மிக மிக அதிகமாகவும் சாமானியர்களுக்கு எட்டாததாகவும் இருந்தது.

''பொருளுக்குக் காப்புரிமை'' (product patent) என்ற பெயரில் காப்புரிமை வாங்கி வைத்துக் கொண்டு, குறிப்பிட்ட ஒரு மருந்தை யார், எந்த முறையில் உற்பத்தி செய்தாலும், தங்களுக்கு உரிமைப் பங்கு (ராயல்டி) தர வேண்டும் என்று கொள்ளையடித்து வந்தன, பன்னாட்டு நிறுவனங்கள். இந்நிலைமை தோற்றுவித்த நெருக்கடியை எதிர்கொள்ள 1960-70-களில் 3 முக்கிய நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டது. 1960-களில் ஐ.டி.பி.எல். போன்ற பொதுத்துறை மருந்து உற்பத்தி நிறுவனங்கள் தொடங்கப்பட்டன. இந்நிறுவனங்கள் எதையும் இறக்குமதி செய்யாமல், அடிப்படையிலிருந்தே மருந்தை முழுமையாக உற்பத்தி செய்தன. 1970-ஆம் ஆண்டு இந்தியக் காப்புரிமைச் சட்டம் ''இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் மருந்துகளுக்கு 'பொருள் காப்புரிமை' தேவையில்லை, 'செய்முறைக் காப்புரிமை' மட்டும் போதுமானது என்று வரையறுத்ததுடன், அந்தக் காப்புரிமையும் 5 ஆண்டுகளுக்கு மட்டுமே செல்லத்தக்கது'' என்றும் வரையறுத்தது. 1978-ஆம் ஆண்டின் மருந்துக் கொள்கை இந்திய மருந்து உற்பத்தி நிறுவனங்களுக்குப் பல சலுகைகளை வழங்கிய அதே நேரம், பன்னாட்டு நிறுவனங்களுக்குப் பல கட்டுப்பாடுகளை விதித்தது.


இவற்றின் விளைவாக, இந்திய மருந்து உற்பத்தித் துறை மெல்ல மெல்ல உயிர்பெற ஆரம்பித்தது. அரசின் ஆதரவால் பொதுத்துறை நிறுவனங்களுடன் சேர்ந்து தனியார் நிறுவனங்களும் வளர்ந்தன. பன்னாட்டு நிறுவனங்களின் மருந்துகளைத் தங்களது சொந்த செய்முறையில் உற்பத்தி செய்த இந்நிறுவனங்களுக்கு மானியங்கள், வரிச்சலுகைகள், குறைந்த வட்டிக்கடன்களை அரசு வழங்கியது. சிறியதாக ஆரம்பிக்கப்பட்ட இந்நிறுவனங்கள் நாளடைவில் மிகப்பெரிய மருந்து உற்பத்தியாளர்களாக வளர்ந்தன. மலிவான விலையில் உலகத்தரம் வாய்ந்த மருந்துகளை இவர்கள் உற்பத்தி செய்ததனால், இந்திய மருத்துவத்துறையில் கோலோச்சி வந்த பன்னாட்டு நிறுவனங்களின் ஆதிக்கம் குறிப்பிட்ட அளவிற்குத் தகர்ந்தோடு மட்டுமல்லாமல், உலகச் சந்தையிலும் பன்னாட்டு நிறுவனங்களுடன் இவை போட்டியிட்டன.

மும்பையைச் சேர்ந்த சிப்லா மருந்து நிறுவனம் 2001-ஆம் ஆண்டில் எயிட்ஸுக்கான மருந்துகளை உலகச் சந்தையில் அறிமுகப்படுத்தியது. உலகிலேயே மிக அதிகமான எயிட்ஸ் நோயாளிகள் உள்ள தென் ஆப்பிரிக்கா மிக அதிக அளவில் எயிட்ஸ் மருந்துகளை இறக்குமதி செய்கிறது. தென் ஆப்பிரிக்கா இறக்குமதி செய்யும் பன்னாட்டு நிறுவன மருந்தினை ஒரு நோயாளி வருடம் ஒன்றுக்கு 12,000 டாலர் (கிட்டதட்ட 5 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய்) கொடுத்து வாங்கி வந்த நிலையில், இதே மருந்தை சிப்லா 350 டாலருக்கு (கிட்டதட்ட 16 ஆயிரம் ரூபாய்) சந்தையில் விற்றது. இவ்வளவு மலிவு விலையில் தரமான மருந்து கிடைத்ததால், பன்னாட்டு நிறுவனங்களிடம் மருந்து வாங்குவதைக் கைவிட்ட தென் ஆப்பிரிக்கா, சிப்லாவிடமிருந்து மருந்து வாங்க ஆரம்பித்தது. இதனால் கொதிப்படைந்த பன்னாட்டு நிறுவனங்கள் அமெரிக்காவின் ஆதரவுடன் பல நீதி மன்றங்களிலும், உலக வர்த்தகக் கழகம் போன்ற நிறுவனங்களிலும் தென் ஆப்பிரிக்காவிற்கு எதிராக வழக்குகளைத் தொடுத்தன. மக்களின் உயிரில் கொள்ளையடிக்கும் இந்தச் செயல் அப்பட்டமாக வெளிப்பட்டவுடன், உலகம் முழுவதிலுமிருந்து கண்டனங்கள் எழுந்தன. இதனால் தென் ஆப்பிரிக்காவிற்கு எதிரான நடவடிக்கைகளிலிருந்து அமெரிக்கா பின்வாங்கியது. அதேபோல, இரட்டைக் கோபுரத் தாக்குதலைத் தொடர்ந்து அமெரிக்காவில் ஏற்பட்ட ஆந்திராக்ஸ் பீதியின் போதும் இந்திய மருந்துகளே குறைந்த விலையில் அமெரிக்க சந்தையில் விற்கப்பட்டன.

கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தின் 'வெற்றி'யைத் தம்பட்டம் அடித்துக் கொள்வதற்காக, அத்திட்டத்தின் மூலம் அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட சிறுவனைச் சந்தித்து வாழ்த்தும் மு.க.



காட் ஒப்பந்தத்தின் அடிப்படையில், மருந்துப் பொருட்களுக்கு மேற்சொன்ன இரண்டு வகைக் காப்புரிமையும் வழங்கப்பட வேண்டும், மேலும் காப்புரிமைக் காலம் 20 ஆண்டுகளாக இருக்க வேண்டும். இந்தியக் காப்புரிமைச் சட்டம், காட் விதிமுறைகளுக்கு எதிராக இருப்பதாக உலக வர்த்தகக் கழகத்தில் அமெரிக்கா முறையீடு செய்ததால், 2005-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் இந்தியக் காப்புரிமைச் சட்டம் திருத்தப்பட்டு, 'பொருளுக்குக் காப்புரிமை' என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன், காப்புரிமைக் காலம் 20 ஆண்டுகளாக உயர்த்தப்பட்டது.




அது மட்டுமன்றி, பன்னாட்டு நிறுவனங்கள் இந்திய மருந்து நிறுவனங்களை விலைக்கு வாங்க வசதியாக, அத்துறையில் அந்நிய நிறுவன மூதலீட்டின் அளவும், அந்நிய நேரடி மூதலீட்டின் அளவும் 100 சதவீதமாக உயர்த்தப்பட்டன. இதன் உடனடி விளைவாக, பன்னாட்டு மருந்து கம்பெனிகளின் ஏகபோகத்திலிருந்த அத்தியாவசிய மருந்துகளின் விலை பன்மடங்கு உயர்ந்தது. குறிப்பாகப் புற்றுநோய் மற்றும் வெறிநாய்க்கடி மருந்துகளின் விலை 300 சதவீதத்திற்கும் அதிகமாக உயர்ந்தது. கூடவே, இந்திய மருந்துத் தயாரிப்பு நிறுவனங்களைப் பன்னாட்டு நிறுவனங்கள் கைப்பற்றவும் தொடங்கின.

மக்களின் வரிப்பணத்தைச் சலுகையாகவும், மானியமாகவும் தின்று வளர்ந்த தரகு முதலாளிகள், காப்புரிமைச் சட்ட திருத்தத்தை எதிர்க்கவில்லை. பன்னாட்டு நிறுவனங்களுடன் போட்டி போட முடியாது என்பதால், ஒன்று, அவர்களுடன் ஒப்பந்தம் போட்டுத் தரகு வேலை பார்க்கிறார்கள்; அல்லது, தங்களது நிறுவனங்களை அவர்களிடமே விற்றுவிடுகிறார்கள். கலப்புப் பொருளாதாரக் காலத்தில் அரசின் ஆதரவுடன் தங்களை வளப்படுத்திக் கொண்ட இவர்கள், இன்று உலகமயப் பொருளாதாரத்தின் மாறிய நிலைமைக்கு ஏற்ப, பன்னாட்டு நிறுவனங்களுடன் சேர்ந்து கொண்டு மக்களைக் கொள்ளையடிக்கின்றனர்.

மருந்து விற்பனையில் பன்னாட்டு முதலாளிகளும், தரகு முதலாளிகளும் தங்களுக்கிடையே எழுதப்படாத தொரு ஒப்பந்தமும், சந்தைப் பிரிவினையையும் ஏற்படுத்திக் கொண்டுவிட்டனர். பன்னாட்டு நிறுவனங்கள், பெருநகரங்களில் வாழும், உயர் நடுத்தர, நடுத்தர வர்க்கத்தை சேர்ந்த, மக்கள் தொகையில் 12% உள்ள மக்களை மட்டும் சந்தையாகக் கொண்டு தனது பொருட்களை விற்பனை செய்யும். அதே நேரம் தரகு முதலாளிகளோ சிறு நகரங்களிலும், கிராமங்களிலும் உள்ள மக்களுக்குத் தமது மருந்துகளை விற்பனை செய்வர். இதற்குப் பிரதிபலனாகப் பன்னாட்டு நிறுவனங்களின் காப்புரிமைக்கான உரிமைப் பங்கைத் தரகு முதலாளிகள் தங்களது மருந்தின் விலையை உயர்த்துவதன் மூலம் கட்டிவிடுவார்கள். இதற்குச் சாதகமாக ''அத்தியாவசிய மருந்துகள் விலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தை''த் திருத்த தரகு முதலாளிகள் பெரும்பான்மையாக உள்ள ஒரு குழு மத்திய அரசால் அமைக்கப்பட்டுள்ளது.

உலகமயத்துக்கு முன்பு மருத்துவத்திற்கான ஒதுக்கீடுகள், அரசு மருத்துவமனைகளைக் கட்டுவது, அவற்றிற்கான உபகரணங்களை வாங்கி நவீனப்படுத்துவது எனச் செலவிடப்பட்டது. ஆனால், இன்று மருத்துவத்திற்கான ஒதுக்கீடுகளும் முதலாளிகளுக்கே சென்று சேரும் வகையில், 'கலைஞர் காப்பீட்டுத் திட்டம்' போன்றவை அமல்படுத்தப்படுகின்றன. இவை மருத்துவக் காப்பீடு எனும் நச்சு வலைக்குள் மக்களை வலிந்து தள்ளிவிடுகின்றன. உயிர் காக்கும் மருத்துவச் சிகிச்சைகளுக்கு அடித்தட்டு மக்களும் தனியார் மருத்துவமனைகளுக்குத்தான் செல்ல வேண்டும். அதற்கு காப்பீடு தவிர்க்கவியலாதது என்ற நிலையைத் திட்டமிட்டே ஏற்படுத்துகிறார்கள். நாளையே அரசு இலவசக் காப்பீடு வழங்குவதை நிறுத்திவிட்டால், மக்கள் அனைவரும் தங்கள் சொந்த செலவில் காப்பீடு எடுத்துக் கொள்ள வேண்டிவரும்.

பன்னாட்டு மருந்து நிறுவனங்களின் ஏகபோகம் கோலோச்சும் பாகிஸ்தான் போன்ற நாடுகளில் அடிப்படையான அத்தியாவசிய மருந்துகளின் விலைகள் இந்தியாவைவிடப் பன்மடங்கு அதிகம். பாகிஸ்தானிலேயே தயாரிக்கப்படும் மருந்துகளுக்குக் கூட, அந்நிய நிறுவனங்களுக்கு உரிமைப்பங்கு (ராயல்டி) கொடுக்கப்படுவதால் மருந்துகளின் விலை கட்டுப்படுத்த முடியாத அளவிற்கு உயர்ந்துள்ளது. பாகிஸ்தானின் நிலை இந்திய மக்கள் எதிர்நோக்கியிருக்கும் அபாயத்தை விளக்குவதாக உள்ளது.

மருத்துவத்துறை தனியார்மயம் என்ற பெயரில் பன்னாட்டு மருந்து நிறுவனங்கள், காப்பீட்டு நிறுவனங்கள் மற்றும் தரகு முதலாளிகள் அடித்து வரும் இந்தக் கூட்டுக் கொள்ளை தடுத்து நிறுத்தப்படாவிட்டால், நாளை நாடு முழுவதும் கோடிக்கணக்கான மக்கள் மருத்துவ வசதியின்றி அல்லல்பட்டு உயிரிழக்க நேரிடும்.

● அன்பு

குஜராத் இனப்படுகொலையில் மோடியின் பங்கு:

# புஸ்வானமானது புலன் விசாரணை

**மோடி மீது சுமத்தப்பட்டுள்ள 32 குற்றச்சாட்டுகளுள் பெரும்பாலானவற்றை சிறப்புப் புலனாய்வுக் குழு தள்ளுபடி செய்துவிட்டது.**

குஜராத்தில் 2002-ஆம் ஆண்டு நடந்த முசுலீம் படுகொலையின்பொழுது கொல்லப்பட்ட காங்கிரசு கட்சியைச் சேர்ந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இஹ்ஸான் ஜாஃப்ரியின் மனைவி ஜாகியா ஜாஃப்ரியும், அவ்வினப்படுகொலையின்பொழுது தமது உறவினர்களைப் பறிகொடுத்த வேறு சில முசுலீம்களும் இணைந்து, இவ்வினப்படுகொலை தொடர்பாக குஜராத் மாநில முதல்வர் நரேந்திர மோடியையும் அவரது அரசின் சில உயர் அதிகாரிகளையும் விசாரிக்கக் கோரி உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தனர். இவ்வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட உச்ச நீதிமன்றம், இவ்வினப்படுகொலையில் மோடி மற்றும் சில உயர் போலீசு அதிகாரிகள் ஆகியோரின் பங்கு குறித்து விசாரணை நடத்துவதற்கு முன்னாள் சி.பி.ஐ. இயக்குநர் ராகவன் தலைமையில் சிறப்புப் புலனாய்வுக் குழுவொன்றை இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு அமைத்தது. மோடியின் மீது சுமத்தப்பட்ட 32 குற்றச்சாட்டுகள் தொடர்பாக விசாரணை நடத்திய சிறப்புப் புலனாய்வுக் குழு தனது அறிக்கையை கடந்த ஆண்டு மே மாதம் உச்ச நீதிமன்றத்திடம் அளித்தது. உச்ச நீதிமன்றத்தின் கண்காணிப்பின் கீழ் இவ்விசாரணை நடந்ததால், மோடி சட்டப்படியே பயங்கரவாதக் குற்றவாளியாக அறிவிக்கப்படலாம் என்ற எதிர்பார்ப்பு இருந்தது. ஆனால், சிறப்புப் புலனாய்வுக் குழுவின் அறிக்கையோ ''வரும், ஆனா வராது'' என்ற வடிவேலுவின் நகைச்சுவையைப் போல அமைந்துவிட்டது.

கோத்ரா ரயில் தீ விபத்தில் இறந்து போன 'இந்துக்களின்' சடலங்களை, விசுவ இந்து பரிசத்திடம் ஒப்படைத்ததோடு, இந்து மதவெறியைத் தூண்டிவிடும் நோக்கத்திற்காகவே அச்சடலங்களை கோத்ராவிலிருந்து அகமதாபாத் வரை ஊர்வலமாக எடுத்துவரவும் அனுமதித்தது, குஜராத் மாநில அரசு. அச்சமயத்தில் கோத்ரா மாவட்ட ஆட்சியராக இருந்த ஜெயந்தி ரவி, ''தனது எதிர்ப்பையும் மீறி, மோடி இதற்குச் சம்மதம் அளித்ததாக'', இவ்வினப் படுகொலை தொடர்பாக விசாரணை நடத்திய மக்கள் தீர்ப்பாயத்திடம் சாட்சியம் அளித்தார். பின்னர் அவரே, ''இம்முடிவு நல்வாயா என்ற கீழ்நிலை அதிகாரி எடுத்த முடிவாக''ப் பல்டியடித்து பிறழ் சாட்சியம் அளித்தார். இதற்குப் பரிசாக, ஜெயந்தி ரவி குஜராத் அரசின் உயர் கல்வித் துறை கமிசனராகப் பின்னர் நியமிக்கப்பட்டார்.

இந்தப் பின்னணி பற்றியெல்லாம் சிறப்புப் புலனாய்வுக் குழு அறிந்திருந்தபோதும், அது பற்றியெல்லாம் புலனாய்வு செய்யாமல், ''54 இந்துக்களின் சடலங்களை கோத்ராவிலிருந்து அகமதாபாத்திற்கு எடுத்துச் செல்லும் முடிவைத் தானும் தனது அமைச்சர்கள் சிலரும் மாவட்ட ஆட்சியர் ஜெயந்தி ரவியும் சேர்ந்து எடுத்ததாக'' மோடி அளித்த பதிலில் முழு திருப்தியடைந்துவிட்டதோடு, தனது அறிக்கையில், ''தீயில் கருகி எரிந்து போன சடலங்களை விசுவ இந்து பரிசத்திடம் ஒப்படைக்க வேண்டும் என்ற முடிவை நல்வாயா என்ற கீழ்நிலை அதிகாரிதான் எடுத்ததாக''க் குறிப்பிட்டுள்ளது. மேலும், இச்சடலங்களை கோத்ராவிலிருந்து அகமதாபாத் வரை ஊர்வலமாக எடுத்து வரவில்லை என மோடி அளித்த பதிலையும் எவ்வித மறுப்புமின்றி ஏற்றுக் கொண்டுள்ளது.

கோத்ரா விபத்து நடந்த நாளன்று இரவில் உயர் அரசு அதிகாரிகள் மற்றும் போலீசு அதிகாரிகளை அழைத்துக் கூட்டம் நடத்திய மோடி, ''இந்துக்கள் சுதந்திரமாக முசுலீம்களுக்கு எதிராகக் கோபத்தை வெளிப்படுத்த விட வேண்டும்'' என அக்கூட்டத்தில் கூறியதாக, மோடி மீது குற்றம் சுமத்தியிருக்கிறார், ஜாகியா ஜாஃப்ரி. இக்குற்றச்சாட்டை ஜாகியா ஜாஃப்ரி

நரேந்திர மோடியின் பயங்கரவாதக் குற்றங்களை விசாரிக்கக் கோரி வழக்குத் தொடுத்தவர்களுள் ஒருவரான ஜாகியா ஜாஃப்ரி.



மட்டுமல்ல, பாதிக்கப்பட்ட முசுலீம்களுக்காகப் போராடி வரும் பல்வேறு அமைப்புகளும் நீண்ட காலமாகவே கூறி வருகின்றன. குறிப்பாக, குஜராத் அரசில் வருவாய்த் துறை துணை அமைச்சராக இருந்தவரும், 2003 - ஆம் ஆண்டில் மர்மமான முறையில் படுகொலை செய்யப்பட்டவருமான ஹரேன் பாண்டியா, மக்கள் தீர்ப்பாயத்திடம் அளித்த சாட்சியத்தில், ''இப்படியொரு அதிகாரிகள் கூட்டம் நடந்ததையும், அதில் மோடி இனப்படுகொலைக்கு ஆதரவாகப் பேசியதையும்'' உறுதிப்படுத்தியுள்ளார்.



(வலமிருந்து) இந்து பயங்கரவாதிகள் குல்பர்க் சொசைட்டியில் நடத்திய கொலைவெறியாட்டத்தைப் பத்திரிகையாளர்களிடம் விவரிக்கிறார், அத்தாக்குதலில் தப்பிப் பிழைத்த ரூபாபென் மோடி. சி.பி.எம். இன் ராஜ்ய சபை எம்.பி. பிருந்தாகாரத், சமூக ஆர்வலர் அருணா ராய் மற்றும் நரோடா பாட்டியா கொலை வெறியாட்டத்திலிருந்து தப்பிப் பிழைத்த சாட்சி கல்லுபாய் ஷேக். (கோப்புப்படம்)

இக்கூட்டம் எந்த நோக்கத்திற்காக நடத்தப்பட்டது என்பதை, இக்கூட்டத்தின் பின் நடந்த சம்பங்களைக் கொண்டு உறுதி செய்வதற்கு மாறாக, இக்கூட்டம் பற்றி மோடியும், அக்கூட்டத்தில் கலந்து கொண்ட அதிகாரிகளும் அளித்த சாட்சியங்களின் அடிப்படையில், ''கூட்டம் நடந்தது உண்மை; ஆனால், அக்கூட்டத்தில் மோடி இந்து மதவெறி பயங்கரவாதத்துக்கு ஆதரவாகப் பேசியதாகக் கூறப்படுவதை நிரூபிப்பதற்குப் போதிய ஆதாரமில்லை'' எனக் கூறி மோடி மீதான குற்றச்சாட்டை தள்ளுபடி செய்துவிட்டது, சிறப்புப் புலனாய்வுக் குழு.

இக்கூட்டம் பற்றி சாட்சியம் அளித்த அதிகாரிகளுள் பலரும் பொய் சாட்சியம் அளித்ததாகச் சிறப்புப் புலனாய்வுக் குழுவே தனது அறிக்கையில் ஒப்புக் கொண்டுள்ளது. மோடியின் மீதான குற்றச்சாட்டை தள்ளுபடி செய்வதற்கு பொய் சாட்சியத்தை ஏற்றுக் கொண்ட சிறப்புப் புலனாய்வுக் குழு, ஹரேன் பாண்டியாவின் சாட்சியத்தை, அவர் இறந்துவிட்டதைக் காரணமாகக் காட்டியும், அவரது சாட்சியம் மக்கள் தீர்ப்பாய ஆவணங்களில் முறையாகப் பதிவு செய்யப்படாததையும் காரணமாகக் காட்டியும் ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டது. சிறப்புப் புலனாய்வுக் குழுவின் உள்நோக்கம் என்னவென்பதை இம்முரண்பாடு வெட்ட வெளிச்சமாக்கிவிட்டது.

இந்து மதவெறிக் குண்டர்கள் அகமதாபாத் நகரையே தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொண்டு, முசுலீம் மக்கள் வாழ்ந்து வந்த நரோடா பாட்டியா, நரோடா காவ், குல்பர்கா சொசைட்டி பகுதிகளைத் திறந்தவெளி சுடுகாடாக ஆக்கிக் கொண்டிருந்த சமயத்தில், நகர வீட்டு வசதித் துறை அமைச்சரான ஐ.கே. ஜடேஜா, சுகாதாரத் துறை அமைச்சரான அசோக் பட் ஆகிய இருவரின் நேரடிக் கண்காணிப்பின் கீழ்தான் அந்நகரின் போலீசு கட்டுப்பாட்டு அறை இயங்கியது. போலீசு துறையோடு தொடர்பில்லாத இவ்விரு அமைச்சர்களும் கலவரம் நடந்து கொண்டிருந்த சமயத்தில், உள்துறை அமைச்சரான மோடியின் ஒப்புதலின்றி போலீசு கட்டுப்பாடு அறையில் இருந்திருக்க முடியாது. கலவரம் நடந்த சமயத்தில் போலீசு சட்டப்படி இயங்கவில்லை; ஆர்.எஸ்.எஸ்.-பா.ஜ.க. கும்பலின் ஆணைப்படிதான் செயல்பட்டது என்பதற்கான ஆதாரம் இது என மோடியின் மீது உச்ச நீதிமன்றத்தில் குற்றம் சுமத்தப்பட்டது.

இக்குற்றச்சாட்டு தொடர்பாக நடந்த விசாரணையில், ஐ.கே. ஜடேஜா, ''மோடிக்கு நெருக்கமானவரும், போலீசு துறையின் துணை அமைச்சருமான கோர்தன் ஜடாபியா கேட்டுக் கொண்டதன் அடிப்படையில்தான் போலீசு கட்டுப்பாடு அறையில் தானும் அசோக் பட்டும் இருந்ததாக''ச் சிறப்புப் புலனாய்வுக் குழுவிடம் சாட்சியம் அளித்துள்ளார். இதோடு, வேறு பல சாட்சியங்களின் அடிப்படையில் அவ்விரு அமைச்சர்களும் கலவரம் நடந்த சமயத்தில் போலீசு கட்டுப்பாடு அறையில் இருந்ததைச் சிறப்புப் புலனாய்வுக் குழு உறுதி செய்தாலும், அவர்கள் இருவரும் கலவரத்தின்பொழுது போலீசின் நடவடிக்கையில் தலையீடு செய்ததை உறுதிப்படுத்துவதற்கான ஆதாரம் எதுவுமில்லை எனத் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. சிறப்புப் புலனாய்வுக் குழுவின் முடிவின்படி பார்த்தால், அவ்விரு அமைச்சர்களும் பொழுதைப் போக்குவதற்காகத்தான் போலீசு கட்டுப்பாடு அறையில் உட்கார்ந்திருந்ததாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

கலவரத்தின்பொழுது முசுலீம்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க முயன்ற, இந்து மதவெறி பயங்கரவாதிகளைக் கைது செய்ய முயன்ற சில போலீசு அதிகாரிகள் உடனடியாக உப்புசப்பில்லாத பதவிகளுக்கு மாற்றம் செய்யப்பட்டனர்; முசுலீம்களுக்கு எதிராகவும் இந்து மதவெறிக் குண்டர்களுக்கு ஆதரவாகவும் நடந்து

கொண்ட போலீசு அதிகாரிகளுக்குப் பதவி உயர்வு, ஓய்வுக்குப் பின்னும் பதவி நீட்டிப்பு உள்ளிட்ட பல்வேறு சன்மானங்கள் குஜராத் அரசால் வாரி வழங்கப்பட்டன. இதற்குப் பின்னுள்ள உள்நோக்கத்தைப் புலனாய்வு செய்ய மறுத்துவிட்ட சிறப்புப் புலனாய்வுக் குழு, அதிகாரிகளுக்குப் பதவி உயர்வு அளிப்பதும், அவர்களை இடமாறுதல் செய்வதும் அரசின் தனிப்பட்ட உரிமை எனக் கூறி இக்குற்றச்சாட்டையும் தள்ளுபடி செய்துவிட்டது.

அகமதாபாத் நகரில் நரோடா பாட்டியா, நரோடா காவ், குல்பர்க் சொசைட்டி ஆகிய பகுதிகளில் நடந்த முசுலீம் படுகொலைகளைத் தலைமை தாங்கி நடத்திய பா.ஜ.க. மற்றும் ஆர்.எஸ்.எஸ். கும்பலைச் சேர்ந்த பாபு பஜ்ரங்கி, ஜெய்தீப் படேல் ஆகியோருக்கும் மாநில அமைச்சர்களான கோர்தான் ஜடாஃபியா, மாயாபென் கோத்நானி மற்றும் அகமதாபாத் நகர போலீசு உயர் அதிகாரிகளான எம்.கே.டாண்டன், பி.பி. கோந்தியா ஆகியோருக்கும் இடையே நடந்த தொலைபேசி உரையாடல்கள், இக்கொலை வழக்கின் முக்கிய சாட்சியமாக குஜராத் போலீசிடம் அளிக்கப்பட்டன. ஆனால், குஜராத் போலீசோ இச்சாட்சியத்தைத் திட்டமிட்டே புறக்கணித்ததோடு, 'தொலைத்தும் விட்டது'. இது தொடர்பாக விசாரணை நடத்திய சிறப்புப் புலனாய்வுக் குழு, இத்தொலைபேசி உரையாடல்களைச் சாட்சியமாக எடுத்துக் கொள்ளாமல் புறக்கணித்ததற்கும் உள்துறை அமைச்சகத்துக்கும் எவ்விதத் தொடர்பும் கிடையாது. அச்சாட்சியத்தைப் புறக்கணித்தது கீழ்நிலை அதிகாரிகள் செய்த தவறு எனக் கூறி, மோடிக்கு எதிரான இக்குற்றச்சாட்டையும் புறக்கணித்துவிட்டது.



**இனப்படுகொலை நடந்த சமயத்தில், ஆர்.எஸ்.எஸ்.- பா.ஜ.க. கும்பலின் ஆணைப்படிதான் போலீசு செயல்பட்டது என்பதை நிரூபிக்க ஏராளமான ஆதாரங்கள் இருந்தும், சிறப்புப் புலனாய்வுக்குழு இக்குற்றச்சாட்டைத் தள்ளுபடி செய்துவிட்டது.**

குஜராத் முசுலீம் படுகொலை தொடர்பாகப் பதிவான வழக்குகள் அனைத்திலும் ஆர்.எஸ்.எஸ்., விசுவ இந்து பரிசத், பா.ஜ.க., ஆகிய இந்து மதவெறி அமைப்புகளோடு நெருங்கிய தொடர்பு வைத்திருந்த வழக்குரைஞர்கள்தான் அரசு வழக்குரைஞர்களாக நியமிக்கப்பட்டனர். இவர்கள் சாட்சியங்களை மிரட்டியதோடு, குற்றவாளிகளுக்கு ஆதரவாகச் செயல்பட்டனர். இக்குற்றச்சாட்டை விசாரித்த சிறப்புப் புலனாய்வுக் குழு, ஆர்.எஸ்.எஸ். பேர்வழிகளே அரசு வழக்குரைஞர்களாக நியமிக்கப்பட்ட போதும், அவர்கள் தொழில் தர்மத்தை மீறித் தவறாக நடந்து கொண்டார்கள் எனக் கூற முடியாது எனத் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

ஜாகியா ஜாஃப்ரி உச்ச நீதிமன்றத்தில் மோடி மீது வைத்த 32 குற்றச்சாட்டுகளுள் பலவற்றை மேலோட்டமான புலனாய்வின் அடிப்படையில் தள்ளுபடி செய்துள்ள சிறப்புப் புலனாய்வுக் குழு, மோடி மீதான சில குற்றச்சாட்டுக்களுக்குப் போதிய ஆதாரம் இருந்தாலும், அவை அவர் மீது சட்டப்படி வழக்குத் தொடுப்பதற்கு ஏற்றவையல்ல எனக் குறிப்பிட்டுத் தனது அறிக்கையை நிறைவு செய்துள்ளது.

உச்ச நீதிமன்றம், தனது மதச்சார்பின்மை முகமூடியைக் காப்பாற்றிக் கொள்ளும்நோக்கத்தோடுதான் இப்புலனாய்வுக் குழுவை அமைத்ததேயொழிய, மோடி உள்ளிட்ட இந்து மதவெறி பயங்கரவாதிகளைத் தண்டித்துவிட வேண்டும் என்ற நோக்கமெல்லாம் அதற்கு இருப்பதாகக் கூற முடியாது. ஏனென்றால், எந்த அதிகாரமும் அற்ற ஒரு விசாரணை கமிசனைப் போலத்தான் இப்புலனாய்வுக் குழு அமைக்கப்பட்டது. குறிப்பாக, இதன் தலைவராக நியமிக்கப்பட்ட ராகவன், இந்து பயங்கரவாதத்தைவிட முசுலீம் பயங்கரவாதம்தான் அபாயகரமானது என்ற ஆர்.எஸ்.எஸ். சிந்தனையைக் கொண்ட பேர்வழி. இப்படிபட்ட குழுவிடமிருந்து, ஒரு நிடுநிலையான, நியாயமான அறிக்கையை எதிர்பார்ப்பது மூடநம்பிக்கைக்கு ஒப்பானது.

சிறப்புப் புலனாய்வுக் குழு தனது அறிக்கையை கடந்த ஆண்டு மே மாதமே உச்ச நீதி மன்றத்திடம் அளித்துவிட்ட போதும், இந்த அறிக்கை இன்னும் அதிகாரப்பூர்வமாக வெளியிடப்படவில்லை. பாதிக்கப்பட்ட முசுலீம் மக்களால் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட இந்த அறிக்கையை, தெகல்கா வார இதழ்தான் கடத்தி வந்து வெளியிட்டு, அதன் மோசடித்தனத்தையும் அம்பலப்படுத்தியிருக்கிறது. இந்த அறிக்கை தொடர்பான விசாரணை உச்ச நீதிமன்றத்தில் மார்ச் மாதம் வரும் பொழுது, உச்ச நீதிமன்றம் இவ்வறிக்கையை ஏற்றுக் கொண்டால் மோடியின் மீது சுமத்தப்பட்டுள்ள பயங்கரவாதக் குற்றங்கள் சட்டபூர்வமாகவே துடைக்கப்பட்டுவிடும். மாறாக, உச்ச நீதிமன்றம் இவ்வறிக்கையை நிராகரித்துவிட்டால், மோடி இன்னொரு விசாரணை நாடகத்தைச் சந்திக்க நேரிடலாம். இதற்கு அப்பால், இவ்வழக்கில் வேறு எந்தவிதமான அதிசயமும் நடந்துவிடாது.

● செல்வம்

Owned and Published by R. SHANMUGARAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024. Editor: R. SHANMUGARAJ.

2-ஆம் பக்கத் தொடர்ச்சி

அன்று உசிலம்பட்டியிலும், பிப்ரவரி 5-ஆம் தேதியன்று கம்பம் நகரிலும், 6-ஆம் தேதி கோத்தகிரியிலும், 8-ஆம் தேதி தர்மபுரியிலும், 9-ஆம் தேதி ஒசூர் - ராம்நகரிலும், 11-ஆம் தேதி திருமங்கலத்திலும், 13-ஆம் தேதி திருப்பத்தூர் அருகே கந்திலியிலும், 14-ஆம் தேதி கடலூர் - கூத்தப்பாக்கத்திலும், 15-ஆம் தேதி விழுப்புரம் மாவட்டம் அரசூரிலும், 17-ஆம் தேதி தஞ்சையிலும், 18-ஆம் தேதி திருச்சியிலும், 19-ஆம் தேதி மேட்டூரிலும், 21-ஆம் தேதி காரைக்காலிலும், 23-ஆம் தேதி விளாத்திகுளத்திலும் பொதுக்கூட்டங்கள் நடைபெற்றன.

இந்த அரசியலமைப்புமுறை மக்களுக்கானதல்ல; மக்களுக்கான அரசை நிறுவுவதற்கான ஒரே வழி நக்சல்பாரி புரட்சிப் பாதைதான் என்பதை விளக்கி, இப்பொதுக்கூட்டங்கள் உழைக்கும் மக்களைப் போராட அறைகூவின. திரளான உழைக்கும் மக்கள் பங்கேற்புடன் நடந்த இப்பொதுக்கூட்டங்களின் இறுதியில் ம.க.இ.க. மையக் கலைக்குழு நடத்திய புரட்சிகர கலைநிகழ்ச்சியும் குறிப்பாக, ‘‘ஊழலை ஒழிக்க முடியுமா?...காளை மாட்டில் பால் கறக்க முடியுமா?’’ எனும் பாடலும் மக்களிடம் பெருத்த வரவேற்பைப் பெற்றன.



கார்ப்பரேட் கொள்ளைக்கு எதிரான இப்பிரச்சார இயக்கம் உழைக்கும் மக்களின் போராட்டமாக மாறி, தனியார்மயம் - தாராளமயம் - உலகமயம் எனும் மறுகாலனியாதிக்கத்துக்கு எதிரான எரிமலையாக சீறிப் போவது நிச்சயம் என்பதை, தொடரும் இப்பிரச்சார இயக்கம் நிரூபித்து வருகிறது.

-பு.ஜ. செய்தியாளர்கள்.

# “டாக்டர் பிநாயக் சென்னுக்கு விதிக்கப்பட்டுள்ள ஆயுள் தண்டனையை உடனே ரத்து செய்து விடுதலை செய்!”

## -மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தின் ஆர்ப்பாட்டம்-மறியல் போராட்டம்

இந்தியாவின் புகழ் பெற்ற மனித உரிமைப் போராளியும் சட்டிஸ்கர் மக்களின் அன்புக்குரிய மருத்துவருமான டாக்டர் பிநாயக் சென்னுக்கு அம்மாநில கூடுதல் அமர்வு நீதிமன்றம் விதித்துள்ள ஆயுள் தண்டனையையும் பாசிச அடக்குமுறையையும் எதிர்த்துத் தமிழகமெங்கும் பிரச்சாரம், போராட்டங்களை மனித உரிமை பாதுகாப்பு மையம் (HRPC) தொடர்ச்சியாக நடத்தி வருகிறது.



‘‘பழங்குடி மக்களுக்கு மருத்துவம் பார்த்த பிநாயக் சென் தேசத் துரோகியாம், அவருக்கு ஆயுள்தண்டனையாம்; போபாலில் 25,000 பேரைப் படுகொலை செய்த யூனியன் கார்பைடு முதலாளிக்கு 2 ஆண்டு சிறைத் தண்டனையாம், உடனே பிணை அளிப்பாம்; என்னடா ஜனநாயம் இது?’’ - என்று இந்திய அரசின் பாசிச அடக்குமுறையை அம்பலப்படுத்தி கடந்த 6.01.2011 அன்று சென்னை பிராட்வே சந்திப்பில் ம.உ.பா. மையத்தினர் ஆர்ப்பாட்ட ஊர்வலமும் சாலை மறியல் போராட்டமும் நடத்தினர்.

தமிழகம் முழுவதிலுமிருந்து 100-க்கும் மேற்பட்ட வழக்குரைஞர்களும் ஆதரவாளர்களும் கலந்து கொண்ட இந்த மறியல் போராட்டத்தில், ம.உ.பா. மையத்தின் மாநில ஒருங்கிணைப்பாளர் ராஜு, மதுரை மாவட்டச் செயலர் லயனல் அந்தோணிராஜ், துணைச் செயலர் வழக்குரைஞர் வாஞ்சிநாதன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். ஏறத்தாழ ஒரு மணி நேர மறியல் போராட்டத்துக்குப் பின்னர் வழக்குரைஞர்கள் உள்ளிட்டு 90 பேரை போலீசு கைது செய்தது.

கடலூரில் மருத்துவர் பிநாயக் சென்னை விடுதலை செய்யக் கோரி 27.1.2011 அன்று மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பாக ம.உ.பா.மையத்தின் சார்பில் ஆர்ப்பாட்டம் நடந்தது. ம.உ,பா.மையத்தின் கடலூர் மாவட்டச் செயலாளர் வழக்குரைஞர் செந்தில் தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் ம.உ.பா.மையத்தின் மாநில ஒருங்கிணைப்பாளர் ராஜு சிறப்புரையாற்றினார். வழக்குரைஞர்களும் தோழமை அமைப்பினரும் உழைக்கும் மக்களும் திரளாகப் பங்கேற்று போராட்டக் குரலை எதிரொலித்தனர்.

கோவையில், டாக்டர் பிநாயக் சென்னை விடுதலை செய்ய மறுத்துவரும் மன்மோகன்சிங் அரசை எதிர்த்து மாவட்ட ம.உ.பா. மையத்தின் தலைவர் தோழர் ராஜன் தலைமையில், செஞ்சிலுவைச் சங்கம் அருகே 10.2.2011 அன்று மாலை நடந்த ஆர்ப்பாட்டத்தில், வழக்குரைஞர்களும் தோழமை அமைப்பினரும் திரளாகப் பங்கேற்றனர்.

ம.உ.பா. மையத்தின் கோவை மாவட்டச் செயலர் தோழர் வெங்கடேசன், பு.ஜ.தொ.மு. மாவட்டச் செயலர் தோழர் விளவை இராமசாமி ஆகியோர் கார்ப்பரேட் கொள்ளைக்கும் பிநாயக்சென் மீதான கொடிய தண்டனை உள்ளிட்ட பாசிச அடக்குமுறைக்கும் உள்ள தொடர்பை விளக்கி சிறப்புரையாற்றி, உழைக்கும் மக்களைப் போராட அறைகூவினர்.

- மனித உரிமை பாதுகாப்பு மையம், தமிழ்நாடு.


## “பிரசாத லட்டு பிடிப்பதையும் அவாள்தான் செய்ய வேண்டும்!”

# ஆலயத் தீண்டாமையைப் பாதுகாக்கும் நீதித்துறை

தமிழக அரசின் இந்து அறநிலையத்துறை, திருவண்ணாமலை அருணாச்சலேஸ்வரர் கோயிலில் ஜவான், திருமஞ்சனம், நிவேத்தியம், யம்பாகி, ஓதுவார், யானைப்பாகன் உள்ளிட்ட 10 பணியிடங்களுக்குப் பணியாளர்களை நியமிப்பதற்கான வேலைவாய்ப்பு அறிவிப்பை கடந்த ஜனவரி மாதம் முதல் வாரத்தில் வெளியிட்டது. அவ்வேலைவாய்ப்பு அறிவிப்பில் திருமஞ்சனம், நிவேத்தியம், யம்பாகி ஆகிய பணியிடங்களுக்குப் பார்ப்பனர்கள் மட்டுமே விண்ணப்பிக்கும் தகுதி படைத்தவர்கள் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்தப் பணியிடங்கள் சாமி சிலைகளைத் திருமுழுக்கு (அபிஷேகம்) செய்வது மற்றும் கோயில் பிரசாதம் தயாரிப்பதற்கான பணியிடங்களாகும். பார்ப்பனர்கள் அல்லாத வேறு சாதியினர் இந்த வேலைகளைச் செய்தால், ‘புனிதம்’ கெட்டுவிடும் என்ற பார்ப்பன சாதித் திமிரையும் இந்துக் கோயில்களில் நிலவி வரும் தீண்டாமையையும் உறுதி செய்வதுதான் இந்தக் குறிப்பின் நோக்கமாகும்.

அர்ச்சகர் பயிற்சி பெற்ற மாணவர் சங்கத்தின் தலைவர் திரு.அரங்கநாதன், ‘‘திருமஞ்சனம், நிவேத்தியம், யம்பாகி ஆகிய பணியிடங்களுக்குப் பார்ப்பனர்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும் என்கிற அறிவிப்பு சாதி வேற்றுமையைத் தூண்டுவதாகவும், ஆலயத் தீண்டாமையைக் கடைப்பிடிப்பதாகவும், அரசியல் சாசனச் சட்டத்தின் 14, 16 மற்றும் 17 ஆகிய பிரிவுகளுக்கு எதிராகவும் இருப்பதால், அந்தப் பணியிடங்களுக்குப் பார்ப்பனர்கள் மட்டுமே தகுதியானவர்கள் என்ற அரசின் அறிவிப்பை நிறுத்தி வைக்க வேண்டும்’’ என்று சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தார். இந்த வழக்கை ஏற்றுக்கொண்டு விசாரித்த உயர் நீதிமன்றம், ‘‘இத்தகைய பணிகளைப் பார்ப்பனர்கள்தான் செய்ய வேண்டும் என்ற பழக்கவழக்கத்தை அரசியல் அமைப்புச் சட்டத்தின் பிரிவு 13 அங்கீகரிக்கிறது; இதன் அடிப்படையில்தான் உச்ச நீதிமன்றம் அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகும் சட்டத்திற்குத் தடை விதித்துள்ளது’’ என்ற காரணங்களைக் கூறி, வழக்கைத் தள்ளுபடி செய்துவிட்டது.





இந்து சமய அறநிலையத்துறை வெளியிட்ட வேலைவாய்ப்பு விளம்பரம். திருமஞ்சனம் உள்ளிட்ட மூன்று பணிகளுக்கு பிராமணர்கள் மட்டுமே விண்ணப்பிக்கலாம் என அரசு விதித்துள்ள நிபந்தனை வட்டமிட்டுக் காட்டப்பட்டுள்ளது.

‘‘பல காலமாக சமூகத்தின் குறிப்பிட்ட பிரிவினர் குறிப்பிட்ட வேலையைச் செய்துவருவதால் அதில் தலையிட முடியாது என 13-ஆவது பிரிவு கூறுகிறது. ஆனால், அரசால் சம்பளம் வழங்கப்படும் ஒரு வேலை அனைத்துச் சாதியினருக்கும் பொதுவானது என்பதுதான் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் விதி. இதற்கு எதிராக இது இருப்பதால், இந்தப் பிரச்சினையில் பழக்கவழக்கம், வழக்கு மற்றும் வழக்காறு செல்லுபடியாகாது. மேலும், வேலைக்கு ஆட்களை நியமிப்பது மதம் தொடர்பானது அல்ல. அது மதச்சார்பற்ற அரசின் அதிகார வரம்புக்கு உட்பட்டது’’ என இந்த ஆலயத் தீண்டாமைக்கு எதிராக எடுத்து வைக்கப்பட்ட வாதங்களை நீதிமன்றம் ஒதுக்கி தள்ளிவிட்டது.

பழக்கவழக்கங்கள், வழக்கு மற்றும் வழக்காறின்படி, பார்ப்பனக் கும்பல் சாமிக்கு மணியாட்டுவதைத் தவிர, வேறு எந்த வேலையிலும் நுழையக்கூடாது. ஆனால், அவர்கள் தமக்குச் சாதகமானது என்பதால், கடல் கடந்து வேலைக்குப் போவதைக் கூட இன்று மிலேச்சத்தனமாகப் பார்ப்பதில்லை.

சிறிய, வரும்படியில்லாத கோயில்களில் பார்ப்பனர் அல்லாத சாதியினர் அர்ச்சனை செய்வதையும் அபிஷேகம் செய்வதையும் பொறுத்துக் கொள்ளும் பார்ப்பனக் கும்பல், தமது கட்டுப்பாட்டில் உள்ள வரும்படி அதிகமுள்ள கோயில்களில் சாமி சிலைகளைப் பார்ப்பனர் அல்லாத சாதியினர் தொட்டால் தீட்டாகிவிடும்; பழக்கவழக்கங்களை மீறுவதாகும் எனக் குதிப்பது பச்சையான சந்தர்ப்பவாதம் தவிர வேறில்லை. அக்கோயில்களைத் தமது பரம்பரைச் சொத்தாகச் சுருட்டி வைத்துக் கொள்ள வேண்டும் என்ற தீய உள்நோக்கம் தவிர வேறில்லை. நீதிமன்றம் மட்டுமல்ல, தனது அரசை சூத்திர அரசென்று கூறிக் கொள்ளும் தி.மு.க. அரசும் பார்ப்பனக் கும்பலின் இந்த அயோக்கியத்தனத்தைத் தோலுரிக்க மறுக்கின்றன. மாறாக, ஆகமம், வழக்காறு போன்ற பார்ப்பன பசப்பல்களுக்குக் கோழைத்தனமாக அடிபணிந்து, ஆலயத் தீண்டாமையை உயர்த்திப் பிடிக்கின்றன.